செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# சிந்தாமணி

ரூ 5/50

சிந்தாமணி

THE MOST INFLUENTIAL TAMIL WEEKLY WITH THE LARGEST CIRCULATION IN SRI LANKA

CHINTHAMANI

இல 1055 18—3—1990 சுக்கில பங்குனி 5 உ 1990 மார்ச் 18 ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 20 ★ ★ ★

# இந். படை விலகியதும் மா. சபை கலைப்பு

## இந்தியா வற்புறுத்த வரதரே கலைக்கச் சொல்வாராம்

கொழும்பு, மார்ச் 17

இந்தியப் படை முற்றாக வெளியேறியதும் வடக்கு கிழக்கு மாகாண சபை கலைக்கப்படும். சட்டப் பிரச்சினை களுக்கு இடமில்லாமல் முதல்வர் வரதராஜப் பெருமாளே சபையைக் கலைக்குமாறு ஆளுநரைக் கேட்டுக் கொள்வார். அப்படிக் கேட்குமாறு இந்திய அரசு அவரை வற்புறுத்தும்.

இலங்கை அரசாங்க உயர்மட்ட வட்டாரங்களிலிருந்து சிந்தாமணிக்கு கிடைத்த அந்தரங்கத் தகவல் இது.

இந்தியப் படையினர் சுமார் 4,500 பேர் மட்டுமே இப்போது திருகோணமலையில் துறைமுகப் பகுதியிலும, யாழ்ப்பாணத்தில் காங்கேசன் துறை மற்றும பலாலி விமான நிலையப் பகுதிகளிலும இருக்கிறார்கள்.

இவர்கள் இம்மாதம 31ஆம திகதிக்குள் வெளியேறி விடுவார்கள். அது நிச்சயமாகி விட்டது.

### சீனாவில் கடந்த வருடம் 31 பேருக்கு மரண தண்டனை

பீக்கிங, மார்ச் 17.

சீனாவில் ஊழல் குற்றச்சாட்டுகளின் பேரில் கடந்த வருடம 31 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இச்செய்தியை சீனத் தினசரி வெளியிட்டிருக்கிறது.

சீனாவில் கடந்த வருடம ஊழல் ஒழிப்பு இயக்கம முடுக்கி விடப்பட்டது. 9,000 பேர் தண்டிக்கப்பட்டார்கள்.

சுமார் 20,800 பேர் கைது செய்யப்பட்டார்கள். 1,16,700 வழக்குகள் விசாரிக்கப்பட்டன.

இதே வேளை கசிப்பு காய்ச்சினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் சமீபத்தில் மூவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

கசிப்பு அருந்தியதால் 20 பேர் மரணமானார்கள். இச்சமபவம தென் மாநிலமான குவாங் டொங்கில் நிகழ்ந்திருக்கிறது.

(ண)



### உள்ளத்தில் கள்ளம் புகுந்ததோ?

உதய சூரியன் ஒத்த முகத்திலே உணர்ச்சி ரேகையேன் நதிப்ப தேன்?
இதயம தன்னிலே கள்ளம புகுந்திட இன்ப வண்டொன்று அரித்த தோ?
புதையல் பெற்றதை இழந்த பாங்கிலே பொருமுகின்றபுண் மனத்து டன்
கதைகள் பேசிடும கண்கள் சோர்வுறக் கலங்கி நிற்பதும நியாய மோ?

### வை. எம். எம். ஏ. பேரவை மாநாடு

அகில இலங்கை வை எம எம ஏ பேரவையின் 40ஆவது வருடாந்த மாநாடு இன்று 18 ஆம திகதி காலை தெமட்டகொடையில் உள்ள வை எம எம ஏ பேரவை தலைமையகத்தில் நடை-

இரத்தினத் துவீபமெங்கும் ...

W.L. ராஜரத்தினத்தின்

FINAL SEMINAR

உதய சூரியன் ஒத்த முகத்திலே உணர்ச்சி ரேகையோன் றதிப்ப தேன்?
இதயம தன்னிலே கள்ளம புகுந்திட இன்ப வன்டொன்று அரித்த தோ?
புதையல் பெற்றஅதை இழந்த பாஙகிலே பொருமுகின்றபுண் மனத்து டன்
கதைகள் பேசிடும கண்கள் சோர்வுறக் கலங்கி நிற்பதும நியாய மோ?

வருடாந்த மாநாடு இன்று 18 ஆம திகதி காலை தெமட்டகொடையில் உள்ள வை எம எம ஏ பேரவை தலைமையகத்தில் நடை

(2 ஆம பக்கம பார்க்க)

களிலும இருக்கிறார்கள்.

இவர்கள் இமமாதம 31ஆம திகதிக்குள் வெளியேறி விடுவார்கள். அது நிச்சயமாகி விட்டது.

(2 ஆம பக்கம பார்க்க)

இந்தியப் படையினர் வெளியேறியதும்

# கிழக்கில் பாது காப்பு மறு சீரமைக்கப்படும்

கொழும்பு, மார்ச் 17

இந்தியத் துருப்புக்கள் இம மாத இறுதியில் இந்தியா திருமபிய பின்னர், கிழக்கு மாகாண பாதுகாப்பு நிலைமைகள் மறுசீரமைக்கப் படும.

சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர்.

திருகோணமலைக்கு நேற்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவும இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹெமில்டன் வனசிங்காவும,

பொலீஸ்மா அதிபர் திரு ஏர்னஸ்ட் பெரேராவும பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும சென்று பாதுகாப்பு நிலைமைகளைப் பரிசீலனை செய்தனர்.

நிலைமைகள் தொடர்பாக

(6ஆம பக்கம பார்க்க)

# அரசாங்க வெற்றிடங்கள் உடன் நிரப்ப நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 17

அரசாங்க சேவையிலுள்ள சகல வெற்றிடங்களும உடனடியாக நிரப்பப்படும.

அரசாங்கம ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான ஆரமப நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டு வருகிறது.

அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், அரச வங்கிகள் ஆகியவற்றிலுள்ள சகல பதவி வெற்றிடங்கள் தொடர்பான விவரங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சு இதுபற்றி கடந்த புதன் கிழமை அறிவித்திருக்கிறது.

பரீட்சை ஆணையாளர் நடத்தும போட்டிப் பரீட்சையில் பெறப்படும புள்ளிகளின் அடிப் படையில் இந்த நியமனங்களை

(2 ஆம பக்கம பார்க்க)

# மத்திய மாகாணத்தில் பொலீஸ் சேவை கமிஷன்

## இரண்டொரு தினங்களில் இயங்கும்

கண்டி மார்ச் 17

மத்திய மாகாணததில் இன்னும இரண்டொரு தினங்களில் பொலீஸ சேவை ஆணைக் குழு இயங்கத் தொடங்கும.

இதன் அடிப்படையில் 20 முதல் 30 பொலீஸ் நிலையங்கள் அமைக்கப்படும.

இப்போது இருக்கும பொலீஸ் நிலையங்களுக்குத தலா நூறு பொலீஸார் திரட்டப்படுவார்கள.

மத்திய மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே இன வகிதாசார அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள். புதிய பொலீஸ் நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன,

இந்தத தகவலை மத்திய மாகாண முதலமைச்சர் திரு. டபிளியூ பீ பீ திஸாநாயக்க மத்திய மாகாண சபைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

எதிரணி அமைப்பாளரான சட்டத்தரணி திரு லால் விஜய நாயக்க கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார், கண்டி குயீன்ஸ் ஹோட்டல் மண்டபத்தில் கூட்டம நடைபெற்றது.

(ண-017)

அரச ஊழியர்களுக்கு ஒரே முறையில்

# 6 மாதகால சம்பளம் கஷ்ட நிவாரணக் கடன்

கொழும்பு, மார்ச் 17

அரச ஊழியர்கள் ஒரே முறையில் 6 மாத கால சமபளத்தைக் கஷ்ட நிவாரண கடனாகப் பெறலாம.

அரசாங்கம இதற்கான முடிவை எடுத்திருக்கிறது.

நிதிப் பிரச்சினையால் அவதிப்படும அரச ஊழியர்களுக்கு நிவாரணம வழங்கவே இந்தத் திட்டம.

5 லட்சத்துக்கும மேற்பட்ட அரச ஊழியர்களுக்கு இக்கடன் வசதி கிடைக்கும.

பொது நிர்வாக ராஜாங்க அமைச்சின் செயலாளர் ஜனாப் எம என் ஜுனைத் இதனைத் தெரிவித்தார்.

மார்ச் 1 ஆம திகதி முதல் இந்தக் கடன் திட்டம செல்லுபடியாகும,

அரச சேவையிலுள்ள நிரந்தர தற்காலிக ஊழியர்கள் சகலரும இக்கடனைப் பெறலாம.

இளைப்பாற்றச் சமபளம உடனான ஐந்து வருடத்துக்கும மேற்பட்ட சேவாகாலம உள்ள ஊழியர்களுக்கும பிணையா

(2 ஆம பக்கம பார்க்க)


W. ராஜரத்தினத்தின்

FINAL SEMINAR

MATHS APRIL - 90 O/L SCIENCE

| நகரம் | மண்டபம் | திகதி | பாடம் |
| --- | --- | --- | --- |
| கொழும்பு | இராமகிருஷ்ண (வெள்ளவத்தை) | 20-3-90 | கணிதம் |
| கொழும்பு | இராமகிருஷ்ண (1250 ஆசனங்கள்) | 23-3-90 | விஞ்ஞானம் |
| கண்டி | இந்து கலாச்சார மண்டபம் (650 ஆசனங்கள்) | 24-3-90 | விஞ்ஞானம் |
| குருநாகல் | E P.I. மண்டபம் (ஹெவ்புல்லா அருகில்) | 25-3-90 | விஞ்ஞானம் |

ALEXSANDRA
(TOWN HALL அருகில்)

E.P.I

O/L - 90 DEC. வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.

கணிதம் (வெள்ளி 3 PM - 5 PM)

இன்னும் சில வாரங்களுக்கு அனுமதி ஏற்கப்படும்

விஞ்ஞானம் (திங்கள் 3 PM - 5 PM)

138, 115 பஸ்களில் வரமுடியும்

குறிப்பு

● NOTES முழுவதும் படிக்க முடியாத நிலையா? இறுதி நேரத்தில் படிக்க வேண்டியவற்றை இரண்டே நாட்களில் தயாராக்க எனது அநுபவத்தை ஒரு கைநூலாக்கி கருத்தரங்கிலே வழங்குகின்றேன். (SEMINAR இல் கலந்துகொள்பவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்)

● பரீட்சைக்கு வரப்போகும் வினாக்களின் தீர்க்கதரிசனத்தை பரீட்சையின் பின் ஒப்பிட்டு உணருங்கள்

● டிக்கட்டுகள் மண்டபவாயிலில் (50/=) கைநூல் உட்பட.

கண்டியில்

O/L 90 DEC மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான பாடங்களுக்கு புதிய அனுமதிகள் ஏற்றுக்கொள்ள பட மாட்டாது. GROUP II தொடங்கும் வரை காத்திருக்கவும்

GUNAM DESIGNERS KANDY


ஆகக் கூடுதலான விற்பனையுள்ள தமிழ் வார இதழ் சிந்தாமணி தான்

# சிந்தாமணி
# சிறு விளம்பரங்கள்

## மணமகன் தேவை

நல்லொழுக்கமும் அழகும் உடைய முஸ்லிம் பெண்ணுக்கு முஸ்லிம் மணமகன் தேவை- தகுதிக்கு ஏற்ப சீதனம் வழங்கப்படும்- வெளிநாட்டில் சாரதியாக அல்லது தையல்காரராக தொழில் பெற்றுத்தர வாய்ப்புண்டு- விளம்பரதாரர் இலக்கம்- மா-18-02 மே/பா சிந்தாமணி, த பெ 1257 கொழும்பு-

## கார் டிறைவிங் பயிற்சி

கொழும்பில் உள்ளோர் மட்டும் டிறைவிங் பழக விரும்பினால் விபரங்களுக்கு விலாசத்தை அனுப்பவும்-

94/5Vivekananda Hill Colombo 13.

வி இ 032521

## குமரா பழுது பார்த்தல்

குமரா சேவிஸிங், லென்ஸ் கிளீனிங், பிளஷ் கன் பழுது பார்த்தல் செய்யப்படும்- கொழும்பு கிப்ட் ஹவுஸ், 42, கெய்சர் வீதி (பொலீஸ் நிலையம் எதிரில்) புறக்கோட்டை-

Colombo Gift House 42, Keyzer St. Pettah.

வி இ 032632

## ஆங்கில டைப்ரைட்டர்

ஆங்கில டைப்ரைட்டர்கள் விற்பனைக்குண்டு- விலை ரூ 2900/- க்கு மேல்-

Colombo Gift House 42, Keyzer St. Pettah.

வி இ 032632

## சட்டக் கல்வி போதனை

சட்டக் கல்லூரி பிரவேசப் பரீட்சை- சனி, ஞாயிறு நாட்களில் போதனை- தொடர்பு கொள்ளுங்கள் 45/1, அல்பேட் பிளேஸ்,

## மணமகள் தேவை

ஓய்வு பெற்ற அரச ஊழியரும், தாரமிழந்தவரும், குடும்பப் பொறுப்புகளில் விடுபட்டவருமான நல்லொழுக்கமுள்ள திடகாத்திரமான, 58 வயதுடைய ஒரு முஸ்லிம் வாழ்க்கைத் துணையொன்றைத் தேடுகிறார்- நல்லொழுக்கமுள்ள, மதப்பற்றுடைய சிவந்த நிறமுள்ள வயது 28க்கும் 40 க்குமிடைப்பட்ட ஓரளவு படித்த மங்கையொன்றை விரும்புகிறார்- குடும்பப்பாரமற்ற, தாரமிழந்த விதவைகளும் விண்ணப்பிக்கலாம்- இருப்பிட வசதிகள் அவசியம்- ஏனைய வசதிகளையும் குறித்த விபரங்களடங்கிய விளக்கத்துடன் விண்ணப்பிக்கவும்- இரகசியம் பேணப்படும்- விளம்பரதாரர் இலக்கம் மா-18-03. மே/பா சிந்தாமணி, த பெ 1257, கொழும்பு-

கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட அரசாங்கத் துறையில் தொழில் புரியும், மாதம் 2800/- ரூபா வருமானம் உள்ள, விவாகரத்து பெற்ற தீய பழக்கம் இல்லாத, மார்க்க பக்தி உள்ள முஸ்லிம் மணமகனுக்கு மணமகள் தேவை- மணமகள் மார்க்க பக்தி உள்ளவராகவும், நல்லொழுக்கம் உள்ளவராகவும், 40 வயதுக்கு குறைந்தவராகவும், வீடு வசதி உள்ளவராகவும் இருக்க வேண்டும்- சீதனம், நகை, தேவையில்லை கணவனை இழந்த விதவைகளும் விவாகரத்து பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்- உண்மையான முழு விபரங்களுடன் முதல் கடிதத்தில் விண்ணப்பிக்கவும்- விளம்பரதாரர் இலக்கம்- மா-18-01 மே/பா சிந்தாமணி, த பெ 1257, கொழும்பு-

## இலிகிதர்கள் தேவை

முன்னணி புறக்கோட்டை வர்த்தக நிறுவனத்திற்கு கணக்கியல் இலிகிதர்கள் தேவை- தகைமை, முன் அனுபவ விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்- விளம

## காணி விற்பனைக்கு உண்டு

கடுகஸ்தொடை முஸ்லிம் சூழலில் பெரிய தபால் கந்தோர் அருகில் பிரதான பாதையருகே நீர், மின்சாரம் சகல வசதிகளும் உடைய 19½ பர்ச்சஸ் காணி உடன் விற்பனைக்குண்டு- தொடர்பு கொள்ளவும்- டாக்டர் மொஹிதீன். மொடர்ன் கிளினிக், மடவளை பஸார்-

வி இ 031695

## ஒலிபெருக்கி விற்பனை

அம்பிலிபயர்கள், ஹோர்ன், யுனிட், மைக் ஸ்ராண்ட், விற்பனைக்கு உண்டு- விலை ரூ- 950/- க்கு மேல்-

Colombo Gift House 42, Keyzer St. Pettah.

வி இ 032632

## விற்பனைக்கு உரியவை

மாவனல்லையில் நீர், மின்சாரம், ஆறு, பாதை, பள்ளிவாசல், பாடசாலை வசதிகளுடன் காணிகள் மிகவும் மலிவு விலையில் விற்பனையாகின்றன- மாவனல்லை பஸ் நிலையத்தை ஒட்டி புதிய கட்டிட தொகுதியில் கடைகள் குத்தகைக்கு விற்பனைக்கு உண்டு- விசாரணைகள்- விளம்பர ஏஜன்ட் விஸ்வாச, 12, பஸ்நிலையம், மாவனல்லை-

வி-இ 2148

“மொன்டிசோரி” கஸட்டுகள், “புட்டேன்” புத்தகங்கள், “இமிடேஷன்” நகைகள், சிறுவர் கட்கும் பெண்களுக்கும் தேவையான ஆடைகள் சகாய விலையில் விற்கப்படும்- “பேபி ஸ்பொட்”, (கமுனு தியேட்டருக்கு எதிரில்), 83ஏ 1/2, நீர்கொழும்பு ரோட், வத்தளை-

வி இ 032966

## வாகனங்கள்

## ஆங்கில பேச்சுப் பயிற்சி

ஆங்கிலத்தில் சுயமாகப் பேசுவதற்கு பயிற்சி வழங்கப்படும்- வகுப்புகளும், இலக்கண வகுப்புகளும்- பாத்திமா இங்லிஷ் இன்ஸ்டிடியூட், 143-1/1, முதலாம் டிவிஷன், மருதானை சென்ட்ரல் தியேட்டர் அருகே-

வி இ 032806

## ஜீ சி ஈ சா/த விஞவிடை

ஜீ சி ஈ (சா/த) பரீட்சையை முன்னிட்டு மாதிரி வினாத்தாள்களை உள்ளடக்கிய கணித வினாவிடைகள் “பரீட்சை நோக்கு” என்ற பெயரிலும் இன்னும் (சா/த) கணிதம், “விரைவு மீட்டற் பயிற்சி” என்ற பெயரிலும் வெவ்வேறாக வெளிவந்துவிட்டன விலை- பரீட்சை நோக்கு 7/50, விரைவு மீட்டற் பயிற்சி 22/- தபாலிலும் பெறலாம் தொடர்பு கொள்ளவும்-

Rifkan Jameel Razeena house main street Gandara

வி இ 032682

## ஆங்கில வகுப்புகள்

ஆங்கில மொழி, பேச்சு, இலக்கணம் மும்மொழிகளில் வார இறுதி நாட்களில் அனுபவமிக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்படும் 24-03-90 இல் வகுப்புக்கள் ஆரம்பமாகும் குறிப்பிட்டளவு இடங்களே உண்டு- ஆங்கில தட்டச்சு (டைபிங்) விசேட பெண் ஆசிரியை மூலம் எல்லா நாட்களிலும் கற்பிக்கப்படும்- பளீல்ஸ் இன்ஸ்டிடியூட், 408-2/1 2 ம் மாடி, ஒராபி பாஷா வீதி, மருதானை (பொலீஸ் முன்னால்)-

வி இ 032693

## குத்தகைக்கு உண்டு

வீடொன்று இரண்டு வருடக் குத்தகைக்கு உண்டு- ஒரு மாத வாடகை ரூபா 1500/- இரண்டு

## மலையாள மந்திர வசியம்

மாந்திரீகத் துறையில் நமது நாட்டிலும் வெளிநாடுகளிலும் உண்மை சேவை புரியும் என்னிடம் வாருங்கள்- குடும்ப பிணக்கா, திருமணத் தடையா, வியாபார வசியங்களா, காதல் 24 மணிநேர வசியங்களா, தீராத நோயா, பேயா, சூனிய நிவர்த்தியா தெளிவான கம்பியூட்டர் ஜாதக விளக்கமா, ஜோதிட மாந்திரீக தத்துவஞானி, பி கே சாமி, 33, தினச்சந்தை நுவரெலியா- தொலைபேசி- 052/2508

வி இ 1066

## யந்திரம் மந்திரம்

உங்களுடைய தேவைகளை என்னால் பூர்த்தி செய்து தர முடியும்- பொருத்தமான திருமணம் கைகூடவும், காதலன் - காதலியின் மனதை வெல்லவும் வெறுத்தவர்களை நீக்கி விரும்பியவர்களை வசப்படுத்தவும், எந்தக் கொடூர நபரையும் அடக்கவும், விரும்பியவர்களை வசப்படுத்திக் கொள்ளவும், கணவன்- மனைவி ஒற்றுமையாக இருக்க, வியாபாரம், விவசாயம் கைத்தொழில் முன்னேற்றம் அடையவும் எந்த வகையான மன வேதனையோ கவலையோ, பிரச்சினையோ இருந்தால் எழுதிக் கேளுங்கள் இல்லாவிட்டால் சந்தியுங்கள்- இரகசியம் வெளியிடப்பட மாட்டாது- பி எம் திசாநாயக்கா, இல- 55, மிகுந்து மாவத்தை கொழும்பு-12 தொலைபேசி- 433955 சந்திக்கும் நேரம் காலை 8 மணி 12 மணி வரை-

வி இ 032729

## பல்வகை வசியங்கள்

சகல காரியங்களுக்கும் மாந்திரீகம் சர்வமத சன்மார்க்க புனித புராதன தெய்வீக வைத்திய மஹாமாந்திரீக நிபுணர், சித்த ஆயுர்வேத வைத்திய பண்டிட் (இந்தியா) அக்குபங்சர் ஹோமியோபதி, விஷேட மனநோய், வைத்திய, மலையாளத்திலேயே மாந்திரீக சித்தர் என அழைக்கப்படும் அரசாங்க சுகாதார அமைச்சினால் பதிவு செய்யப்பட்ட டாக்டர் மந்திரயோகியிடம் விரும்பிய, மாந்திரீக வைத்தியம், வசியம் செய்து கொள்ள வர முடியாதவர்கள் வெளிநாட்டில் இருப்பவர்கள் முதல் கடிதத்திலேயே விருப்பங்களை எழுதி அனுப்பி மாந்திரீக மருந்துப் பொருட்களை தபாலில் பெற்று விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம்- டாக்டர் மந்திரயோகி, குரு சக்தி நிலையம், கல்லடி, மட்டக்களப்பு-

(Batticaloa) Sri Lanka

## இந். படை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே ஏப்ரல் மாதத்தில் வடக்கு – கிழக்கு மாகாண சபை கலைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

13ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டத்தின்படி மாகாண சபையைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை.

ஆளுநர்தான் மாகாண சபையைக் கலைக்கலாம். அவரும் முதலமைச்சர் ஆலோசனை கூறினால் மட்டுமே கலைக்கலாம்.

ஜனாதிபதி வேண்டுமானால் மாகாண சபை அரசமைப்புக்கு அமைவாகச் செயற்படும் நிலையில் இல்லை என்று கண்டதும் மாகாண சபை நிர்வாகத்தைப் பொறுப்பேற்கலாம்.

மாகாண சபையின் சட்டவாக்க அதிகாரம் நாடாளுமன்றத்திடம் இருக்கும்.

இந்த நிலை ஏற்பட்டாலும் கூட மாகாண சபை இருக்கவே செய்யும். அது கலைக்கப்பட்டதாகக் கொள்ள முடியாது. புதிதாகத் தேர்தல் நடத்தவும் முடியாது.

மாகாண சபையைக் கலைப்பதானால் இரண்டே இரண்டு வழிகள்தான் உள்ளன.

ஒன்று — ஜனாதிபதிக்கு மாகாண சபையைக் கலைக்கும் அதிகாரம் வழங்கும் வகையில் 13ஆவது அரசமைப்புத் திருத்தம் மேலும் திருத்தப்பட வேண்டும்.

அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் தேவை.

இரண்டு — மாகாண சபை முதல்வர் மாகாண சபையைக் கலைக்குமாறு ஆளுநருக்கு ஆலோசனை கூற வேண்டும்.

இப்படி சட்ட மா அதிபர் திணைக்களத்தினர் அரசாங்கத்துக்கு தெளிவுபடுத்தியுள்ளனர் என்று அறிய வருகிறது.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் அரசாங்கத்துக்கு இல்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட மற்றக் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கினால்தான் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கும்.

மற்றக் கட்சிகளின் தயவை நாடுவதைவிட இந்தியாவின் உதவியைக் கோருவதே நல்லது என்று அரசாங்கம் கருதுகிறது.

ஈ பி ஆர் எல் எப் செயலாளர் நாயகம் திரு கே பத்மநாபா உட்பட ஈ பி ஆர் எல் எப் உறுப்பினர்கள் மற்றும் ஈ என் டீ எல் எப் உறுப்பினர்கள் பலரை இந்திய அரசாங்கம் அக

இடம் தெரியாது, எனினும் இந்திய அரசாங்கமே அவரைப் பாதுகாப்பாக வைத்திருக்கிறது என்பது பகிரங்க ரகசியம்.

எனவே இந்திய அரசு விரும்பினால் முதல்வர் வரதராஜப் பெருமாளைக் கொண்டு எதையும் செய்விக்கலாம்.

வடக்கு, கிழக்கு மாகாண சபையைக் கலைப்பது பற்றிய சட்டச் சிக்கல்களிலிருந்து விடுபடுவதற்கு இந்திய அரசின் உதவியையே இலங்கை அரசு கோரியிருப்பதாக அறிய வருகிறது.

தனது நல்லெண்ணத்தைக் காட்டுவதற்காக இந்திய அரசு இலங்கை அரசின் கோரிக்கைக்கு இணங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

எனவே வடக்கு, கிழக்கு மாகாண சபையைக் கலைக்குமாறு ஆளுநருக்கு கடிதம் எழுதும்படி இந்திய அரசு திரு வரதராஜப் பெருமாளை வற்புறுத்தும் என்று அரசாங்க உயர் மட்ட வட்டாரங்கள் சிந்தாமணிக்குத் தெரிவித்தன.

திரு வரதராஜப் பெருமாள் இந்திய அரசு சொன்னபடி செய்யாவிட்டால் அவர் இந்திய அரசின் பாதுகாப்பை இழக்க நேரிடும்.

ஒரிஸ்ஸா முகாமகளில் உள்ள அகதிகளின் நிலைமை கேள்விக் குறியாகிவிடும்.

எனவே திரு வரதராஜப் பெருமாள் வடக்கு, கிழக்கு மாகாண சபையைக் கலைக்குமாறு ஆளுநருக்கு கடிதம் எழுதி இந்த விவாதத்துக்கு முற்றுப் புள்ளி வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்பாராத விதமாக கடைசி நேரத்தில் இந்த ஏற்பாட்டில் ஏதாவது பிசகு நேருமானால் இலங்கை அரசு சட்டத் திருத்த முயற்சியை துரிதமாக மேற்கொள்ளும். (உ)

## தேவி லால் பதவி விலகினார்

புதுடில்லி, மார்ச் 17

இந்தியப் பிரதிப் பிரதமர் தேவிலால் கடந்த வெள்ளிக்கிழமை எதிர்பாராதவிதமாக திடீர் என பதவி விலகினார்.

தேவிலால் (வயது 75), பிரதமர் வி பி சிங்கின் தேசிய முன்னணி அரசில் சர்ச்சைக்குரிய ஒரு முக்கிய அமைச்சராக இருந்து வந்தார்.

அவர் கடந்த நவம்பர் பொதுத் தேர்தலில் ஜனதா தள் கட்சி வெற்றி பெறும் வரை ஹரியானா மாநில முதல்வராகப் பதவி வகித்து வந்தார்.

பரீட்சை- சனி, ஞாயிறு நாட்க ளில் போதனை- தொடர்பு கொள் ளுங்கள் 45/1, அல்பேட் பிளேஸ், தெஹிவளை-

வி இ 032487

## சேல்ஸ்மன் தேவை

பாதணிகள் வியாபாரம் நன்கு தெரிந்த ஒரு சேல்ஸ்மன் தேவை- அடையாள அட்டையுடன் நேரில் வரவும்-

Naflityas No.86 Galle Road Moratuwa

வி இ 032816

நல்ல அனுபவம் உள்ள பெண்வி, ஒப்ட் அயிட்டம தெரிந்த சேல்ஸ்மேன் தேவை- நேரில் வரவும்- வரும் பொழுது அடையாள அட்டை, அத்தாட்சி பத்திரங்களுடன் வரவும்- ரூப வாஹினி ரேடியோ டிரேட் சென்டர், 105, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-11-

வி இ 032100

கொழும்பில் பிரபல கடை- ஒன்றுக்கு விற்பனையாளர் தேவை- பெயின்ட், பி பி சி குழாய்கள் மற்றும் ஹார்ட்வெயார் விற்பனை யில் அனுபவமும் ஆங்கிலத்தில் பில் எழுதக் கூடிய நபர் உடனடி யாகத் தேவை- முன் வேலை செய்த ஸ்தாபனத்தின் சான்றித ழுடனும் எதிர்பார்க்கும் சம்பளத் துடனும் விண்ணப்பிக்கவும்- விளம்பரதாரர் இலக்கம் 32-961, மே/பா சிந்தாமணி, த பெ 1257, கொழும்பு-

பிடவை, சாப்பு சாமான்கள் சப்பாத்து இவைகளில் விற்பனை செய்வதில் நன்கு அனுபவமுள்ள சேல்ஸ்மன்கள் தேவை [illegible] தொடர்பு கொள்ளவும். "ஸில்வராட் ரேட் சென்டர் 17-19 மெயின் வீதி, [illegible] தொலைபேசி- 037,41237-

வி-இ 1216

யல இலிகிதர்கள் தேவை- கதைமை, முன் அனுபவ விபரங்க ளுடன் விண்ணப்பிக்கவும்- விளம் பரதாரர் இலக்கம் 32-962, மே/பா சிந்தாமணி, த பெ 1257, கொழும்பு-

## ஆசிரியர்கள் தேவை

ஆங்கிலம், சிங்களம் தெரிந்த 35 வயதிற்கு மேற்பட்ட முஸ்லிம் பெண் உடனே தேவை- பிள்ளை களுக்கு டியூஷன் கொடுக்கவும் விசேஷமாக ஓதிக் கொடுக்கவும் வேண்டும்- சம்பளம் 2500/- உணவும் தங்க வசதியும் உண்டு. 7. சென்ட் மேரிஸ் ரோட், மட் டக்குளி-

வி இ 032970

## தேவைகள்

தையல் வேலைக்கு பெண்கள் தேவை- திறமைக்கு தகுந்த சம்ப ளம்- நேரில் வரவும்- யுனி வேல்ட் கார்மன்ட்ஸ், 184, புதிய சோனகத் தெரு, கொழும்பு-12-

வி இ 031010

அரிசி சில்லறை வியாபாரத்தில் அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை சமையல் வேலைக்கும் ஆட்கள் தேவை அடையாள அட் டையுடன் நேரில் வரவும் மாட் அன் எக்ஸ்சேன்ஜ் லிமிடெட் 33, சென் ஜோசப் வீதி, கிராண்ட்பாஸ், கொழும்பு-14-

வி இ 032680

நஷனல், ஜெ வி சி வீடியோ கெமராக்கள் உடனடியாகத் தேவை- நேரில் மாலை 5 மணிக் கும் 7 மணிக்குமிடையில் வரவும்- கிரேயோன் ஸ்டுடியோ 69, கொலன்னாவ ரோட், தெமட்ட கொடை, தொலைபேசி- 695890

வி இ 032817

## வாகனங்கள்

யமஹா 100 புதிதாக கொள் வனவு செய்யப்பட்டது- சிறந்த நிலையில் உண்டு- 11500 கி மீ வரை ஓடியது- 79, யூனியன் பிளேஸ், கொழும்பு-2- தொலை பேசி- 432934 ஞாயிற்றுக்கிழமை களில் காலை 8-30 மணி முதல் பி ப 1 மணிவரை- வார நாட்க ளில் மாலை 6-00 மணிவரை-

வி இ 032963

காவன் 50 ஸ்ரீ 1400 தொடர் நல்ல நிலையில் உண்டு- இல 79, யூனியன் பிளேஸ், கொழும்பு-2- தொலைபேசி- 432934- ஞாயிற் றுக்கிழமைகளில் காலை 8-30 முதல் பி ப 1-00 வரை- வார நாட்களில் மாலை 6-00 வரை-

வி இ 032964

## கமரா உபகரணம் தேவை

புதிய அல்லது சிறிது பாவித் துள்ள கமராக்களுக்கும் உபகர ணங்களுக்கும் நியாயமான விலை கொடுக்கப்படும்- "கொழும்பு கிப்ட் ஹவுஸ்" 42, கெய்சர் வீதி, (பொலீஸ் நிலையம் எதிரில்) புறக் கோட்டை-

Colombo Gift House

வி இ 032632

## பேஷ் இமாம் தேவை

மாத்தளை, உள்பத்தபிட்டிய ஜும்மா பள்ளிக்கோர் பேஷ் இமாம் தேவை- ஐந்து நேர தொழுகை நடத்தவும், ஜும்மா, மத்ரஸா நடத்தவும் விரும்பக் கூடி யவர் நேரிலோ கடித மூலமோ தொடர்பு கொள்ளவும்- ஜனாப் ஏ கே நிஸாப்தீன் 20 கொங்காவலை மார்கட் மாத் தளை

வி-இ 2044

வீடொன்று இரண்டு வருடக் குத்தகைக்கு உண்டு- ஒரு மாத வாடகை ரூபா 1500/- இரண்டு வருட முற்பணம் தேவை- லேவர் ணன் சொய்ஸா, இல 90, விஸ் வைக் வீதி, மட்டக்குளி-

வி இ 032957

## பள்ளிவாசல் பாய்கள்

பள்ளிவாசல் பாய்கள் மற்றும் சகலவித தேவைகளுக்கும் பாய் கள் செய்து கொடுக்கப்படும்- எஸ் தனகரட்ணம், கலா பாய் தொழிற்சாலை, பகத்தலுவ, கிரி கத்தேனை-

வி இ 031687

## ஆடைகள் தைத்தல்

பிறந்தநாள், திருமணம், பெரு நாட்களில் பெண்கள், சிறுவர்கள் அணியும் விசேட உடைகளும "சல்வார் கமீஸ்", பாடசாலை "யூனிபோம்", "கவுன்" முதலிய எவ்வித உடைகளும் நீங்கள் விரும்பும் பட்டேனில்" அனுபவ முள்ள பெண்களால் தனிப்பட்ட வர்களுக்கும் மொத்த வியாபாரி மார்கட்கும் தைத்துக் கொடுக் கப்படும்- "பேபி ஸ்பொட்", (களுனு தியேட்டருக்கு எதிரில்), 83ஏ 1/2, நீர்கொழும்பு ரோட், வத்தளை-

வி இ 032965

## இஸ்லாமிய மாந்திரீகம்

இன்ஷா அல்லாஹ்—உங்களது இஸ்ம அஸ்மா வேலைகள் எது வானாலும் நம்பிக்கையோடு செய்வதற்கு சனி, ஞாயிறு, போயா விடுமுறைத் தினங்களில் நேரில் வருக- (இடம்— எலுவில பள்ளிவாசலுக்கு சமீபமாக)

Sulfika Buhary Shams al Manzil 17 Eluwila Panadura

வி இ 032035

டாக்டர் மந்திரயோகி, குரு சக்தி நிலையம், கல்லடி, மட்டக்களப்பு-

(Batticaloa) Sri Lanka

வி இ 4050

சர்வ சித்தி வசியம்- காதல், திருமணம், கல்வி, பரீட்சை, தொழில், வியாபாரம், வெளி நாட்டுப் பிரயாணம் சகல காரி யங்களிலும் மஹாவசிய ராஜ வசிய, கௌவசிய, சர்வலோக மஹா சக்தி வசிய ஆகர்ஷண யந் திரங்களினால் (தலா) வெற்றி அடைய பூசைச் செலவு 200 ரூபா விற்குள் உடல்நோய், மனநோய், பேய், சூனியம், கிரகதோஷம், மருந்தீடுகள், சோதிட, மாந்தி ரீகக் குறி மூலம் அறிந்து தீர்த்த காவல் வசீகரம் செய்து கொள்ள வரமுடியாத இலங்கையர்கள் முத்திரைக் கவர் அனுப்பி விப ரங்களை தபாலில் பெற்றுக் கொள்ளலாம்- டாக்டர் மந்திர யோகி, கல்லடி, மட்டக்களப்பு-

(Batticaloa) Sri Lanka

வி இ 4050

## வசிய மாந்திரீகம்

காதல் வெற்றிக்கு வசியம் உங்கள் காதலன், காதலியை நீங்கில்லாத வசியத்தினால் அவ ரின் விருப்பத்துடன் திருமணம் செய்ய, பிரிந்து சென்றவர்களை, காதலன், காதலியை, கணவன், மனைவியை, வேண்டியவர்களை தன்வசப்படுத்த பெற்றோரினதும், உங்களினதும், சம்பந்தப்பட்ட வர்களினதும் பெயர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்- வசிய எந்திரத்தினாலும், வசிய எண்ணெ யினாலும் வசியப் பவுடர் மருந்தி னாலும் எங்கு இருப்பவர்களையும் வசியமாக்கி நன்மை பெறலாம்- பூசைச் செலவு 200 ரூபாவிலிருந்து 350 ரூபாவிற்குள்- உடனடி விசேட, கடல் கடந்த வசியம் 500 ரூபாவிற்குள், டாக்டர் மந் திரயோகி, குருசக்தி நிலையம், கல்லடி, மட்டக்களப்பு-

(Batticaloa) Sri Lanka

வி இ 4050

உட்பட [illegible] பி ஆர் எல் எப் உறுப்பினர்கள் மற்றும் ஈ என் டீ எல் எப் உறுப்பினர்கள் பலரை இந்திய அரசாங்கம் அக திகளாகக் கொண்டு போய் ஒரிஸ்ஸா மாநிலத்தில் வைத்தி ருக்கிறது.

முதலமைச்சர் வரதராஜப் பெருமாளும் குடும்பத்தோடு இந்திய விமானப்படை விமானம் ஒன்றில் ஏறி நாட்டை விட்டுச் சென்று விட்டார்.

அவர் இப்போது இருக்கும்

## வை. எம். எம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மையாகும்.

பேரவைத் தலைவர் ஜனாப் ஹலீம ஏ அஸ் தலைமை வகிப் பார்.

இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிரந்தர வதிவிடப் பிரதிநிதி திரு ரொபர்ட் இங்கலன்டும் திருமதி, ஆங்கலன்டும் பிரமத அதிதிக ளாகக் கலந்து கொள்வர்.

நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் வை, எம எம ஏ பேரவை கிளைப் பிரதிநிதிகளும் மாநாட்டில் பங்கு பற்றுவர்.

(ண-007)

## 6 மாதகால...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளர்கள் தேவைப்பட மாட்டார் கள்.

ஏனைய ஊழியர்களுக்கு ஐந்து வருட காலத்துக்குக் குறை யாத சேவை உள்ள பிணையாளர் கள் தேவைப்படுவர் என்றும் அவர் கூறினார்.

வருடத்துக்கு 7.2 சதவீதத்திற் கும குறைந்த வட்டியில் இக்கடன் வழங்கப்படும.

சம்பளத்தில் 10சதவீதம என்ற அடிப்படையில் மாதாந்தம இந் தக் கடன் தொகை தவணை அடிப்படையில் அறவிடப்படும.

(ண-007)

பொதுத் தேர்தலில் ஜனதா தள் கட்சி வெற்றி பெறும வரை ஹரியானா மாநில முதல்வராகப் பதவி வகித்து வந்தார்.

சமீப காலமாக அவருடைய குடும்பத்தவர்கள் மீது தெரிவிக் கப்பட்ட விமர்சனங்களின் பிரதி பலிப்பே அவருடைய ராஜி னாமா என்று சொல்லப்படுகி றது.

(ண)

## விண்ணப்பங்கள் கோரல்

கோப்பாய் மார்ச் 17

யாழ்மாவட்டத்தில் சிறு கைத்தொழில் துணைக்களத் தினால் நடத்தப்படும் தச்சுத் தொழிற் பாடசாலையில் பயிற்சி பெறும மாணவர்களை, தெரிவு செய்வதற்கு விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன,

யாழ் மாவட்டத்தில் மானிப் பாய் யாழ்ப்பாணம ஆகிய இரண்டு இடங்களில் தச்சுத் தொழிற் பாடசாலைகள் செயற் பட்டு வருகின்றன.

பாடசாலையில் சேர்த்துக் கொள்வதற்கு மாணவர்கள், விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு யாழ் செயலகத்தில் செயற்படும சிறுகைத்தொழில் திணைக்களம அறிவித்துள்ளது.

(ஐ-142)

## அரசாங்க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்க வேண்டும என ஜனாதி பதி வலியுறுத்தியிருக்கிறார்.

இவ்வாறு அமைச்சர் திரு யூ பீ விஜேகோன் தெரிவித்தார்

அரசியல்வாதிகளின் [illegible] களுக்கோ, அவர்கள் [illegible] சிபார்சு களின் பேரிலோ எந்தவொரு வெற்றிடமும நிரப்பப்படலா காது என ஜனாதிபதி கண்டிப் பான உத்தரவை [illegible] றார் என அமைச்சர் மேலும கூறினார்.

(ண-007)

# சிந்தாமணி இலக்கிய பீடம்

## பாகவதர் என்றால் யார்?

பாகவதர் என்றால் யார்? பொருள் என்ன?

பாகவத புராணம் என்று ஒரு பெரிய சமஸ்கிருத நூல் உண்டு- இது பதினெண்ணாயிரம் சுலோகங்களை உடையது- இந்த நூலில்தான் சூரியவம்ச சரிதம், கிருஷ்ண பகவானுடைய பிறப்பு, லீலைகள், பூரு, யயாதி ஆகியோரின் வரலாறுகள் எல்லாம் அடங்கியுள்ளன-

தேவி பாகவதம் என்ற தமிழ் நூல் கிருஷ்ண பரமாத்மாவினுடைய கதைகளை எல்லாம் எடுத்துக் கூறுகின்றது- கிருஷ்ண லீலைகளை அற்புதமான பாடல்களால் வர்ணிக்கின்றது-

அந்தக் காலத்தில் பாகவதத்தில் வரும் கிருஷ்ணனின் கதைகளை பேச்சாற்றலும் சங்கீதத் திறமையுமுள்ள பௌராணிகர்கள் கதாகாலட்சேப விற்பன்னர்கள் கோயில்களில் மாலை வேளைகளில், எடுத்துக் கூறிவந்தார்கள்- வசனமும் பாட்டுமாகக் கதை சொல்லும் கலைக்குப் பெயர் "கதாகாலட்சேபம்" என்பதாகும்-

பாகவதத்தில் காணப்பட்ட கிருஷ்ணன் கதையை எடுத்துக் கூறுபவர்கள் பாகவதர்கள் என்று அழைக்கப்பட்டார்கள் அந்தக் காலப் பாகவதர்களுக்குப் பொது ஜனங்களைக் கவரும் வண்ணம் பாடும் ஆற்றலும் சங்கீத ஞானமும் இருந்தன-

பிற்காலத்தில் ஜனரஞ்சகமாகப் பாடுபவர்கள் "பாகவதர்" என்று பொதுவாக அழைக்கப்பட்டார்கள்- சாஸ்திரபூர்வமான இசையை கர்நாடக இசையை, ஜனரஞ்சகமாக வழங்கியதால் தியாகராஜ பாகவதர் ஹொன்னப்ப பாகவதர், சூரிய நாராயண பாகவதர் போன்றோர் பெயரும் புகழும் பெற்றார்கள்-

"பாகவதர்" என்றால் பாட வல்லவர், பாட்டில் வல்லவர் என்பதே சரியான அர்த்தமாகும்- (ஒலி, ஒளி உருவப் பகுதியில் சுயம்பு லிங்க பாகவதர் பார்க்கவும்)

## மணி மலர்கள்

காத்தான்குடி தாமரை கலை இலக்கிய வட்டம் "மணி மலர்கள்" என்ற பெயரில் கவிதைத் தொகுப்பு ஒன்றினை வெளியிட்டிருக்கிறது. தொகுப்பாசிரியர் ரீ எல் ஜவ்பர்கான்.




இத்தொகுப்பில் சிந்தாமணியில் ஏற்கனவே வெளிவந்த தரமான மரபுக் கவிதைகள் முப்பத்து மூன்றினைச் சேர்த்து வெளியிட்டிருக்கிறார் ஜவ்பர்கான்.

அ கௌரிதாஸன், வி எம நஜிமுதீன், ஏ எம எம அலி, எம ஐ எம ஸுபைர், க ப லிங்கதாஸன் ரீ எல் ஜவ்பர்கான், நிலாதமிழின் தாஸன், எம ஐ எம ஜாபீர் கே எம பாறூக் கலைமகள் ஹிதாயா, மதியன்பன் மஜீத் ஆகிய 11 கவிஞர்களுடைய படைப்புகள் இந்நூலில் இடம பெற்றுள்ளன.

சிந்தாமணியில் வெளிவந்த கவிமலர்கள் ஆகையால் இத்தொகுப்புக்கு "மணி மலர்கள்" என்று பெயரிட்டிருப்பது பொருத்தமேயாகும். கருத்தாழமும கவி வளமும, கற்பனைப் பொலிவும, ஓசை நயமும பொருந்திய கவிதைகளையே தேர்ந்தெடுத்திருக்கிறார் தொகுப்பாசிரியர்.

இந்நூலுக்கு ஜவ்பர்கான் எழுதியுள்ள முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "சமகாலத்து இலக்கியப் பாதையில் ஊர்வலம வருகின்ற அனைத்துப் பத்திரிகைகளும சஞ்சிகைகளும புதுக் கவிதைகளையே நேசிக்கின்றன. அவற்றுள் வித்தியாசமானதொரு போக்குடைய தேசிய இதழ் சிந்தாமணிதான்.

"வாரா வாரம அதிகமான மரபுக் கவிதைகளைப் பிரசுரித்து மரபின் மகத்துவத்தைக் காத்து நிற்கும மேற்படி பத்திரிகையை கௌரவப்படுத்தி, அதன் கவிஞர்களையும கௌரவப்படுத்த வேண்டும என்ற நோக்குடனேயே, "மணி மலர்கள்" என்ற இந்தத் தொகுப்பு வெளியிடப்படுகிறது"

கவிஞர் ஜவ்பர்கானுடைய இந்த நோக்கம பாராட்டற்குரியதேயாகும். இந்நூலை அவர் 1987 ஆம ஆண்டிலேயே வெளியிட்டிருக்கிறார். நூலின் கடைசிப் பக்கங்களில் நூலில் இடம பெறும பதினொரு கவிஞர்களைப் பற்றிய குறிப்பும அவர்களுடைய முகவரிகளும இடமபெற்றுள்ளன. ஆரயமபதியில் உள்ள ஈஸ்டன் அச்சகம இந்நூலை அச்சிட்டிருக்கிறது. பக்கங்கள் 48. விலை ரூபா 10-00. கிடைக்குமிடம: தாமரை கலை இலக்கிய வட்டம, காத்தான்குடி, மட்டக்களப்பு.



## பாரீஸ் விநாயகர் கோயில் விஸ்தரிப்பு

பாரீஸ், மார்ச் 17

பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரீஸில் உள்ள ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் இமமுறை தைப்பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இலங்கைத் தூதுவர் டாக்டர் அனந்த குருகே தமது குடுமபத்தாருடன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

ஆலயத்தின் இடப் பற்றாக்குறையை நேரில் கண்டறிந்த தூதுவர் ஆலய விஸ்தரிப்புக்கு விரைவில் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும என்று ஆலய நிர்வாகக் குழுத் தலைவர் திரு வி சந்திரசேகரத்திடம உறுதி அளித்தார்.

பாரீஸ் நகர பிதா திரு ஜக்குயினி ஆலயத்துக்கு விரைவில் பரந்த அளவில் இடம ஒதுக்கித் தருவதாக உறுதி அளித்திருக்கிறார்.

ஆலயத்திற்கு விஜயம செய்த கொழுமபு கொமபனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பிரமுகர் திரு சின்னத்துரை தனபால விசேஷ அபிஷேகக் கிரியைகளில் கலந்து கொண்டார்-

(ம)

## ஆண்மை பறிபோகும்

சிறுநீரக இயல் டாக்டர் கென் தேசாய் என்பவர் சைக்கிள்களுக்கு எதிரி போல் ஒரு நியூஸ் வெளியிட்டிருக்கிறார்,

அதிக நேரம சைக்கிளில் சுற்றினால் ஆண்மை பறிபோய் விடும அபாயம் உள்ளது என்பது இவரது கண்டு பிடிப்பு,

நம நாட்டுக்கு இது சரி

# சிந்தாமணி திருமணப் பந்தல்

திருமண வயதை அடைந்த ஆண்களும பெண்களும நமது சமுதாயத்தில் நிறைய இருக்கிறார்கள்-

தங்களுக்கு பொருத்தமான ஜோடி எங்கு கிடைக்கும என்று அவர்கள் ஏங்கித் தவிக்கிறார்கள்-

நமது இளைஞர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் இன்று வெளிநாடுகளுக்கு சென்றிருக்கிறார்கள்- பலர் வேலைக்காகப் போயிருக்கிறார்கள்- சிலர் அகதிகளாகவும சென்றிருக்கிறார்கள்-

அவர்கள் எப்படிச் சென்ற போதிலும அங்கு நன்கு உழைக்கிறார்கள்- கை நிறையச் சமபாதிக்கிறார்கள்-

அவர்களில் பலர் இலங்கை திருமபுவதற்கு விருப்பம் அற்றவர்களாக இருக்கிறார்கள்- ஒரு பகுதியினர் திருமப முடியாதவர்களாகவும கலங்கி நிற்கிறார்கள்-

இவர்களுக்கெல்லாம ஏற்ற மணப்பெண்கள் தேவைப்படுகிறார்கள்-

அதே போல, இலங்கையிலும பருவ வயதடைந்த பெண்கள் திருமணத்துக்காகப் பல வருடங்கள் காத்து நிற்கிறார்கள்- அவர்களுக்கு தக்க வரன்கள் தேவைப்படுகிறார்கள்-

இந்த இரு சாராரையும ஒன்றிணைத்து வைப்பது எப்படி? சிந்தாமணி உதவ முடியுமா?

சிந்தாமணி இன்று உலகப் பத்திரிகையாகி விட்டது- சிந்தாமணி போகாத இடமில்லை- இலங்கைத் தமிழர்களும இலங்கை முஸ்லிமகளும எங்கெங்கெல்லாம வாழுகின்றார்களோ அங்கெல்லாம சிந்தாமணி செல்கிறது-

இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, சுவீடன், சுவிட்சர்லாந்து, இத்தாலி, ஸ்பெயின், சவூதி, டுபாய், குவைத், தென் ஆபிரிக்கா, கனடா, அமெரிக்கா, சிங்கப்பூர், மலேஷியா, ஆஸ்திரேலியா — இன்னும எத்தனையோ இடங்களுக்கெல்லாம சிந்தாமணி செல்கிறது-

அங்கு வாழும இளைஞர்கள் பலரும "சிந்தாமணியில் ஒரு திருமணப் பகுதியை ஆரமபித்தால் எங்களுக்கெல்லாம உதவியாக இருக்குமே" என்று சமீப காலமாகக் கடிதங்கள் எழுதி வருகிறார்கள்-

இப்படியானவர்களுக்கெல்லாம உதவும முகமாகவே, இந்த "சிந்தாமணி திருமணப் பந்தல்" பகுதியை இன்று முதல் ஆரமபிக்கிறோம-

இந்த சேவை இலவச சேவையாகும- எதுவித கட்டணமுமின்றி சிந்தாமணி வாசகர்களுக்கு அளிக்கப்படும உபகார சேவையாகும-

பெண் அல்லது வரன் தேவைப்பட்டவர்களோ அல்லது அவர் தம பெற்றோரோ தங்கள் தேவைகளையும விவரங்களையும குறிப்பிட்டு எமக்கு எழுதலாம- தேவைகள் சிந்தாமணியில் பிரசுரிக்கப்படும- பணம எதுவும கோரப்பட மாட்டாது-

சீதனம எதிர்பார்க்காமல் திருமணம செய்ய விருமபும ஆடவர்களின் கோரிக்கைகள் முதலிடம கொடுத்து பிரசுரம செய்யப்படும- விருமபினால் அவர்களுடைய புகைப்படங்களும வெளியிடப்படும-

கோரிக்கைகளை விடுப்பவர்கள் எமக்கு சரியான பெயர், முகவரி ஆகியவற்றைத் தர வேண்டும- ஆயினும பெயர், முகவரி பத்திரிகையில் வெளியிடப்பட மாட்டா- ஒவ்வொரு குறிப்புக்கும ஒரு இலக்கம தரப்படும- கோரிக்கை விடுப்பவர்கள் முத்திரை இடப்பட்டு சுயமுகவரி எழுதிய (என்வலப்) கவர் சேர்த்து அனுப்ப வேண்டும- வரும் விண்ணப்பங்கள் அவர்களுக்கு தாமதமின்றி அனுப்பி வைக்கப்படும- சகல விவரங்களும இரகசியமாக வைக்கப்படும-

உங்கள் தேவைகளுக்கு கீழே உள்ள முகவரியை கத்தரித்து கவரில் ஒட்டி, மணமகன் அல்லது மணமகள் தேவை விவரங்களையும எழுதி எமக்கு அனுப்பி வைக்க வேண்டும-

THE EDITOR
CHINTAMANI
THIRUMANA PANTHAL
P.O. BOX 1613
COLOMBO
SRI LANKA

## காரின் நீளம் 21 அடி

அமெரிக்க அதிபர் உபயோகப் படுத்தும காரின் நீளம 21






இயந்திரங்கள் துரிதமாகவும்
உத்திரவாதத்துடனும் திருத்திக்கொள்ள
புறக்கோட்டையில் நம்பிக்கையான இடம்



TELECAVE
டெலிகேவ்

105 - 1 /5. ஒல்கொட் மாவத்தை
ரூபவாஹினி கட்டிடம்
முதல் மாடி (முடிவு) கொழும்பு - 11.
(கோட்டை புகையிரத நிலையத்திற்கு எதிரே)

தொலைபேசி: 545377

வீடியோ ஹெட்கள் நீங்கள் நிற்கும் பொழுதே பொருத்தித்தரப்படும்



Tai-Pan for CASIO

CALCULATORS OVER 100 MODELS AVAILABLE



ரூபா 175/- க்கு மேல்

SF - 9000

ஏஜெண்ட்
தாய்-பான் டிரேடிங் கம்பனி
2/1 இரண்டாம் மாடி, 96 குமார வீதி கொழும்பு 11
தொலைபேசி: 546072 - 545616


நூலை அச்சிட்டிருக்கிறது. பக்கங்கள் 48. விலை ரூபா 10-00. கிடைக்குமிடம்: தாமரை கலை இலக்கிய வட்டம், காத்தான் குடி, மட்டக்களப்பு.

## உளவியல் மஞ்சரி

உளவியல் கட்டுரைகள் பலவற்றை தாங்கி 16 ஆவது ஆண்டு சிறப்பு மலராக "நான்" என்னும் உளவியல் மஞ்சரி வெளிவந்துள்ளது.

64 பக்கங்களைக் கொண்ட இவ் சிறப்பு மலரில் பல கட்டுரைகளுடன், சிறுகதை, குறுங்கதைகளும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அறிவு புகட்டும் பல




துணுக்குகள் ஆங்காங்கே காணப்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சூரியனின் பின்னணியில் பறவைகள் சில பறந்து வர பெண்ணின் அழகிய முகம் தலைவிரி கோலத்துடன் காணப்படும் அட்டைப்படம் தீட்டப்பட்டிருக்கிறது.

"வசந்தம்" அ ம தி குருமடம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலிருந்து வெளிவரும் "நான்" உளவியல் சஞ்சிகையின் விலை 5 ரூபா.

அதிக நேரம் சைக்கிளில் சுற்றினால் ஆண்மை பறிபோய் விடும் அபாயம் உள்ளது என்பது இவரது கண்டு பிடிப்பு,

நம நாட்டுக்கு இது சரியாக ஒத்து வரும் என்று சொல்லுவதற்கில்லை. இருபது கி மீ முப்பது கி மீ என்று சைக்கிளில் சுற்றுபவர்களுக்கு டசின் கணக்கில் குழந்தை குட்டிகள் இருக்கிறார்கள்.

(த-10)

## ... 21 அடி

அமெரிக்க அதிபர் உபயோகப் படுத்தும் காரின் நீளம் 21 அடி 6 அங்குலம். மணிக்கு 80 கி மீ வேகத்தில் போகும் கார், இது.

இதன் எடை 5 டன், இரண்டு டன் எடையுள்ள உலோகத் தகடுகள் இதன் தயாரிப்புக்குப் பயன் படுத்தப்பட்டுள்ளன (த-10)

# பம்பாய் நகரம் கடலில் மூழ்குமா?

டாக்டர் ராஷ்மி மயூர் என்பவர் சுற்றுப்புற சூழல் பற்றி ஆய்வு செய்யும் அறிவியல் நிபுணர், பமபாயில் இருக்கிறார்,

பூமியின் ஒரு கோடியில் இருக்கும் பனிக்குட்டிகள் உருகி உருகி விரைவில் கடலின் நீர் மட்டம் உயரும் என்கிறார் இவர்:

மேலும் கடந்த 75 ஆண்டுகளில் பூமியின் உஷ்ணம் 2 டிகிரி கூடியுள்ளது என்கிறார்.

இதனால் கரியமில வாயு வானவெளியில் பயன்படாமல் இருப்பதாகவும், இதனாலும உறை பனிகள் உருக வாய்ப்பு அதிகம என்றும சொல்லுகிறார்.

இப்படிப் பனி உருக்கு அதிகமாக அதிகமாக கடலின் நீர் மட்டம உயர்ந்து விடும, இந்தியாவில் இதன் காரணமாக பமபாய் நகரமதான் பாதிக்கப்படும.

மூன்றில் ஒரு பங்கு நகரமாவது கடலில் மூழ்கிப் போவது நிச்சயம என்கிறார் இவர்!,

(த-10)

# தனியார் சொத்துடைமைக்கு ரஷ்யாவில் அங்கீகாரம்

கடந்த வாரம கொண்டு வரப்பட்ட சட்ட மூலம ஒன்றின் பிரகாரம தனியார் சொத்துடைமைக்கு ரஷ்யாவில் அங்கீகாரம வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் விவசாய பொருளாதாரத்தினை ஊக்குவிக்க இந்த புதிய சட்டம வழி மார்க்கங்களை ஏற்படுத்தும என்ற பொருவியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

தனியார் சொத்துடைமைகளுக்கான உரிமை சோவியத் யூனியனில் 60 ஆண்டுகளுக்கு முன்பு தடை செய்யப்பட்டது. சிறிய தனியார் வியாபார நடவடிக்கைகளும இக்காலத்தில் தேசியமயமாக்கப்பட்டன.

இந்த தனியார் சொத்துரிமை மீதான சட்ட மூலம சோஷலிஸப் பொருளாதார அமைப்பில் எந்த மாற்றத்திற்கும வழி வகுக்காது. மாறாக, சோஷலிஸ பொருளாதாரத்தினை கட்டியெழுப்பவும ஒரு மனிதன் எவ்வளவு சொத்தினை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியும எனவும இச்சட்டம நிர்ணயிக்கும.

(ம)


SPOKEN ENGLISH BY
முன்னாள் ஆங்கில விரிவுரையாளர்
AZUWAR MOHIDEEN

6 பேர்களை மாத்திரம் கொண்ட
விசேட 2 1/2 மாதப்
பேச்சுப் பயிற்சி!

இமமாதக் கடைசி வாரத்தில் ஆரம்பமாகவுள்ள இவ்வகுப்புக்கான நேர ஒதுக்கீடு
50 மணித்தியாலமாக
உயர்த்தப்பட்டுள்ளது

செவ்வாய், புதன் தினங்களில் ஆண்களுக்கான மாலை நேர வகுப்புகளிலும, சனி, ஞாயிறு தினங்களில் பெண்களுக்கான காலை நேர வகுப்புகளிலும, ஆண்களுக்கான மாலை நேர வகுப்புகளிலும மாத்திரமே இடமுண்டு-

இப்பயிற்சியின் விசேட அம்சங்கள்

* மிகவும குறைந்த எண்ணிக்கையினர்
* தமிழ் விளக்கத்தோடு கூச்சமின்றி ஆங்கிலத்தில் கதைக்கும வாய்ப்பு-
* ஆசிரியர், மாணவர் நேரடித் தொடர்பு
* பயிற்சிக்குப் பின்னர் முக்கிய பாடங்கள் அனைத்தும அடங்கிய 5 கெசட் நாடாக்கள் இலவசம-
* கற்றவற்றை நினைவில் கொள்ள எவ்வேளையிலும உதவக் கூடியவை இந்த கெசட் நாடாக்கள்!

பயிற்சியில் சேர்ந்து கொள்ள விரும்பும் அனைவரும இன்றும (ஞாயிறு 18) எதிர்வரும ஞாயிறும (25) பிற்பகல் 1-00 மணி முதல் மாலை 5-00 மணிவரை மருதானை வீதி, இலக்கம 540 யூ டி ஐ மண்டபத்தில் ஆசிரியரை நேரடியாக சந்திக்கலாம, பயிற்சிக்கான ஏனைய விவரங்களை பெற்றுக் கொண்டு பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம- தொலைபேசி, கடிதத் தொடர்புகள் வைத்துக் கொள்ளப்பட மாட்டா-

Director,
UTI. No 540 Maradana Road
Colombo 10.

# ஜனாதிபதி சட்டத்தரணி மோதிலால் நேரு

பிரபல சட்டத்தரணி திரு வல்லிபுரம குமாரசாமி மோதிலால் நேரு ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டு உள்ளார்—

ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்ட 10 பேரில் இவர் ஒருவரே தமிழராவார்—

வல்வெட்டித் துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு மோதிலால் நேரு வல்வெட்டித்துறை சிதமபரா கல்லூரியிலும், யாழ்ப்பாணம மத்திய கல்லூரியிலும கல்வி கற்றவர்—

இவர் முதன் முதலில் சட்டத்தரணியாக பதவி ஏற்று ஒரு வருடத்திற்குள் பிரபல்யமான வழக்குகளில் தோன்றி பெரும புகழ் பெற்றவர்—

ஜீ ஜீ பொன்னமபலம கியூசி, ஜீ எப் சேதுகாவலர் பி சி ஆகியோரிடம பயிற்சி பெற்றவர்—



மோதிலால் நேரு

சட்டத்துறையில் எஸ் ஜே வி செல்வநாயகம, கியூ சி, ஜீ ஜீ பொன்னமபலம, கியூ சி, தியாக லிங்கம, கியூ சி ஆகியோர் வரிசையில் இப்போது இவரும இடமபெறுகிறார்.

அகில இலங்கை தமிழ் காங கிரசின் உப தலைவரான இவர், அண்மையில் நடைபெற்ற அனைத்து கட்சி மாநாட்டில் அகில இலஙகைத் தமிழ் காஙகிரசின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்—

1965 ஆம ஆண்டு அட்வகேட்டாக சத்தியப் பிரமாணம செய்தது முதல் திரு மோதிலால் நேரு சட்டத்துறையிலும, அரசியல் துறையிலும ஜொலிக்கத் தொடஙகினார்—

குறிப்பாக அண்மைக் காலங்களில் பயஙகரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதான பல தமிழ் இளைஞர்களுக்காக நீதிமன்றஙகளில் ஆஜராகி வாதிட்டு அவர்களை மீட்டெடுத்தவர்.

திரு மோதிலால் நேருவின் துணைவியார் திருமதி நீலாமபிகை உயர் நீதிமன்றப் பதிவாளரின் செயலாளராக கடமையாற்றுகிறார்—

(ம-ல-கு)

ஒரே மேடையில்
ஐந்து வெவ்வேறு குழுக்களின்
ஐந்து நாடகங்கள்!

**இலங்கை தமிழ் நாடகப் பேரவை நிதிக்காக**

**விதவித நாடக விழா**

(5 குறுநாடகஙகள்)

**23.3.1990 மாலை 6 மணிக்கு**

பமபலப்பிட்டி
புதிய கதிரேசன் மண்டபத்தில்

கட்டணம— ரூ 100/—, ரூ 50/—, ரூ 25/—

## நம் விரல்கள் கூறும் கதை

"கையிலுள்ள ஐந்து விரல்களும ஒழுஙகாக இயஙகினால் தான் அந்தக் கையால் வேலை செய்ய முடிகிறது.

அதைப் போலத்தான் சமூகம, ஒவ்வொரு பிரிவினரும தமது கர்மாவைச் சீராகச் செய்வதால் தான் வண்டி ஓடுகிறது, ஆகையால் ஒவ்வொரு நபரும முக்கியமானவர், அன்புக்குரியவர், மரியாதைக்குரியவர் என்ற உணர்வு ஏற்பட வேண்டும, அல்லாமற் போனால், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற எண்ணஙகள் ஒழியவே ஒழியாது"

(ம-10)

**ரெருசோ ஷிப்ஸ்**

**TERRAZZO (CHIPS)**

★ வெள்ளை சிமெந்து
★ புட்லோ தண்ணீர் உட்புகாத சிமெந்து
★ கலர் பவுடர்
★ பித்தளை — அலுமினியம பட்டி
★ யூனியன் மோட்டிஸ் ஒற்றை — இரட்டை

## மயானத்தில் மன்மத லீலை

இஙகிலாந்தின் பிரிமிஙஹாம நகரின் தகனம செய்யும கூடத்தில் ஆபாச விடியோ கஸெட்டுகள் விற்பனை செய்யப்பட்டு வந்தனவாம. யாருமே சந்தேகிக்க மாட்டார்கள் என்ற காரணத்தால் இஙகு தைரியமாக ஆபாச விடியோ கடையை நடத்தி வந்திருக்கிறார்கள்.

ஆனால் கழுகுக்கு மூக்கில் வியர்த்ததைப் போல விடயம

# தாய்லாந்து தாராவை தரம் குறைத்ததேன்?

முகப்பை அலஙகரித்த "ஆனந்தம தரும ஆரணஙகு" கவிக்கு ஏற்ற தலைப்பு "வெரி பைன்" மர்மக் கவி தற்போது தாய்லாந்துவரை போய் விட்டாரோ?

— செல்வி சுல்பிகா, ராசிக், ராஜகிரிய.

குறிப்பு:

தாய்லாந்தின் தாராவை அவர் நேரில் சந்தித்தவராச்சே!

ஆ—ர்

★

சிந்துவைக் கையிலெடுத்ததும முதலில் புரட்டுவது கேள்வி — பதிலைத்தான். கடந்த வாரம திரிஞானியின் பதில்கள் வெகு ஜோர். குறிப்பாக உஙகளுக்கு வாலியைப் பிடிக்குமா வைர முத்துவைப் பிடிக்குமா என்ற ஒரு வாசகரின் கேள்விக்கு திரிஞானியின் பதில் உண்மையிலேயே திரிஞானியை தத்துவ ஞானியென்றுதான் சொல்ல வேண்டும.

— எம டி பர்ஸானா, கொட்டராமுல்லை.

★

"ஆனந்தம தரும ஆரணஙகு" என்ற முகப்புக் கவிதை நாலு வரியாய் இருந்தாலும நறுக்கென்று இருந்தது. இருந்தாலும... எட்டு வரியாய் இருந்திருந்தால் எடுப்பாய் அமைந்திருக்கும, அது சரி மர்ம ஆசாமியான நீர் "தானமாய் தனை ஈயும தாய்லாந்தின் தாராவோ" என்ற வரிகள் மூலம தாய்லாந்தின் பெண்களை தரக்குறைவாய் எண்ணி விட்டீரோ?

— செல்வன் வேலு கஙகாதரன், ஹட்டன்.

குறிப்பு:

தஙகளையே தானம செய்யும தாய்லாந்துத் தாராக்களின் தியாகத்தை அல்லவா மெச்சியிருக்கிறார் கவிஞர்.

ஆ—ர்

★

"வேகமாக கணக்கிடுவதற்கு சாதனங்கள் தேவைப்பட்டன — கணிவி தோன்றத் தாரணம



தாய்லாந்து தாராக்கள்

விடுகிறார் கதாசிரியர்.

— எம எம மஸீபா, அக்குறணை.

★

காண்போரைச் சுண்டியிழுக்கும கண்கவரும பொற்சிலையாம அந்தக் கவர்ச்சிக் கன்னியின் காந்தம நிகர் கண்களையும கள்ளூறும கனியிதழையும சிந்துக் கவிஞர் திலகம இன்னும அதி சிறப்பாகத் தனித்தனியே வர்ணித்திருக்கலாம என்று தோன்றுகிறது.

— எஸ் பிரபாகர், மாத்தளை.

★

"கண்ணீர்ப் பூக்கள்" சிறுகதை சிறப்பாகயிருந்தது. சீதனத்தை வெறுத்தொதுக்கும "அருண்" போன்ற "சீர்திருத்தவாதி ஆண்கள் எம சமூகத்தில் உருவாகினால் சீக்கிரமே "சீத

சரி, ஒரு வாசகரின் கேள்விக்கு திரிஞானியார் தந்த பதில் "அந்த" விளையாட்டுத்தான்" அது எந்த விளையாட்டு சார்!

— கே மோஹன். எம வினோத், கண்டி.

குறிப்பு:

இது கூடத் தெரியாதா உஙகளுக்கு? சொந்த விளையாட்டுத் தான்.

ஆ—ர்

★

பத்திரிகையா? வாஙகு சிந்தாமணியை என்று என் நண்பர்கள் அடிக்கடி சொல்வார்கள். அது சரியாகத்தான் இருக்கிறது. சென்ற வார சிந்துவிற்குப் பின் நானும சிந்துவின் வாசகனாகி விட்டேன் சார்.

— பி பாலா, எச் எம டிவி சன்.




★

குறிப்பு:

உடலின் வயது தெரியவில்லை. உள்ளத்தின் வயது என்றும இருபது.

ஆ—ர்

★

"கவரும கானம" தந்த "வாத்தியாரே சின்ன வாத்தியாரே" பாடல் தாள இசை ஒன்றுமே இல்லாது போனாலும இந்த ஊமைப் பாடல் (பிரசுரமான) உண்மையில் என் கால்களைத் தாளம போட வைத்தது.

— உஷாதாஸன், ஏ காதர், ஹப்புத்தளை.

★

திரிஞானியின் கேள்வி-பதிலை இன்னும சற்று அதிகமாக (இரு பக்கமாவது) பிரசுரித்து உஙகளிடம உள்ள தபால் அட்டைகளை முடித்து விட்டு முடியமான கெதியில் எஙகளுக்கும கேள்வி — பதில் முகவரிக் கூப்பனை பிரசுரியுஙகள் எனப் பணிவோடு வேண்டுகிறேன்.

— பாத்திமா சிறீனா, யஹலத்தன்னை.

★

நீண்ட நாட்களுக்குப் பிறகு "சிந்து" சிறப்பான ஞாயிறு சிறுகதை ஒன்றை தந்தாள். "கண்ணீர்ப் பூக்களை"த் தான் குறிப்பிடுகிறேன்.

— செல்வன் ரா சுரேஷ், கலஹா.

★

"முழுமையான யானையை முற்றாக சாப்பிடுவது எப்படி?" என்ற தலைப்பினைப் பார்த்ததும ஒரு கணம அதிர்ந்து போனேன். பின் படித்து முடித்ததும தான் விஷயமே புரிந்தது. ம... சுமமா சொல்லக் கூடாது சார். சிந்து தரும விந்தையான தலைப்புகளும அதில் இடம பெறும கருத்தாழமிக்க கட்டுரைகளும சிந்துவின் தரத்தினை மேலும ஒரு படி உயரச் செய்கின்றது.

— செல்வி எஸ் எம மாலா மக்குலுஸ்ஸ.

★

ஆனந்தம தரும ஆரணஙகு

★ புட்லோ தண்ணீர் உட்புகாத சிமெந்து
★ கலர் பவுடர்
★ பித்தளை — அலுமினியம் பட்டி
★ யூனியன் மோட்டிஸ் ஒற்றை — இரட்டை
— அசையும் கதவுகளுக்கான பூட்டுக்கள் (இங்லிஷ்)
(Union Mortice Lock)
ரூ 16/- மேல்
ரும்சன்ஸ்
443- பழைய சோனகத் தெரு-
கொழும்பு—12
தொலைபேசி- 434411 — 431511

சவூதி அரேபியா
★ வீட்டுப் பணிப்பெண்கள்
★ வீட்டு டிரைவர்கள்
[5 நாட்களில் பயணம்]
சார்ஜா — அபுதாபி — டுபாய்
குவைட் — பஹ்ரேயின்
[21 நாட்களில் பயணம்]
★ வீட்டுப் பணிப்பெண்கள்
★ வீட்டு டிரைவர்கள்
★ டெய்லர்ஸ்
கடவுச்சீட்டு- 6 படங்கள் சகிதம் நேரில் வரவும்
M. K. M. ENTERPRISE
12.D—Prince of Wales Avenue
Colombo — 14
Labour & Approval 596/11/89

...ணத்தால் இங்கு தைரியமாக ஆபாச வீடியோ கடையை நடத்தி வந்திருக்கிறார்கள்.

ஆனால் கழுகுக்கு மூக்கில் வியர்த்ததைப் போல விடயம் பொலீஸாருக்கு தெரியவந்து விடவே அவர்களது வீடியோ கடைக்கு மூடுவிழா நடத்தப்பட்டது. (த-032)

## ஒத்துழைப்பு ஒப்பந்தம்

போதைப் பொருள் கடத்தலைத் தடுப்பதற்கான முயற்சிகளை ஒழுங்கிணைப்பது சம்பந்தமாக சோவியத், அமெரிக்க சுங்கத் துறைகள் மற்றொரு முக்கிய நடவடிக்கையை எடுத்துள்ளன.

சோவியத் அமைச்சரவையின் தலைமை சுங்கக் கட்டுப்பாட்டுத் துறையைச் சேர்ந்த தூதுக்குழு ஒன்று அண்மையில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்த போது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இரு நாடுகளுக்குமிடையில் ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் ஒன்று அப்போது கையெழுத்தானது.

சோவியத் சுங்கத்துறை ஊழியர்களுக்கு அமெரிக்காவில் பயிற்சி அளிப்பதற்கு வகை செய்யும் மற்றொரு ஒப்பந்தமும் அப்போது கையெழுத்தாயிற்று. (ம)

## பிணத்தை பாதுகாத்த கிழவர்

அமெரிக்காவில் இண்டியானா போலிஸ் என்ற ஊரில் 77 வயது நிரம்பிய கிழவர் கடந்த எட்டு ஆண்டுகளாக செத்துப் போய்விட்ட தன் சகோதரி மற்றும் அத்தையின் பிணத்துடன் வாழ்ந்து வந்திருப்பது சமீபத்தில் தெரிய வந்துள்ளது-

அவருடைய சகோதரிக்கும் அத்தைக்கும் பென்ஷன் தொடர்ந்து வந்தது அரசு அவர்கள் உயிருடன் இருப்பதாகச் சொல்லி அந்தப் பென்ஷன் பணத்தை வாங்கிச் சாப்பிட்டு வந்தார் இந்தக் கிழவர்-

பிணங்களின் நாற்றம் வெளியே வராமல் எப்படித்தான் பாதுகாத்து வைத்திருந்தாரோ? கிழவரும் செத்த பிறகுதான் இந்த விபரம் வெளியே வந்தது எல்லாம் பண ஆசைதான்! (த-10)

...

ஆ—ர்

★

"வேகமாக கணக்கிடுவதற்கு சாதனங்கள் தேவைப்பட்டன — கணினி தோன்றக் காரணம் இதுவே" என்ற கட்டுரை பிரமாதம்.

இது போன்ற கட்டுரைகள் எங்களுக்குத் தெரியாததெல்லாம் தெரிந்து கொள்ள உதவுகிறது.

— எம் ஸீ அக்மல், கண்டி.

★

முன்பு "சிந்து"வில் இந்தப் பக்கத்தில் இந்தப் பகுதிதான் இருக்கும் என்று புரொமிஸ் செய்யலாம்! ஆனால் இப்போது "சிந்து"வின் எல்லாப் பகுதிகளும் தலைகீழாக மாறி விட்டனவே!

— எச் எம் முஹம்மட் சவாஹிர், புசல்லாவை.

குறிப்பு:

உங்களுக்கு மட்டுமல்ல, எங்களுக்கும் கலக்கம் தான்.

★

"காதலி தேடிக் கொடுத்த மனைவி" என்ற தொடர்கதை விறுவிறுப்பாக அமைகின்றது. சென்ற வாரம் கதையைப் பார்த்ததும் தேன்மொழிக்கு ஏதும் நடந்து விடுமோ என்ற அச்சம். கதையைப் படித்து முடித்ததும் அடுத்த வாரம் எப்போது வரும் என்று எதிர்பார்க்க வைத்தனத்தை வெறுத்தொதுக்கும் "அருண்" போன்ற "சீர்திருத்தவாதி ஆண்கள் எம் சமூகத்தில் உருவாகினால் சீக்கிரமே "சீதனப் பேயை" விரட்டி விடலாம். "கண்ணீர்ப் பூக்கள்" தந்த ஆர்த்திக்கு "கன்னியெந்தன்" வாழ்த்து(ப்பூ)க்கள்!

— நூருல் சுஷிபா ரஷீத், உடுதெனிய.

★

"சிந்து" தந்த "யாழ்ப்பாணத்தில் புலிகள் ரோந்து" என்ற சிறிய கட்டுரை இன்று யாழ்ப்பாணத்தின் நிலைமையை அறிந்து கொள்ள உதவியது.

— செல்வன் ஜீ சுரேந்திரா, சிலாவத்துறை (வ மா)

★

யாழ்ப்பாணம் நகரம் தமிழ்ப் போராளிகள் (புலிகள்) கட்டுப்பாட்டில் உள்ளதை படத்துடன் தந்த செய்தி பெருமைக்குரியது. "முளை கட்டிய தானியங்களை உண்பது உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது" என்ற கட்டுரை பயனளிக்கக் கூடியதாகவும் இருந்தது.

— சப்லி பெ யோகநாதன், வல்வாப்பிட்டி.

★

"இளம் புலிகள்" இனிய முகத்துடன் ரோந்து புரிவதை படங்கள் மூலம் வெளியிட்டு எம் உள்ளங்களை கொள்ளை கொண்டு விட்டாள் சிந்து. அது நானும் சிந்துவின் வாசகனாகி விட்டேன் சார்.

— பி பாலா, எச் எம் டிவிசன்.

★

சென்ற வாரம் சிந்துவின் முத்தான முகப்போடு "வட்டத்துக்கு வெளியே" என்ற சின்னஞ் சிறுகதையைப் படித்தேன். அப்பப்பா, என்ன உணர்ச்சி வேகம். இளம் தலைமுறையினருக்கு புதியதோர் சொர்க்கத்தை திறக்கிறாள் சிந்து. திரிஞானி கேள்வி-பதில் பகுதி நறுக்கென்று இருந்தது.

— என் எம் ஷியாம், மாதிப்பொளை.

★

"கொம்பியூட்டர்" எனும் "கணினி"யின் கதை எனும் கட்டுரை "கொம்பியூட்டரை"யே தெரியாத பாமரனுக்குக் கூட புரியும்படி எழுதப்பட்டிருந்த விதம் பாராட்டத்தக்கது.

அப்பப்பா...! "முகப்புப் பக்க கவிஞர்" கூட ஒரு துள்ளல் பேர்வழிதான். அவரது முகப்புக் கவிதையின் ஒவ்வொரு அடியினைப் படிக்கும் போது எம்மை தாளம் போட வைத்து விட்டது. அதுசரி ஐயா! முன் பக்கக் கவிஞருக்கு எத்தனை வயது என்றாவது கூறுங்களேன்.

— என் எம் எம் சனூஸி அக்குறணை - 03.

...ஒரு படி உயர்ச் செய்கின்றது.

— செல்வி எஸ் எம் மாலா மக்குலுஸ்ஸ.

★

ஆனந்தம் தரும் ஆரணங்கு "முகப்புக் கவிதை அந்த அழகான படத்துக்கு ஏற்றாற் போல் அவ்வளவாக எடுபடவில்லை! "கண்கவரும் பொற்சிலையோ" கவி வரி நன்று. என்றாலும் மர்மக் கவிஞர் அவசரப்பட்டு எழுதி ஒருவாறாகச் சமாளித்து விட்டார். ஏன் சார் அந்த அழகான தேவதைக்கு இந்தச் சுவையில்லாக் கவி தேவைதானா?

— மொஹமட் றெளிஹாஜ் குறிஞ்சாக்கேணி - 02.

குறிப்பு:

முகப்புக் கவிஞருக்குப் பாடம் படிப்பிக்கத்தான் வேண்டும் எங்கே அந்தப் படத்துக்கு நீங்கள் ஒரு கவிதை எழுதி அனுப்புங்களேன். நன்றாக இருந்தால் பிரசுரிக்கிறோம்.

ஆ—ர்

★

முழு யானை ஒன்றினை முற்றாக சாப்பிடுவது எப்படி? எனும் விந்தையான தலைப்பைப் பார்த்த போது அதிர்ந்தேன்! கட்டுரையினை வாசித்த போதே அதிர்ச்சி நீங்கி தெளிவான சிந்தனை உதித்தது.

— வி நித்தியானந்தன், ரி ஜோதிலக்ஷ்மி, கண்டி.

★

# ஆஸ்திரேலியர்களில் ஆசிய இரத்தம் அதிகம்

இரண்டாயிரத்து இருபத்தோன்றாம் ஆண்டளவில் பதின்மூன்று ஆஸ்திரேலியர்களில் ஒருவர் ஆசிய இரத்தம் கொண்டவராக இருப்பாராம்.

ஆசிய நாடுகளில் இருந்து இந்நாட்டில் குடியேறச் செல்லும் மக்களின் எண்ணிக்கையை கணக்கில் எடுத்துக் கொண்டால் எதிர்காலத்தில் ஆசிய இரத்தம் கொண்டவர்களின் எண்ணிக்கை இந்த அளவுக்கு அதிகரித்து விடுமாம்!

ஆஸ்திரேலியாவின் இன்றைய சனத்தொகையை எடுத்துக் கொண்டாலும் அதன் எட்டு சதவீதமானோர் ஆசியாவில் பிறந்தவர்கள் தானாம்! ஆஸ்திரேலியாவின் இன்றைய சனத்தொகை ஒரு கோடியே 68 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது,

அதாவது இலங்கையின் சனத்தொகை! இதன் 12.2 சதவீதமானோர் அந்நாட்டுக்கு வெளியே பிறந்தவர்களாம்!

இன்றைய சனத்தொகை அதிகரிப்பின் பிரகாரம் 2021ஆம் ஆண்டளவில் இக் கண்டத்தின் சனத்தொகை இரண்டு கோடியே 47 லட்சமாக உயர்ந்து விடுமாம்! இந்நாட்டின் கலப்பினத்தவர்களை எப்படி அழைப்பது, ஆஸ்திரேசியா என்றா? (த-032)

# வெள்ளி விழாக் காணும் நாட்டியக் கலைஞர் வேலானந்தன்

1959 ஆம் ஆண்டு 19 வயதான அருளானந்தம் புதுடில்லியில் உள்ள கேரள கலா கேந்திரத்தில் நடனம் கற்கச் சென்றார்.

இரண்டு ஆண்டுகள் பயிற்சியை அங்கு முடித்துக் கொண்டு திருவனந்தபுரம் விஸ்வ கலா கேந்திரத்தில் சேர்ந்து முதிர்ந்த தேர்ச்சி பெற்றார்.

1964 இல் நாடு திரும்பினார். நல்லூர் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் ஆதரவில் நடன வகுப்புக்களை நடத்தி வந்தார்.

காலஞ் சென்ற சங்கீத பூஷணம் நமசிவாயம் சங்கீத பூஷணம் எஸ் பாலசிங்கம் ஆகியோரும் ஆதரவாக இருந்தனர்.

பத்மினி செல்வேந்திரகுமார் (நடராஜ) நளாயினி இராஜதுரை, தேவமனோகரி இரத்தின சிங்கம் நகுலமாலா ரவீந்திரன் (நவரத்தினம்) ஆகியோர் இவரது ஆரம்பகால மாணவிகளாவர்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் "கலைக் கோயில்" என்ற பெயரில் ஒரு நடனப் பாடசாலையை 1966 இல் தொடக்கினார். அது முதல் அவர் தனது பெயரை வேலானந்தன் என்று குறிப்பிட்டுக் கொண்டார்.

1970 இல் அவர் நடன விரிவுரையாளராக நியமிக்கப்பட்டு, யாழ்ப்பாணம் கொழும்புத் துறை ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் பணி ஏற்றார்.

இதே ஆண்டு "இந்திரன் அணை" என்ற நாட்டிய நாடகத்தைத் தயாரித்து அரங்கேற்றினார். அது பலரது பாராட்டைப் பெற்றது.

1971 இல் புதுடில்லியில் நடைபெற்ற அனைத்துலகக் கலை விழாவில் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். 1972 இல் கேரள கலை விழாவில் பங்கேற்றார். அனைத்துலக மக்கள் அரங்க சங்கத்தினால் இந்திய பாரம்பரிய நடனங்களில் ஒரு அனைத்துலகக் கலைஞர் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

இவர் பல நாட்டிய நாடகங்களைத் தயாரித்துள்ளார். பஸ்மாசுர மோகினி, பாமா விஜயம், சீதா அபகரணம், ஆலய மணி, ஆதி மனிதன், அருளும் இருளும், பஸ்மாசுரன், தோட்டி மகன், என்ன தான் முடிவு என்பன அவரது நாட்டிய நாடகங்களுள் சிலவாகும்.

கலைத் திறத்தின் நுட்பங்களை இலாவகமாக வைத்து "ஆலய மணியில்" சாதிக் கொடுமைகளைச் சாடியுள்ளார்.

1977 இனக் கலவரத்தின் அக்கிரமங்களை அடிப்படையாகக் கொண்ட "பஸ்மாசுரன்" நாட்டிய நாடகத்தில் சபையோரை மனச்சாட்சியில் மனித நேயத்தைத் தேட வைத்தார்.

நவரச பாவத்தில் இலங்கையில் அவருக்கு தனி இடம் உண்டு. கலையை சமூகமயப் படுத்தியதால் அவருக்கு சமூகத்தில் ஒரு தனி மதிப்பு உண்டு. கொலைக் காட்சி நிகழ்ச்சிகள் உட்பட 750 க்கு மேற்பட்ட நிகழ்ச்சிகளில் தோற்றியுள்ளார்.

1982 இல் மேற்கு நாடுகளுக்கு கலைச் சுற்றுலா சென்றார். மேற்கத்திய பத்திரிகைகள் அவரது நிகழ்ச்சிகளை வியந்து பாராட்டின. இன்று அவரது "கலைக் கோயில்". "வேலானந்தன் நடன நிறுவனம்" என்ற பெயர் மாற்றம் பெற்றுள்ளது.

அவரது மகள் ஷோபனா ஒரு திறமையான நர்த்தகி. இன்று இந்தியாவில் நடனக் கலையின் நுண்ணிய நுட்பங்களைக் கற்றுக் கொண்டிருக்கிறார்.

வேலானந்தன் படாடோபம் இல்லாதவர். எளிமையானவர், கலைக்கே தன் வாழ்வை அர்ப்பணித்தவர்.

...கலாசார நிறுவனங்களின் நிதி உதவிக்காக நடன நிகழ்ச்சிகள் அளிக்குமபடி அவருக்கு அழைப்புகள் மேற்கு நாடுகளிலிருந்து வந்திருக்கின்றன. கலைத் துறையில் அவர் 25 ஆண்டுகளை இவ் ஆண்டு பூர்த்தி செய்கின்றார்.


வேலானந்தனின் 25 ஆண்டுக் கலை வாழ்வைப் பிரதிபலிக்கும் வகையிலும் அவரைக் கௌரவிக்கும் வகையிலும் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு டயிலி வெள்ளி விழா நடைபெற உள்ளது.

வெள்ளவத்தை இராம கிருஷ்ண மண்டபத்தில் அவரும் அவருடைய குழுவினரும் கலந்து கொள்ளும் நிருத்த - நிருத்திய நாட்டியாஞ்சலியுடன் இந்த வெள்ளி விழா நடைபெறும்.

(ம)







வெள்ளிவிழா காணும கலைஞர் வேலானந்தனும அவரது மகள் சோபனாவும கலந்து கொணட ஒரு நாட்டிய நிகழ்ச்சியில் ஒரு கட்டம (ம)

## மருதாணியின் பயன் அதிகம்

நாலு டீ ஸ்பூன் மருதாணி பவுடருக்கு; இரண்டு டீ ஸ்பூன் மண்ணெண்ணை, ஒரு டீ ஸ்பூன் சர்க்கரைத்தூள். மற்றும ஒரு டீ ஸ்பூன் எலுமிச்சை சாறு போட்டுக் கலக்க வேண்டும.

அப்போதுதான் மருதாணி சிவப்பாகப் பிடிக்கும.

மருதாணி அடிக்கடி பூசி வந்தால் உடல் வெப்பம குறையும கையில் நகச்சுத்தி ஏற்படாது! (ம-10)

## டெலிவிஷன்

18—3—1990

### ரூபவாஹினி

3-00 ஜிலெட் வேல்ட் ஸ்போட்ஸ் ஸ்பெஷல்
4-00 "ரசர"
5-00 "கதைவேளை"
5-30 "சுடசுன"
6-00 முமமணிகளுக்கு அஞ்சலி
6-15 பியுச்சர் அட்ரக்ஷன்ஸ்
6-30 செய்திகள் - தமிழ்
6-55 விளையாட்டு மகவின் [சிங்களம]
7-25 ஸ்மோல் வொண்டர்
8-00 செய்திகள் - சிங்களம
8-30 சவுசங்கீத்த
9-30 செய்திகள் - ஆங்கிலம
10-00 உலகக் கிண்ண கிரிக்கெட் ஆங்கிலம [ஆஸ்திரேலியா — பாகிஸ்தான்]
10-50 ஒளிபரப்பு முடிவு

### ஐ. டி. என்.

காலை —
11-00 வோல்ட்ரன் – டிபென்டர் ஆப் த யூனிவர்ஸ்
11-30 "என்ட்ரீ விப்ரி"
12-00 வண்ணப்பூக்கள்
12-30 விச்சித்ர கீத்த
1-00 முத்துச்சரம
1-30 ஒளிபரப்பு முடிவு
சேவை — 11
5-00 புட்போல் மேட் இன் ஜெர்மனி
6-00 முமமணிகளுக்கு அஞ்சலி
6-15 "ரசமியுரு"
6-45 "கௌரி கீத்த கட்டலு"
7-00 "சுபபிரார்த்தனா"
7-30 வெரயிட்டி பெயார்
8-00 "லெட் தெயார் பீ லவ்"
8-30 செய்திகளும கருத்துகளும
9-00 "ரச விந்தன"
9-30 "டெரிக்"
10-00 செய்திகள் – ஆங்கிலம
10-26 டெரிக் — தொடர்ச்சி
10-45 ஒளிபரப்பு முடிவு


# வளமான வாழ்வுக்கான காப்புறுதி

## சகிதம்

காலம் மனிதனுக்காகக் காத்திருப்பதில்லை; காலனும் யாரையும் மதிப்பதில்லை. ஆகவே தான் சீசீ ஈகிள் அதன் அபேக்ஷா, பிரிபுன், தக்ஷக்க காப்புறுதிகளுடன் தனித்துவமான ஒரு சலுகையை வழங்குகிறது. உடனடியான மரண விபத்துக் காப்புறுதியே அது. பூர்த்தி செய்த ஆயுட் காப்புறுதிக்கான மனுப் பத்திரம், வைப்புக்கட்டணத்தோடு, ஈகிள் ஹவுஸ், கிளைகள் அல்லது எங்கள் தரகர்களிடம் பற்றுச்சீட்டுப் பெற்ற உடனடியாக, இந்தக் காப்புறுதி கிடைக்கும்.

உடனடியாகவே, உங்கள் மனுப் பத்திரம் பரிசீலனை செய்து முடிக்க முன்பே, உங்கள் வைத்திய பரிசோதனைகள் பூர்த்தியடைய முன்பே, இந்தக் காப்புறுதி நடைமுறைக்கு வரும். 30 தினங்களுக்கு அல்லது ஏற்புக்கடிதம் வழங்கப்படும் வரையான காலத்துக்கு, இதில் எது முந்துகிறதோ அது வரை, இந்தக் காப்புறுதி செல்லுபடியாகும். இந்த விசேஷ காப்புறுதி இலவசம். காப்பீடு செய்த அடிப்படைத் தொகை, ரூ. 12.5 இலட்சத்துக்கு மேற்படாமல் உங்களுக்குக் கிடைப்பது உத்தரவாதம். ஒவ்வொரு நிமிடமும் பெறுமதியானது. அதனால் தான் ஒவ்வொரு கணமும் உங்களைக் காப்பதில் சீசீ ஈகிள் உறுதியான கரிசனை கொண்டிருக்கிறது. இந்தத் தனிச் சிறப்பான சலுகை சீசீ ஈகிள் மூலம் மட்டுமே!

உங்களைக் காப்பதில் என்றும் கண்ணும் இருப்போம்

சீசீசீ ஈகிள்
இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட்
ஈகிள் ஹவுஸ், 75, குமாரன் இரத்தினம் வீதி, கொழும்பு-2
தொலைபேசி: 421670-79/80/81

# நேபாளம்: ஈனக் குரல் ஜனநாயகம்

கட்டிடம் ஜொலிக்கிறது அத்திவாரம் அழுகிறது. நேபாளத்தில் முடியாட்சி மன்னர் கோலோச்சுகிறார் குடிமக்கள் மாச்சல்படுகிறார்கள்.

கம்யூனிஸ நாடுகளில் எல்லாம் இப்போது ஜனநாயக அலை பலமாக வீசுகிறது இரும்புத்திரையே கிழித்துச் சென்று கம்யூனிஸ ஆட்சி அமைப்பு முறையையே மாற்றி அமைத்து வருகிறது.

நேபாளத்தில் ஜனநாயக அலை வேகம் கொள்வதற்கு முன்னரே ஆயுத படைபலம் மூலம் அமுக்கப்பட்டு விட்டது.

நேபாள மக்கள் அமைதி விரும்பிகள், சாந்த சொரூபிகள், தன்னாதிக்க முடியாட்சி மன்னருக்கு கீழ்ப்படிவானவர்கள் இது அவர்களின் பாரம்பரியம்.

ஆனால் கடந்த பெப்ரவரி 12ஆம் திகதி பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கினார்கள், கிளர்ச்சி செய்தார்கள், ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

## வீதி ஆர்ப்பாட்டம்

## நேபாளத்திற்கு புதிது

சுமார் 11 வருடகால வரலாற்றில் குடிமக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தியிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

அரசுக்கும் நாட்டின் அரசியல் கட்சிகள் இல்லாத மக்கள் பேரவை முறைமைக்கும் எதிராக அவர்கள் கிளர்ந்தெழுந்தார்கள்.

நீரில் மூழ்குபவன் கை, கால்களை அடிப்பான், மூச்சுத்திணறுபவன் வாயைத் திறப்பான். வறுமை, வாழ்வின் கொடுமை ஆகியனவற்றினால் குடிமக்கள் வாயைத் திறந்தார்கள். ஜனநாயக காற்றைச் சுவாசிக்கத் துடித்தார்கள்.

ஜனநாயக மீட்பு இயக்கம் ஜனநாயகக் கோரிக்கைக்கான ஆர்ப்பாட்டங்களுக்கான ஒழுங்குகளை செய்திருந்தது.

வீதி ஆர்ப்பாட்டங்களே நடைபெற்றிராத ஒரு நாட்டில் இப்படி ஒரு நிலைமையைக் கண்ட பொலீஸார் ஆச்சரியத்தால் பிரமித்துப் போய்விட்டார்கள். அரசும் தட்டுத்தடுமாறியது. திக்குமுக்காடியது.

நடத்துவது என்று காலம் குறிப்பிட்டார்கள்.

தலைநகர் காத்மண்டுவின் பிரதான வீதிகளில் எல்லாம் கலகத் தடுப்பு பொலீஸார் நூற்றுக்கணக்கில் குவிக்கப்பட்டார்கள். அவர்கள் வீதிகளில் காணப்பட்டவர்களை விரட்டினார்கள். கிளர்ச்சிக்காரர்களைத் தேடி வேட்டை பிடித்தார்கள். பலரைக் கைது செய்தார்கள்.

இரும்புக்கரத்தின் மூலம் ஜனநாயகக் குரல்வளை நசுக்கப்பட்டு விட்டது. ஜனநாயக குமுறல்கள் அமுக்கப்பட்டுவிட்டன. ஆயினும் மூவர் கொண்ட ஆர்ப்பாட்டம் ஒன்று நடந்துவிட்டது.

அந்த ஈனக்குரல் ஜனநாயக ஆர்ப்பாட்டம் காத்மண்டுவின் புதிய வீதியில் நடைபெற்றது.

## கலகத் தடுப்பு

## பொலீஸ் குவிப்பு

ஆர்ப்பாட்ட ஊர்வலம் அங்கிருந்து ஆரம்பமாகும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த



கொயிராலா

தால் அங்கு கலகத் தடுப்பு பொலீஸார் வந்து சேர்ந்தார்கள்.

கூரை முகடுகளில் நூற்றுக்கணக்கான மக்கள் ஏறியிருந்தார்கள் வீடுகளின் ஜன்னல்களிலும் மக்கள் காணப்பட்டார்கள்.

சந்து ஒன்றில் இருந்த வீடு ஒன்றில் இருந்து மூவர் கிளம்பினார்கள். அவர்கள் ஜனநாயக மீட்பு இயக்கத் தலைவர்கள் அவர்கள்



மன்னர் வீரேந்திரா

ஹெர்மனீர் பஹுகாரும் இதில் அடங்குவார்.

## தடுக்கச் சென்றார்

## குடுகுடு கிழவனார்

இவர்கள் கைதாவதைத் தடுக்க குடு குடு கிழவனார் ஒருவர் விரைந்து சென்றார். அவருக்கும் அடி உதை விழுந்தது. அவரும் கைது செய்யப்பட்டார்.

மேற்கு ஐரோப்பிய பத்திரிகையாளர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த பேராசிரியர் கோவிந்த பிரசாத் உபாத்தியாவும் கைது செய்யப்பட்டார்.

பேராசிரியர் எதற்காக கைது செய்யப்பட்டார் என்று பத்திரிகையாளர்கள் கேட்டார்கள் பொலீஸார் கடுகடுத்தார்கள்" இது உங்களுடைய வேலை அல்ல உங்களுடைய மூக்கை அப்புறம் வைத்துக் கொள்ளுங்கள் என்று பொலீஸார் இரைந்து தள்ளினார்கள்.

இவ்வாறு பல்வேறு இடங்களிலும் வகைதொகை இன்றி பலர் கைது செய்யப்பட்டனர். ஏன் என்றால் வனவாசம் உம் என்றால் சிறைவாசம் என்ற வகையில் பொலீஸார் காரியம் ஆற்றியிருக்கிறார்கள்.

நேபாளத்தில் சுமார் 30 வருடகாலமாக அரசியல் கட்சிகளுக்கு தடை இருந்து வருகிறது.

1960 ஆம் ஆண்டு முதல்

தோழமை கொண்டுள்ள ஏனைய குழுக்கள் "அரசமைப்பு ரீதியான முடியாட்சி உரிமையையே மன்னர் வீரேந்திராவுக்கு வழங்க வேண்டும்" என தெரிவிக்கின்றன.

மேற்கு ஐரோப்பிய பாணியிலான ஜனநாயகக் கோரிக்கைக்கு மன்னர் வீரேந்திராவோ வளைந்து கொடுப்பதாகத் தெரியவில்லை.

பல கட்சி முறைக்கு சாத்தியமே இல்லை என்று அவர் கடந்த வெள்ளிக்கிழமை வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத் தெரிவித்து விட்டார்.

அரசியல் கட்சிகளற்ற தற்போதைய பஞ்சாயத்து ஆட்சி முறையில் சில சீர்திருத்தங்களை பார்க்கலாம் என்று மட்டும் கூறியிருக்கிறார்.

ஜனநாயக வேட்கை குமுறல்களின் வால்வுகளைத் திறக்க மன்னர் மறுப்பதால் அது வெடித்துச் சிதறும் ஆபத்தை உருவாக்கலாம் என்று அரசியல் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

## இந்தியாவின்

## நிலை என்ன?


நேபாள விவகாரத்தில் அண்டை நாடான இந்தியாவின் நிலை என்ன?


பூலோக சஞ்சாரம்

எஸ்.எஸ்.எஸ்

இந்திய அரசாங்கத்தில் மூத்த தலைவர்களில் ஒருவரான சந்திரசேகர் கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதி நேபாளம் சென்றார் அங்கு தடை செய்யப்பட்டிருக்கும் நேபாள காங்கிரஸ் கட்சியின் மாநாட்டில் கலந்து கொண்டார்; உரையும் ஆற்றினார்.

நேபாளத்தில் இப்போது இருக்கும் பஞ்சாயத்து அரசியல் முறைக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழ வேண்டும். பல






னத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

## பத்திரிகையாளர்

## மாநாட்டில் வி பி

நேபாளத்தில் உள்நாட்டு மக்களே கிளர்ச்சி நடத்துகிறார்கள். அந்த நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவது சரிப்பட்டு வராது என்று அவர் அங்கு கூறினார்.

வர்த்தகம், [illegible] போதை வஸ்து [illegible] அற்ற நீர்ப் [illegible] ஆகியன குறித்த இரு தரப்பு உறவுகளைச் சீராக்கும் உடன்படிக்கை ஒன்றை [illegible] செய்து கொள்ள [illegible]

[illegible]

விரித்து விட்டார் என்று நேபாள [illegible] [illegible] முணுமுணுக்கிறார்கள்.

முன்னாள் நேபாள [illegible] "[illegible]" [illegible] ஒன்றை அளித்திருந்தார்.

ஏனைய நாடு ஒன்றின் உள்நாட்டு விவகாரம் அதன் உள்நாட்டு விவகாரமே என்ற இந்தியாவின் கொள்கையை [illegible] கண்டித்தார்.

[illegible]

வகித்தார்கள். மன்னர் பெயரளவில் மட்டுமே நாட்டுத் தலைவராக அலங்கரித்தார்.

1951 வரை ரண மஹா ராஜாக்கள் அதிகாரத்தில் இருந்தார்கள். நேபாளத்தின் மொத்த வருமானத்தில் 90 சத வீதத்தை தமவசப்படுத்தினார்கள். 10 சத வீதத்தை இராணுவத்திற்கு செலவிட்டனர்.

1950 இலும் 1951 இலும் ரணா குடும்பத்தவர்களுக்கு எதி



வி பி சிங

ராக கிளர்ச்சி நடைபெற்றது. 1951 நவம்பரில் பிரதமரான மஹாராஜா மொஹன் ஷம்ஷேர், மத்திரிகா பிரசாத் கொயிராலாவிடம் தனது பதவியை கையளித்தார்.

## எண்மர் அடங்கிய

## ஆலோசனைப் பேரவை

காலப்போக்கில் ரணா குடும்ப ஆதரவாளர்கள் சிலருக்கும் புதிய அரசில் இடமளிக்கப்பட்டது. எண்மர் அடங்கிய

காக மறுசீரமைக்கப்பட்ட பொலீஸ் படை ஆகியன குறித்து கோரிக்கைகள் எழுந்தன.

## மன்னர் நடத்திய

## நேரடி ஆட்சி

1955 மார்ச் 2ஆம் திகதி முடிக்குரிய இளவரசர் மஹேந்திர பீர் பிக்ரம் ஷா, பிரதமர் கொயிராலாவின் அரசை கலைத்தார். தனது நேரடி ஆட்சியைக் கொண்டு வந்தார்.

அவர் 1955 ஜூன் மாதம் பேரவையை கலைத்தார். 1959 இல் தேர்தல்கள் நடக்கும் என்று அறிவித்தார்.

1956 ஜனவரியில் மன்னர் தனது நேரடி ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு, அமைச்சரவை அடங்கிய அரசை மீண்டும் அறிமுகப்படுத்தினார். பழைமை போக்கைக் கொண்ட பிரஜா பரிஷத் கட்சித் தலைவரை பிரதமராக்கினார். நேபாள காங்கிரஸ் ஓரம் தள்ளப்பட்டது.

## புதிய அரசமைப்பு

## மன்னர் வாக்குறுதி

பிரஜா பரிஷத் கட்சித் தலைவர் பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்ததையடுத்து ஐக்கிய ஜனநாயக கட்சி அரசை டாக்டர் கே ஐ சிங உருவாக்கினார். அவருக்கு எதிர்க் கட்சிகளின் எதிர்ப்பு பலமாக இருந்தது.

இதனையடுத்து மன்னர் புதிய அரசமைப்பு ஒன்றை தயாரிக்க

அசமபாவிதுங்களில்

## 20 பேர் மரணம

சுமார் 10,000 பேர் வரை எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் குதித்தார்குள்— அசமபாவிநஙுளில் 20 பேர் மரணமானார்குள்—

நேபாளத்தில் புல கட்சி ஆட்சி முறையை அறிமுகப்படுத்த வேண்டும என்ற கோர்ச்கை யின் கை ஓங்கியது— அடுத்த கட்ட ஆர்ப்பாட்டத்திற்கு ஜனநாயகப் போராளிகுள் ஆயத்தமானார்கள்,

அவர்கள் அடுத்த கட்ட வீதி ஆர்ப்பாட்டங்களை பெப்ரவரி 25 ஆம திகதி ஞாயிற்றுக்கிழமை இயக்கத் தலைவர்குள் அவர்கள் கறுப்புக் கொடிகளை அசைத்த வாறு சுலோகஙுகளை கோஷித்துக் கொண்டு முன்னேறினார்குள்

அவர்கள் 10 யார் கூட்டச் சென்றிருக்க மாட்டார்குள் சுமார் 20 கலகத் தடுப்பு பொலீஸார் அவர்குளை எதிர்கொண்டார்கள்— ஆர்ப்பாட்டக்காரர்கள் மூவரையும அவர்குள் அடித்து உதைத்து டிரக் ஒன்றில் ஏற்றினார்கள்—

கைது செய்யப்பட்டவர்குளில் தேசியப் பேரவை உறுப்பினரான பத்மா ரத்ன துலதார் ஒருவர் முன்னாள் காத்மண்டு நகர்பிதா ஹ்ரி பொல் புத்தராய மற்றவர் கமயூனிஸ்ட் தீவிரவாதியான

1960 ஆம ஆண்டு முதல் தடை செய்யப்பட்டிருக்கும நேபாள காஙகிரஸ் கட்சியும கமயூனிஸ்ட் குழுக்களும இரகசியமாக செய்திப் பத்திரிகைகுளையும துண்டுப் பிரசுரஙகளையும விநியோகித்து வருகின்றன—

### ஜனநாயக் கிளர்ச்சி நடத்த அழைப்பு

ஜனநாயக கிளர்ச்சிகுளுக்கு ஒத்துழைப்பு வழஙகுமாற அவை மக்குளைக் கேட்டு வருகின்றன—

நேபாளத்திலுள்ள 8 கமயூனிஸக் குழுக்களில் ஒன்று நேபாளத்தை குடியரசாக்க வேண்டும என்று பகிரஙகமாகவே கோரி வருகிறது—

தேசிய காஙகிரஸ் கட்சியுடன்



சந்திரசேகர்

கட்சி முறையைக் கொண்டு வர வேண்டும— இப்படி அவர் அதில் பிரஸ்தாபித்தார்—

இந்தியப் பிரதமர், வி பி சிங பெப்ரவரி 23 ஆம திகதி நேபாள சர்வதேச எல்லையை அண்டியுள்ள சித்தாமாரி பட்டி

[illegible] காத் [illegible] டார்கள் என்[illegible] [illegible]ர்க்கப்படும என்[illegible]

### நேபாளத்தின் வரலாற்றுப் பின்னணி

நேபானத்தின் வரலாற்றுப் பின்னணி என்ன? இமாலயப் பிரதேசத்தில் உள்ள நேபாளத்தின் விஸ்திரணம 54,000 சதுர மைல்— 1958 இல் அதன் சனத்தொகை 83,37,537— இதில் 97 சத வீத மானவர்கள் எழுத்தறிவு இல்லாதவர்கள்—

1846 இல் ரண குடுமபத்தவர்கள் மன்னரின் அதிகாரத்தைக் கைப்பற்றினார்கள்— பரமபரை பரமபரையாக பிரதமர் பதவியை

கும புதிய அரசில் இடமளிக்கப் பட்டது. எண்மர் அடஙகிய ஆலோசனைப் பேரவை அமைக்கப்பட்டது. தேர்தல் நடத்துவத என முடிவு செய்யப்பட்டது.

ரணா வமசத்தவர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் ஸ்திரமான அரசாஙகத்தை நடத்துவத சிக்கலாக இருந்தது. உறுதியளிக்கப் பட்ட சீர்திருத்தஙகள் அறிமுகமாகவில்லை.

அரசியல் அதிருப்தியினால் 29 அரசியல் கட்சிகளும, நேபாள காஙகிரஸின் ஒத்துழையாமை இயக்கமும தலையெடுத்தன.

சுயாதீன நீதி நிர்வாகம பொதுத் தேர்தல், பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தல், ஒழுங

இதனையடுத்து மன்னர் புதிய அரசமைப்பு ஒன்றை தயாரிக்க இருப்பதாகவும, காலப்போக்கில் தேர்தல்களை நடத்தவிருப்பதாகவும தனது திட்டஙகளை அறிவித்தார்.

இந்தப் பின்னணியில்தான் நேபாளத்தில் ஜனநாயகப் போராட்டஙகள் தலையெடுத்திருக்கின்றன.

கல்லுக்குள் ஈரம இருந்தால் அது கருணை. பனிக்கட்டிக்குள் கானல் என்றால் அது கிளர்ச்சி. பனிமலை கரையுமா? மலைச் சிகரம சரியுமா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும என்கிறார்கள் அரசியல் அவதானிகள்.

(ண)

# சீன நாட்டு மாணவர்கள் என்ன கேட்கிறார்கள்?

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கமயூனிஸம மண் கௌவி வரும அதேசமயம் கியூபாவும, சீனாவும இன்னும கமயூனிஸத்தை விடாப்பிடியாகக் கட்டிக் காத்து வருகின்றன,

கியூபா கடலில் மூழ்கினாலும சரி நாம கமயூனிஸத்தை கைவிடப் போவதில்லை "என காஸ்ட்ரோ திட்டவட்டமாக அறிவித்து விட்டார். முன்னர் ஓரளவு சீர்திருத்தத்தை அறிமுகம செய்து வந்தது சீனா, மாணவர்குள் அதிக ஜனநாயக உரிமைகளைக் கேட்க ஆரமபித்ததும, முதலுக்கே மோசம வந்து விடும என்பதை உணர்ந்து கொண்ட சீனத் தலைவர்கள் திருமபவும் இருமபுத் திரையை இழுத்துப் போர்த்திக் கொண்டனர்,

இப்போது சீனாவில் மக்கள் தினசரி என்ற பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியின்படி, சீன விவசாயிகள் இன்றைய தலைவர்களின் படங்களை விலை கொடுத்து வாஙகுவதைவிட மறைந்த நவசீன சிற்பி மாவோவின் படஙகளையே பெரிதும விருமபி வாஙகுகிறார்குளாம!

அதாவது மாவோவின் புகழ் மீண்டும சீனர்களிடையே செல்வாக்கு பெற்று வருகிறது, கமயூனிஸ சித்தாந்தஙகளை எடுத்துரைக்கும புத்தகஙகளின் விற்பனையும அதிகரிக்க ஆரமபித்திருக்கிறதாம!

ஏன் இந்த மாற்றம்?

இதை உண்மையில் மாற்றம் என்று சொல்வதற்கில்லை, ஏனெனில் வேறு ஒரு கட்சியோ அல்லது வேறு ஒரு சித்தாந்தமோ சீனாவில் இல்லை, தலையெடுக்கவும முடியாது,

அப்படி ஏதாவது ஆரமபிக்கப் பட்டால் என்ன நடக்கும என்பதைத்தான் கடந்த் வருடம பீக்கிங தியனமென் சதுக்கத்தில் நிகழ்த்திக்காட்டி விட்டனரே,

(து-032)

### கிழக்கில்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் நளின் செனவிரத்னவுடன் இக்குழுவினர் பேச்சு வார்த்தைகளை நடத்தினார்.

உயர்கல்வி, விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சர் ஜனாப் ஏ சி எஸ் ஹமீதும இக்குழுவினருடன் சேர இருந்தார்.

ஆகப் பிந்திய நிலைமைகள் குறித்து லெப்டினன்ட் ஜெனரல் நளின் செனவிரத்ன சுருக்கமாக இக்குழுவினருக்கு விளக்கம அளித்தார், இலஙகை பாதுகாப்பு அதிகாரிகுளுடனும அவர் விரிவான பேச்சு வார்த்தைகளை நடத்தினார்.

இப்பகுதியில் மக்களுக்கு ஏற்றதான ஒரு சூழ்நிலையை உருவாக்க நடவடிக்கை எடுக்குமாறும அவர் ஆலோசனை வழஙகினார்.

ஈ பி ஆர் எல் எப் ஈ என் டி எல் எப் ஆகியோர் காலி செய்த அலுவலகஙகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் காணப்பட்டனர்.

முகாமகளிலும, அரசியல் அலுவலகுஙகுளில் நாம இருப்போம, ஆயுதுஙகளை எடுத்துச் செல்ல மாட்டோம. தலைவர்களுக்குப் பாதுகாப்பு வழஙகவே ஆயுதஙகளை எடுத்துச் செல்வோம" என விடுதலைப் புலிகளின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை நேற்றும ஒரு தொகுதி இந்தியப் படையினர் தாயகம திருமபினர்,

4500 இந்தியத் துருப்பினரே இலஙகையில் இருப்பதாகவும, அவர்களும இமமாத இறுதிக்குள் சென்று விடுவார்கள் என்றும இலஙகை அரசு தெரிவித்திருக்கிறது.

கொழுமபிலுள்ள இந்தியத் தூதரக வட்டாரஙகளுக்கு விவரஙகள் அனுப்பப்படவில்லை. ஆதலால் துருப்புக்குள் தொடர்பான சரியான எண்ணிக்கை பற்றிக் கூறமுடியாதிருப்பதாக இந்தியத் தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த சில தினஙகளில் திருகோணமலையில் புதிய சமபவஙகுள் எதுவும நடைபெறவில்லை என பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

நகர எல்லைக்குள் இலஙகைப் பொலீஸார் வழமையான ரோந்துப் பணிகளை மேற்கொள்கின்றனர். இந்த ரோந்துப் பணி மற்றப் பகுதிகளுக்கும விரிவுபடுத்தப்படும.

இந்தியப்படை இருப்பதால் திருகோணமலையின் வெளிப் பகுதியில் ரோந்துப் பணி மேற்கொள்ளப்படுவதில்லை என அதிகாரிகுள் கூறினார்.

(ண-007)

# பாவிகளை மீட்கவே பரமன் பாடுபட்டார்

இறைவனின் அளவில்லாத அன்பு எமமை இவ்வுலகில் வாழ வைக்கின்றது, எல்லா மகத்துவத்தையும நிறைவாகக் கொடுத்த இறைவன் மனிதனை உண்டாக்கினார்,

தாம படைத்த அனைத்து சிருஷ்டிகளையும பாதுகாத்து ஆளும அதிகாரத்தையும மனிதனுக்கு வழங்கினார்,

ஐந்தறிவு படைத்த விலங்குகளிலும பார்க்க ஆறறிவு படைத்த மனிதன் ஆற்றல் மிக்கவன், நன்மை தீமை தெரிந்தவன். ஆகையால் தான் சிங்காரத் தோட்டத்தில் அவனை வைத்து அவனுக்குத் துணையாக ஓர் பெண்ணையும படைத்து அவளுக்கு ஏவாள் என்ற நாமத்தையும சூட்டினார்.

இறைவனின் கைவண்ணத்தில் உருவான இவ்விருவரும ஆரமப நாட்களில் மிகவும அந்நியோந்நியமாக இறைவனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து சிறந்த முறையில் வாழ்க்கை நடத்தினர்.

என்றாலும காலம செல்லச் செல்ல இவர்களின் சிறந்த வாழ்வைக் கெடுக்க ஒருவன் குறுக்கிட்டான்.

பயன்தான் இன்று மனிதவர்க்கம அனுபவிக்கும தொல்லைகள் துயர்கள், மரணங்கள்.

கவலைகளே இல்லாமல் ஆனந்த வாழ்வு நடத்திய அந்த ஆதாம ஏவாள் இருவரையும ஏமாற்றி இறைவனால் விலக்கப்பட்ட கனியை உண்ணுமபடி செய்தான்.

ஆசைகாட்டி மோசம செய்யும இந்த சாத்தானின் வார்த்தைகளைக் கேட்ட ஏவாள் இறைவனாக ஆசைப்பட்டு அவன் கோபத்துக்கு ஆளாகினாள். ஏவாள் மூலமாய் ஆதாமும விலக்கப்பட்ட கனியை உண்டு இறைவனின் கோபத்திற்கு உடந்தையானான்.

இறைவனின் கட்டளையை விட சாத்தானின் வார்த்தைகள் தான் உண்மை என்று எண்ணிய விபரீதத்தினால் இவர்கள் சிங்காரத் தோட்டத்தை இழந்து இறைவனின் தண்டனைக்குள்ளானார்கள்,

எங்கே நிமமதி? எங்கே நிமமதி? அங்கே எனக்கொரு இடம வேண்டும என்று கவிஞர்கள் பாடி இருப்பதை நாம கேட்டிருக்கின்றோம், அதுபோல இந்த ஆதாம் ஏவாள்

## கிறிஸ்தவ நற்பிரசாதம்

**— ஏ. கி. விக்டர் பெர்னாண்டோ —**

இறைவனால் மிகவும அழகாக உருவாக்கப்பட்டவன் தான் அவனும், சரீரம இல்லாதவனாய், பரலோகத்தில் இறைவனுக்கு பக்கத்தில் இருக்க படைக்கப்பட்ட அவன், ஆங்காரத்தினால் அந்த இடத்தை இழந்து போனான்.

சாத்தான் என்ற அவலப் பெயர் பெற்று நரகத்தில் தள்ளப்பட்டான். தான் நரகத்தில் இருந்து வேதனைப்பட்டால் எப்படி? ஏனையவர்களையும எப்படியாவது அந்த இடத்திற்கு அழைக்க வேண்டும என்று கஙகணம கட்டினான்.

அவன் செய்த சூழ்ச்சியின்

இருவரும நிம்மதி தேடி எங்கே போவது? யார் இவர்களுக்கு நிமமதி கொடுப்பது? ஒன்றும புரியாத நிலை.

நாஙகள் இறைவனை மறந்து அவரின் கட்டளையை மீறி நடந்தபடியால் இப்படியான கஷ்ட நிலைக்கு தள்ளப்பட்டு விட்டோமோ என்று அஙகலாய்த்தனர். அழுது புலமபி துன்புற்றனர், இறைவனின் மன்னிப்பை இரந்து கேட்டனர். இறைவனின் அளவில்லாத அன்பு அவர்கள் இருவரையும நீண்ட நாட்கள் அஙகலாய்க்க விடவில்லை,

தமமால் உண்டாக்கப்பட்

இவ்விருவரையும தாம கைவிட்டு விட்டால் இவர்களுக்கு வேறு யார் கைகொடுத்து உதவுவார்கள்?

அப்படியான ஒருவரும இல்லையே என எண்ணிய இறைவன், அவர்கள் இருவரும இருக்கும இடத்தில் கரணப்பட்டு தமது அன்புப் பார்வையால் அவர்களைப் பார்த்து தமது திருவாய் மலர்ந்து "உங்களை இரட்சிக்க ஒரு மீட்பரை அனுப்புவேன்" என்று வாக்குப்பண்ணினார்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட ஆதாம ஏவாள் இருவரும மனமகிழ்ந்து இறைவனுக்கு நன்றி செலுத்தினர். பாவ அடிமைத்

# அவரது அளவில்லாத அன்பு எம்மை வாழ வைக்கிறது

தனத்தில் இருந்த தமமை மீட்க இரட்சகர் ஒருவர் வருவார் என்ற நமபிக்கையில் தமது வாழ்நாட்களை செவ்வனே செலவழித்தனர்.

அன்று இறைவன் அளித்த வாக்குறுதிதான் பின்பு நிறைவேறியது, மீட்பரின் வருகையால் பாவத்தின் விலங்குகள் அறுக்கப்பட்டன. பாவ மரணத்தில் இருந்த அனைவரும மீட்புப் பெற்றனர்.

மண்ணவர்கள் பவம போக்க பாரினில் அவதரித்த விண்ணவர் வேந்தன் யேசுவை, வானோர் தொழுதிறைஞ்சும மன்னாதி மன்னர் யேசுவை, நாம எம கண்களால் காணாவிடிலும, "காணாமல் விசுவசிப்போர் என்றும் பாக்கியவான்கள்" என்று கூறியிருப்பதை உணர்ந்து, உத்தம சாஙகோபாஙகத்தில் உயர்ந்து உத்தமர்களாய் நல்வாழ்வு வாழ்ந்து பரலோகத்தில் அவரின் திருமுகத் தரிசனத்தை என்றும காணும பாக்கியம பெற நித்தம பணிவுடன் வேண்டிக் கொள்வோமாக!

இறைவனின் சமாதானம என்றும எம அனைவருடனும் இருப்பதாக!

(ஐ)



அவன் செய்த சூழ்ச்சியின் தமமால் உண்டாக்கப்பட்ட

# முதலை வாயில் சிக்கி தப்பினார்!

அவர் ஆஸ்திரேலிய நாட்டின் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர். பெயர் ஜானி பேன்ச்சோ. ஒரு நாள் அங்குள்ள டேலி ஆற்றில் நீந்திக் கொண்டிருந்தார்.

அப்போது 12 அடி நீள முதலை ஒன்று இவரின் தலையின் பின் பகுதியை கௌவிப்பிடித்தது...! இவரை தண்ணீருக்குள் இழுத்துச் செல்ல முயன்றது.

முதலைகள் நமமை தாக்கினால் அவைகளின் கண்களை குத்திக்கிழிக்க வேண்டும என்று ஜானியின் முன்னோர் முன்பு சொன்னது அப்போது இவருக்கு நினைவுக்கு வந்திருக்கிறது.

உடனே ஜானி. தனது பின் தலையை கௌவிக் கொண்டிருந்த முதலையின் கண்களை, தமது கைகளை பின்னால் நீட்டியபடி தேடிக் கண்டு பிடித்திருக்கிறார்!

கண்களை குத்தி தாக்கி இருக்கிறார். அவ்வளவுதான் முதலை வாயைப் பிளந்திருக்கிறது: அதன் பிடியில் இருந்து விடுபட்டிருக்கிறார் ஜானி.

அதற்குள் முதலை தண்ணீருக்குள் மூழ்கி மறைந்து ஓடியிருக்கிறது.

தனது தலையில் இருந்து ரத்தம பீறிட்டபடியே தண்ணீரில் நீந்தி கரை சேர்ந்திருக்கிறார் ஜானி.

பக்கத்தில் இருந்த ஒரு வீட்டை சென்று அடைந்து இருக்கிறார்.

அங்கிருந்து விமானம மூலம 125 மைல் தொலைவில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு போகப்பட்டிருக்கிறார்.

ஆஸ்திரேலியாவில் முதலைகள் கவனமாகப் பாதுகாக்கப்பட்டு வரும இனங்களில் ஒன்றாக விளங்குகின்றன. ஆனால் இந்தக் குறிப்பிட்ட முதலையைக் கண்டுபிடித்து ஆற்றில் இருந்து அதனை வெளியேற்ற இந்த சமபவத்துக்குப் பிறகு முடிவெடுத்து உள்ளார்களாம அங்குள்ள அதிகாரிகள்!

(ம—10)

## குறட்டையால் வரும் சேடு


பிரிட்டிஷ் பத்திரிகையான நியூ சைன்டிஸ்ட் ஒரு கட்டுரை வெளியிட்டிருக்கிறது- இரவில் தூங்கும பொழுது குறட்டை விடுவதால் மூளை மிகவும பாதிப்புக்கு ஆளாகிறது என்கிறது இக்கட்டுரை-

குறட்டை விடுவதால் மூச்சுக் குழாயின் மேற்பகுதியும பாதிக்கப்படுகிறது- தூக்கத்தில் மூச்சு விட முடியாததால் தான் குறட்டை வருகிறது என்ற இந்தக் கட்டுரை மேலும சொல்லுகிறது-

டாக்டர் ஜேமஸ் ஹார்ன் என்பவர் தூங்கும பொழுது மனிதன் நிலை பற்றி ஒரு ஆய்வு நடத்தி வருகிறார்-

குறட்டை விடும பழக்கமுடையவர்கள் இரவில் படுக்கு முன் "உற்சாக பானம" அருந்துவதைத் தவிர்க்க வேண்டும் என்கிறார் ஜேமஸ்-

(த—10)



# மன்னாரில் கட்டாக்காலிகளாக திரியும் கழுதைகளை அப்படியே விட்டுவிடுவதா?

## தென்னந் தோட்டக் காவல் வேலைக்கு பேணி வளர்த்துப் பயன் பெறலாம்

உலகில் காணப்படும பல மிருகங்களில் குதிரை, கழுதை, கோவேறு கழுதை போன்றன "இயக்குவைன்" இனத்தைச் சேர்ந்தன. இதில் கோவேறு கழுதையும், கழுதையும பிடிவாதக் குணம, முரட்டுச் சுபாவம போன்ற குணங்கள் உடையன.

இமமிருகங்கள் இரண்டாயிரம ஆண்டுகளுக்கு முன் பல கடின வேலைகளுக்கு உபயோகிக்கப்பட்டதை நாம புத்தகவாயிலாக அறிந்துள்ளோம.

இமமிருகங்கள் குறைந்த உணவுடன் நீண்ட நாட்கள் தொடர்ச்சியாக வேலை செயயும இயல்புடையன. இதில் கழுதை பொதிகளைச் சுமப்பதற்கும, கால்நடையாக நீண்ட தூரங்களைக் கடப்பதற்கும பாமர மக்களினால் பாவிக்கப் பட்டது.

இதன் தாய் – தந்தையர் "நீயூக்கியன்" கழுதை இனத்தைச் சேர்ந்தவைகளாக இருக்கலாம என நமபப்படுகின்றது.

இக்கழுதை இனம கி மு 4000 ஆண்டுகளுக்கு முன் மெசபத்தேமியா, எகிப்து போன்ற தேசங்களில் இருந்து கொண்டுவரப்பட்டன.


இவை அதிக உஷ்ணமுள்ள பிரதேசங்களிலும இடைப் பட்ட சீதோஷ்ண வலயங்களிலும உபயோகிக்கப்பட்டு வந்தன. பிடிவாதக் குணத்துக்குப் பெயர் பெற்ற இமமிருகங்களை முக்காலத்தவர்கள் இமசைப் படுத்தி, அதைத் துன்பப்படுத்தியும வேலை வாங்கினார்கள்.

ஆனால் ஒரு சில நாடுகளில் இவற்றை சிறு வயதிலிருந்தே பழக்கி எடுப்பதன் மூலம வீட்டுப் பிராணியாகப் பாவித்ததுமுண்டு. இவை கரடு முரடான பாதைகளில் மிகச் சுலபமாக தனது முதுகில் பொதிகளைச் சுமந்து செல்லும.

கிறிஸ்து பிறந்த நாட்களில் இமமிருகம கிறிஸ்து நாதரினாலும மற்றைய யூதர்களினாலும பாவிக்கப்பட்டு, கிறிஸ்தவர்களின் பைபிள் புத்தகத்தில் முக்கிய இடத்தை எடுத்துள்ளது–

மலைப் பிரதேசங்களில் வாழும கிராமிய மக்கள் தமது அன்றாட தேவைகளுக்காக பள்ளத்தாக்குகளில் உள்ள பட்டினச் சந்தைகளுக்கு இமமிருகங்களை அழைத்து வந்து தாம வாங்கிய பொருட்களை இக் கழுதைகளின் முதுகில் ஏற்றிச் செல்வதுடன், சிறு பெண்களையும, குழந்தைகளையும இதன் மேல் அமர்த்தி தம இருப்பிடம திருமபுவர்.

1956ஆம ஆண்டில் இந்திய மாநிலமான ராஜஸ்தான் மாநிலத்தில் 199,673 கழுதைகளும, உத்தரப் பிரதேசத்தில் 196,745 கழுதைகளும, தமிழ் நாட்டில் 100,690 கழுதைகளும இருந்ததாக 1960ஆம ஆண்டில் கணக்கிடப்பட்டுள்ளது.



இக்கழுதை இனங்கள் இலங்கைக்கு வந்த வெளிநாட்டுப் பிரமுகர்களினால் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது இலங்கையின் ஒருசில பிரதேசங்களில் இவை காணப்படுகின்றன.

மன்னாரில் தற்போது 1000க்கும மேற்பட்ட கழுதைகள் காணப்படுகின்றன. இவை பெருமபாலும சலவைத் தொழிலாளர்களினால் பாவிக்கப்பட்டு வந்ததாகக் கருதப்படுகின்றது.

இவர்கள் தமது அழுக்குத் துணிகளை இரண்டு மூடைகளாகக் கட்டி இதன் முதுகில் ஏற்றி குளங்களுக்கும, தமது வீட்டுக்கும எடுத்துச் செல்வதை மன்னார் வாசிகள் அறிந்திருக்கிறார்கள். ஆண் கழுதை, பெண் கழுதையிலும பார்க்கக் கூடிய பாரத்தைச் சுமக்கக் கூடியது.

கழுதையில் இரண்டு இனங்கள் உண்டு. ஒன்று சாமபல் நிறம. சிறியவை. மற்றது கூடிய வெள்ளை நிறங்கொண்ட பெரியவை. இவ்வினங்கள் அதிகமாக இந்தியாவிலும இலங்கையிலும காணப்படுகின்றன.

இதில் சிறியது, கூடிய மண் நிறத்தைக் கொண்டதாகவும, வெண்ணிற வரிகளைக் கால்களிலும கழுத்திலும கொண்டிருக்கும.

பெரியது கூடிய வெள்ளை நிறங்கொண்டனவாக இருக்கும. வெளிநாடுகளில் குறிப்பாக எகிப்து, டமஸ்கஸ், அரேபியா போன்ற பிரதேசங்களில் கழுதைகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

இதில் பிரான்ஸ் தேசத்துக் கழுதைகள் மிகப் பெரியன. இந்தியாவில் உள்ளவை மிகச் சிறியன. இக்கழுதை இனங்கள் 3½ தொடக்கம 3 வருடங்களில் தொழில் செய்வதற்கு உகந்ததாகும.

வயது வந்த ஆண் கழுதை ஒரு வருடத்தில் 160 தரம இன விருத்திக்காகப் பாவிக்கப் படலாம. ஆனால் ஒரு நாளில் இரு முறை மாத்திரம இன விருத்திக்காகப் பாவித்தல் உகந்ததாகும.

ஒரு பெண் கழுதையின் கர்ப்ப காலம 11½ தொடக்கம 12 மாதங்களாகும. பொதுவாக வேட்கை 2—7 நாட்கள் நீடிக்கும. ஆனால் 3ஆம நாளில் சினைப்படுத்துவது சிறந்ததாகக் கருதப்படுகிறது.

6 தொடக்கம 12 மாதங்கள் பாலூட்டும காலமாகும. ஆறு மாதங்களின் பின் குட்டியைத் தாயிலிருந்து பிரிக்கலாம. அதிகமாக ஒரு முறையில் ஒரு குட்டியை மாத்திரமதான் ஈனும.

முற்காலத்தில் கிரேக்க, அரேபிய வாசிகள் எப்படி ஒட்டகப் பாலை அருந்தினார்களோ அதே போன்று ஒரு சிலர் கழுதைப் பாலையும பருகினர்.

இதன் பால் அதிக போஷாக்கு



நிறைந்ததாகக் காணப்படுவதுடன், கடின உழைப்புகள் செய்பவர்களுக்கும சிறந்த உணவாகக் கருதப்பட்டது.

கழுதை மணித்தியாலத்துக்கு 3 தொடக்கம 5 கிலோ மீற்றர் தூரத்தைக் கடக்கக் கூடியது– அத்துடன் 25 தொடக்கம 32 கிலோ மீற்றர் தூரம வரை பிரயாணம செய்யும இதன் ஆயுள் 16 அல்லது 17 வருடங்க

---

# சோதிட சிந்தாமணி

சிந்தாமணி சோதிடர்: திரு. ஆர்வி

[18—3—1990 தொடக்கம 24—3—1990 வரை உள்ள பலாபலன்கள்]

### மேஷம்

அசுவினி பரணி கார்த்திகை 1ஆம கால்

மேஷம– கௌரவம, தேகாரோக்கியம நன்றாக இருக்கும. பொருளாதாரம முன்னை விட சிறப்பாக அமையும. பெரிய மனிதர்களின் சந்திப்பால் தொழில் துறையில் முன்னேற இடமுண்டு. வெளிநாட்டில் இருந்து கிடைக்கும செய்தி அதிர்ச்சியைத் தந்தாலும, கவலைக்கு இடமில்லை.

### சிங்கம்

மகம் பூரம உத்தரம 1ஆம கால்–

சிங்கம– வியாபாரத்தில் சரளமான நிலை இருந்தாலும, லாபம நிகரமாகக் கிடைக்கும. உறவினர்கள், நண்பர்கள் அன்புடனும ஆதரவுடனும நடந்து கொள்வார்கள். வெளிநாட்டுப் பிரயாணம ஒன்றுக்கு இடமுண்டு. பிள்ளைகளால் செலவுகள் ஏற்பட்டாலும மகிழ்ச்சியும ஏற்படும.

### தனு

மூலம பூராடம் உத்தராடம் 1ஆம் கால்–

தனு– தொழில், வியாபாரம போன்றவை செழிப்பாக நடைபெறும. அவற்றை விரிவுபடுத்தவும கூடும. அதனால் ஓரளவு ஆதாயம கிடைக்கும. விடுபட்ட நண்பர்கள் வந்து சேர்வர்கள். நீண்ட நாட்களாகத் திட்டமிட்ட காரியங்கள் சில நிறைவேறும. தாய் வழியில் ஒரு துக்க சமபவம நடைபெறும.

### ரிஷபம்

கார்த்திகை 2 3 4ஆம் கால்கள்– ரோகிணி – மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் கால்கள்–

ரிஷபம– தொழில், வியாபா

### கன்னி

உத்தரம 2ஆம 3ஆம 4ஆம் கால்கள்– அத்தம் சித்திரை 1 ஆம கால்கள்–

கன்னி– பணப் புழக்கம நன்றாக இருக்கும. அதற்கேற்ப

### மகரம்

உத்தராடம் 2 3 4ஆம் கால்கள்– திருவோணம் – அவிட்டம 1 – 2ஆம் கால்கள்–

மகரம– பொருளாதாரம நன்றாக இருக்கும. கொடுக்கல் –

---

# சிந்தாமணி எண் சோதிடம்

கார்த்திகை 2 3 4ஆம் கால்கள்– ரோகிணி – மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் கால்கள்–

ரிஷபம்– தொழில், வியாபாரம போன்றவை அபிவிருத்தியுடன் காணப்படும். முன்னைவிட அதிக பலனை எதிர்பார்க்கலாம். கடன் தொல்லை தராது. செலவுகள் தாராளமாக ஏற்பட்டாலும சமாளித்துக் கொள்ளலாம். கலைஞர்கள் புகழடைவார்கள். குடும்ப நலம நன்று.

உத்தரம 2ஆம 3ஆம 4ஆம் கால்கள்– அத்தம் சித்திரை 1 ஆம கால்கள்–

கன்னி– பணப் புழக்கம நன்றாக இருக்கும். அதற்கேற்ப செலவினங்களும உண்டாகும். விருந்தினரை உபசரிக்க வேண்டியிருக்கும். வீடு, நிலம், வாகனம போன்ற இனங்களால் வருமானம அதிகரிக்கும். கோர்ட் வழக்குகள் வெற்றியாக முடியும். வாரக் கடைசியில் தேகநலம பாதிக்கப்படலாம்.

உத்தராடம் 2 3 4ஆம் கால்கள்– திருவோணம் – அவிட்டம 1 – 2ஆம் கால்கள்–

மகரம– பொருளாதாரம நன்றாக இருக்கும். கொடுக்கல் – வாங்கல் நல்லபடியாக நடைபெறும. பெரிய இடத்து ஆதரவு, அரசாங்க உதவி போன்றவை கிடைக்கும். காதல் விவகாரங்கள் மனதுக்கு கவலை தரும். எதிர்பாராத வகையில் ஒரு பிரயாணத்தை மேற்கொள்ள நேரிடலாம்.

## மிதுனம்

புனர்பூசம 4ஆம் கால்– பூசம் ஆயிலியம்–

மிதுனம– போதியளவு வருமானம உண்டாகும். கொடுக்கல் – வாங்கல் திருப்திகரமாக நடைபெறும. புதிய தொழில்களில் சிலர் ஈடுபட்டு அதிக ஆதாயத்தை அடைவார்கள். அயலவருடன் சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும சுமுகமான முறையில் தீர்த்து வைக்கப்படும.

## துலாம்

விசாகம 4ஆம கால்– அனுஷம கேட்டை–

துலாம– இவர்களின் தேகாரோக்கியம, கௌரவம, புகழ் போன்றவை சிறப்புடன் காணப்படும. பண வசதி போதியளவு கிடைக்கும. கடன்கள் நிவர்த்தியாகும. பழைய முதலீடுகள் பலன் தரும. அயலவர்கள் உதவியாக இருப்பார்கள். கோர்ட் வழக்குகள் வெற்றியாக முடியும.

## கும்பம்

பூரட்டாதி 4 ஆம கால்– உத்திரட்டாதி – ரேவதி–

கும்பம– அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முன்னேற்றம காணப்படும. சமபளம உயரும. சக தோழர்களின் உதவியால் வேலைப்பளு குறைந்து மன மகிழ்ச்சி அடைவார்கள். நீண்ட நாட்களாகத் திட்டமிட்ட பிரயாணம கைகூடும. காதல் விவகாரங்கள் மகிழ்ச்சியளிக்கும.

## கடகம்

மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் கால்கள்– திருவாதிரை – புனர்பூசம 1 2 3ஆம கால்கள்–

கடகம– உத்தியோகத்தில் மேன்மை உண்டாகும. சிலருக்கு இடமாற்றங்களும ஏற்படலாம. மேலதிகாரியின் ஆதரவு கிடைக்கும. குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியுடன் காணப்படும உறவினர்கள் ஒன்று சேர்ந்த ஒரு சுப காரியத்தை நிறைவேற்றி வைப்பார்கள்.

## விருச்சிகம்

சித்திரை 3 4ஆம் கால்கள்– சுவாதி விசாகம் 1 2 3 ஆம் கால்கள்–

விருச்சிகம– எதிர்பாராத விதமாகச் செலவினங்கள் அதிகரித்தாலும சமாளித்துக் கொள்ளலாம. புதிதாக வாகனம, நிலம, வீடு போன்றவை வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படும. கணவன் – மனைவி உறவு மகிழ்ச்சியுடன் இருக்கும. பிள்ளைகளால் செலவுகள் ஏற்படும.

## மீனம்

அவிட்டம் 3 4 ஆம் கால்கள்– சதயம – பூரட்டாதி 1 2 3 ஆம் கால்கள்–

மீனம– குடும்பத்தில் மகிழ்ச்சியான காரியங்கள் நடைபெறும. நண்பர்கள், உறவினர்கள் அன்புடன் பழகுவார்கள். திரும்பி வராது என்றிருந்த பணம, பொருள் திரும்பி வந்து சேரும. பிள்ளைகளால் செலவும மனக்கவலையும உண்டாகலாம. கடிதப் போக்குவரத்து அனுகூலமாகும.

# சிந்தாமணி எண் சோதிடம்

NUMEROLOGY

[18—3—1990 தொடக்கம 24—3—1990 வரை உள்ள பலாபலன்கள்]

## 1

1 10 19 28 ஆம திகதிகளில் பிறந்தவர்களுக்கு–

தனதானிய இலாபம, சமாதான வாழ்வு, சத்துரு ஜயம, எதிர்பாராத பிரயாணம, பிள்ளைகளால் செலவு, கலைஞர்களுக்கு புகழ்.

அதிஷ்ட நாட்கள்– செவ்வாய், வியாழன்.

## 2

2 11 20 29 ஆம திகதிகளில் பிறந்தவர்களுக்கு–

தொழில் அபிவிருத்தி, திட்டங்கள் நிறைவேறல், குடும்ப மனஸ்தாபம, வீண் கவலை, அதிக செலவு, கடன் தொல்லை. இனபந்துக்களால் உதவி.

அதிஷ்ட நாட்கள்– திங்கள், வியாழன்.

## 3

3 12 21 30 ஆம திகதிகளில் பிறந்தவர்களுக்கு–

ஆரோக்கிய அபிவிருத்தி, காரியானு கூலம, கொடுக்கல் வாங்கலில் பிணக்கு, இனசன விரோதம, காதலில் மகிழ்ச்சி, வாகன சுகம,

அதிஷ்ட நாட்கள்– ஞாயிறு, சனி.

## 4

4. 13 22 31 ஆம திகதிகளில் பிறந்தவர்களுக்கு–

அதிகார விருத்தி. இனசன கொண்டாட்டம, இல்லச் சிறப்பு பலவித பொருட்பேறு, பெரியோரால் மதிப்பு, எதிர்பாராத செலவு, பிரயாணம.

அதிஷ்ட நாட்கள்– திங்கள், செய்வாய்.

## 5

5 14 23 ஆம திகதிகளில் பிறந்தவர்களுக்கு–

தொழில் அபிவிருத்தி, பதவி உயர்வு, சமபள ஏற்றம, தனித்த நிலை, குடும்ப சுகக் குறைவு, காரியங்களில் தடங்கல், புத்திரர்களால் உதவி, வீண் கவலை.

அதிஷ்ட நாட்கள்– புதன், வெள்ளி.

## 6

6 15, 24 ஆம திகதிகளில் பிறந்தவர்களுக்கு–

பிரயாசை மிகுதி, வாக்கு வசீகரம, ஸ்திரீ மூலமான உதவி, சத்துருவால் தொல்லை, பொருள் வரவு, காதலில் கலக்கம, குடும்ப சுகக் குறைவு,

அதிஷ்ட நாட்கள்– ஞாயிறு, புதன்.

## 7

7 16 25 ஆம திகதிகளில் பிறந்தவர்களுக்கு–

பலவித பொருட்பேறு, புத்திர சுகம, புணவரவு, வாக்கு வன்மை தொழிற்சித்தி, புதிய ஸ்தானம, வாகனத்தால் செலவு இரத்தக் காயங்கள் ஏற்படல்.

அதிஷ்ட நாட்கள்– திங்கள். செவ்வாய்.

## 8

8 17 26 ஆம திகதிகளில் பிறந்தவர்களுக்கு–

எடுத்த காரியங்களில் வெற்றி. அதிக யோசனை, சயன போசன சுகம, இல்லச் சிறப்பு, எதிர்பாராத செலவு, சுப காரியங்களில் ஈடுபடல்.

அதிஷ்ட நாட்கள்– திங்கள், புதன். வெள்ளி.

## 9

9 18 27 ஆம திகதிகளில் பிறந்தவர்களுக்கு–

தொழில் சித்தி, கோபமிகுதி, சரீர சுகக் குறைவு, பொருள் வரவு, வாகன லாபம, சயன போசன சுகம, பிள்ளைகளால் செலவு, காதலில் விரக்தி.

அதிஷ்ட நாட்கள்– புதன், சனி.

அத்துடன் 25 தொடக்கம 32 கிலோ மீற்றர் தூரம வரை பிரயாணம செய்யும இதன் ஆயுள் 16 அல்லது 17 வருடங்களாகும.

இதன் கால்களில் உள்ள குளம்பில், குதிரையைப் போன்று லாடம அடிப்பது சிறந்ததாகக் கருதப்படுகிறது. மன்னாரில் உள்ள கழுதைகள் தற்போது கவனிப்பாரற்ற பட்டணத்திலும அதை அண்டியுள்ள கிராமங்களிலும வாழ்வதைக் காணக் கூடியதாக உள்ளது.

இவற்றை நன்கு பயன்படுத்தினால் பலவித பிரயோசனங்களைப் பெறலாம். இதன் சலமும, சாணமும தென்னந் தோட்டங்களுக்கு நல்ல பசளையாக கருதப்படுகிறது.

அத்துடன் தென்னந் தோட்டங்களை அழிக்கும கருவண்டுகளுக்கு இதன் மணம எதிரியாகக் கருதப்படுவதனால் பலர் தமது தென்னந் தோட்டங்களில் இவற்றை கட்டி வளர்ப்பதைக் காணலாம்.

குறிப்பாக மன்னாரில் உள்ள சலவைத் தொழிலாளர்களும காடுகளில் விறகு வெட்டுபவர்களும கழுதைகளை உபயோகிப்பார்களாயின் தமது வேலைச் சுமையைக் குறைப்பதுடன் கட்டாக்காலிகளாகத் திரியும இம மிருகங்களைப் பயனுள்ளவைகளாக ஆக்க முடியும.

## குள்ளமான மரம்

உலகிலேயே மிகக் குள்ளமான மரம் "வில்லோ ஆப் கிரீன்லேண்ட்" என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது- இந்த மரம் 6 அங்குல உயரம இருக்கும்–

(த—024)

சிந்தாமணி

# கேள்வி? பதில்

திரிஞானி

வீ எஃப் புகாரி,
தொட்டாமுல்லை—

கே— முஸாபிர் வயதானவரா? இளைஞரா? இந்த சந்தேகத்தை தீர்ப்பீர்களா?

ப— முஸாபிர் என்றால் வழிப்போக்கன்— ஊர்சுற்றி என்றெல்லாம் பொருள் உண்டு— எந்த வயதிலும் எவனும் வழிப்போக்கனாக இருக்கலாம்— சிந்துவின் முஸாபிர் அறிவில் வயதானவர்— உணர்வில் இளைஞர்!

★

என் சண்முகதாஸ்,
கொழும்பு—15

கே— நீங்கள் ஒரு சமயம் சொல்லியிருந்தது போல் என் மனைவி காதைப் பிடிக்க விடுகிறாளில்லை— என்ன செய்யட்டும்

ப— பிடிக்க முடியா விட்டால் கடிக்க முயலுங்கள்— அதில் தானே சுவையே இருக்கிறது!

★

சஹ்றாஜ்,
அனுராதபுரம்—

கே— மழைக் காலங்களில் மட்டும் ஏன் தவளை கத்துகிறது? வெயில் காலங்களில் ஏன் கத்துவதில்லை?

ப— தவளைகள் மழைக் காலங்களில்தான் ஜோடி சேர்கின்றன— அதனால் தான் அவ்வளவு ஆர்ப்பாட்டம்!

★

நஸீயா கப்பார்,
தர்கா நகர்—

கே— முற்காலத்துப் பெண்கள் அச்சம், நாணம் மடம் போன்றவற்றைக் கடைப்பிடித்தார்கள்! இக்காலப் பெண்கள் எதைக் கடைப்பிடிக்கிறார்கள்?

ப— முற்காலத்து ஆண்கள் முரடர்களாய் இருந்தார்கள்! அதனால் பெண்கள் அவர்களைக் கண்டு அச்சம் கொண்டார்கள்— நாணம் கொண்டார்கள் — அடங்கியும் நடந்தார்கள்! இக்காலத்துப் பெண்கள் எதிர்மாறாக இருப்பதால் ஆண்களன்றோ அச்சமும் அடக்கமும் கொண்டு நடக்கிறார்கள்!

★


ஸ்டேனிஸ்
இரத்தினபுரி—

கே— உங்களுக்கு அரசியலில் ஈடுபட ஆசை ஏற்பட்டதுண்டா?

ப— ஒரு நாளும் ஏற்பட்டதில்லை! ஏனென்றால் அரசியலில் புகுந்தவர்கள் படும் பாட்டை நான் அருகிலிருந்து கண்டவனல்லவா!

கள் யானைச் சவாரி செய்வதில்லையே ஏன்?

ப— யார் சொன்னார்கள் யானைச் சவாரி செய்வதில்லை என்று? "வனமோகினி" என்ற பழைய தமிழ்ப் படத்தில் இலங்கையிலிருந்து சென்ற சினிமா நடிகை தவமணிதேவி யானைச் சவாரி செய்திருக்கிறாரே? அவரைத் தவிர இந்தியாவில் பெண்கள் ஒரு புறமாக இரு கால்களையும் போட்டுக் கொண்டு ஸ்கூட்டர் சவாரி செய்வது போல் யானைச் சவாரியும் செய்கிறார்களே!



ஷேக்ஸ்பியர்

★

எம் எம் எம் சதாத்
அபுக்காகம—

கே— தங்களின் மனைவி நீங்கள் மறுமணம் செய்வதை விரும்புவாரா?

ப— எந்த மனைவியும் விரும்பாத ஒன்றாச்சே அது!

★

செல்விகள் ரிஸ்னா, ஏ ரிஸ்வியா,
ஷியானா ஹமீட்
தர்கா நகர்—

கே— திறமையை வளர்க்கவும் வறுமையை ஒழிக்கவும் என்ன வழி?

ப— இரண்டுக்கும் ஒரே வழி முயற்சிதான்!

★

எஸ் ஜோன்சன்
பி திருச்செல்வம்
செட்டியார் தெரு—

கே— பெண்களின் கண்

ப— "பிரேக்" இல்லாமல் ஆடிப் பார்க்கலாம்!

★

ஏ ஆர் எம் மன்ஜூட்
எஸ் கய்ருன்நிசா
கும்புக்கந்துர—

கே— நீங்கள் உங்கள் மனைவியிடம் எச்சந்தர்ப்பத்தில் இரக்கம் காட்டுவீர்கள்? எச்சந்தர்ப்பத்தில் கோபம் காட்டுவீர்கள்?

ப— அறியாமையைக் காணும் போது இரக்கம் காட்டுவேன்! அகம்பாவத்தைக் காணும் போது கோபம் காட்டுவேன்!

★

செல்வி பயாஸா ஜிப்ரி,
களுத்துறை—

கே— உங்களிடம் ஒளிந்து கொண்டிருந்த திறமைகளை எப்போது நீங்கள் முதன் முதலாக உணர்ந்து கொண்டீர்கள்?

ப— என்னை ஒரு பெண் முதன் முதலில் காதலிக்க ஆரம்பித்த போது! அப்போது தானே என் கவிதைகள் ஊற்றெடுத்தன!

★

ரி ராசமாணிக்கம்
கந்தளாய்—

கே— கடவுள் மனிதனைப் படைத்தானா? மனிதன் கடவுளைப் படைத்தானா? இதில் எது உண்மை?

ப— இரண்டும் உண்மை!

★

பஸ்னா, ஸீனியா
கட்னியா
காலி—

கே— உங்களுக்கு அன்புப் பரிசாக எதைத் தந்தால் ஏற்றுக் கொள்வீர்கள்?

ப— உங்கள் உள்ளத்தை!



மைக்கல் ஜாக்சன்

# உதய கீதம்

# இதய நாதம்

இலங்கையிலுள்ள இசைக் கலைத் துறையின் இலை மறைகாய்க் கலைஞர்களை எல்லாம் அறிமுகப்படுத்தும் "உதயகீதம்" நிகழ்ச்சி... உள்ளூர்க் கலைஞர்களை ஊக்குவிக்கும் ஒரு உவகை தரும் நிகழ்ச்சியாகும்!

இந்நிகழ்ச்சியில் இம்முறை (9–3–90) இலங்கையின் பிரபல (சிங்கள — தமிழ்த் திரைப்பட... வானொலி வாஹினி மெல்லிசை) இசையமைப்பாளரான எம் எஸ் செல்வராஜாவின் இசையமைப்பில் மூன்று பாடல்கள் இடம்பெற்றன!

"நான்கு புதிய பாடகர்கள் பாடுகிறார்கள்" என்று அறிவிப்பாளர் அருணா செல்லத்துரை ஆரம்பத்தில் குறிப்பிட்ட போதிலும் மூவர்தான் பாடினார்கள்!

முதலாவதாக வெள்ளவத்தையைச் சேர்ந்த நாகப்ரியா ராமதாஸ் — என் சேகர் இயற்றிய "சந்தோஷப் பாக்கள் நான் பாடும் நேரம்... உள்ளங்கள் பூவாகுமே..." என்ற பாடலை தானே இயற்றிய "பூந்தென்றலே நீ பாடி வா... என் நெஞ்சிலே பண்பாடவா" என்ற பாடலை அருமையாகப் பாடி அனைவரையும் கவர்ந்தார்!



வில்சனும் ராணி குலசேகரமும் பாடும் காட்சி

இயற்றல் வரிகள் மட்டுமின்றி இப்பாடலுடன் பின்னணியில் இணைந்தொலித்த "லலலா... லலலா... ஆ... ஆ... ஆ..." என்ற "ஹம்மிங்" குரலுக்குரிய இனிமையான பெண் குரலும் இதயத்தைக் கவர்ந்து இக்கானத்துக்கே மேலும் மெருகூட்டியது!

இப்பாடல் எம் எஸ் செல்வராஜாவின் இசை அமைப்பில் சற்று வித்தியாசமானதாகவே அமைந்து தென்னிந்தியத் திரைப்படப்பாடல்களை நினைவூட்டியது!

பாலமுரளியின் ஒவ்வொரு பாடல் வரிகளுடனும் பின்னணியில் இணைந்தொலித்த பெண் குரலுக்குரியவர் யாரோ? அந்தக் "ஹம்மிங்" குரலுக்குரியவரை

மின்றி கர்னாடக இசைப் பிரியர்களையும் "கவரும் கான"மாகவே அமைந்தது!

வி எஸ் மதியழகனின் இயற்றலில் இலக்கிய நயமோடிய இப்பாடலை ஹெந்தளை வத்தளையைச் சேர்ந்த எஸ் என் வில்சனும் மீசாலையைச் சேர்ந்த ஜெகராணி குலசேகரமும் இனிமையாகப் பாடினார்கள்!

நல்ல குரல் வளமிக்க வில்சன் ஒரு கால கட்டத்தில் சுமார் 15 வருடங்களுக்கு முன் ஈழத்துப் பொப்பிசைத் துறையில் கொடி கட்டிப் பறந்த சிறந்த இசையமைப்பாளரும் "கிற்றார்" வாத்தியக் கலைஞரும் பாடகருமாவார்!

வானொலியில் ஒலிக்கும் பல பழைய தமிழ்ப் பொப்பிசைப் பாடலிசைகளுக்குச் சொந்தக்காரர் இவர்தான்!

ஆம — இவரது "தண்டர் ஸ்பார்க்ஸ்" குழுவினரின் இசையமைப்பில் பாடிப் பிரபலமானவர்கள்தான் "சின்னமாமி" புகழ் நித்தி கனகரெட்ணம், ஏ ஈ மனோகரன் மற்றும் பல பொப்பிசைப் பாடகர்களுமாவர்!

அந்த வில்சன் தான் மெல்லிசையிலும் தன்னால் நல்லிசை தர முடியுமென்பதை எம் எஸ் செல்வராஜாவின் இசையமைப்பில் பாடி "உதயகீதம்" நிகழ்ச்சியைச் சிறப்பித்தார்! "உதயகீதம்" — ரசிகர்களைக் கவர்ந்த "இதயநாத"மாகியது!

நம் நாட்டிலும் நல்ல பல பாடகர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு "உதயகீதம்" நிகழ்ச்சியில் இடம்பெற்ற இப்பாடல்களே அதற்குச் சான்றாகும்!

அழகாகப் பாடி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார்!

இரண்டாவதாகப் பல "உதயகீதம்" நிகழ்ச்சிகளுக்கு இசையமைத்தவரும் வாஹினியின் வேறு சில நிகழ்ச்சிகளில் பாடியவருமான இளையதலை



## தயாரிப்பு: சஞ்ஜயன்

## ரூபவாஹினியின் தமிழ் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| திங்கள் — தமிழ் நாடகம் | 6–55 |
| செவ்வாய் — கலையரங்கம் | 6–55 |
| புதன் — ராகபாவம் | 5–30 |
| உரை நிகழ்ச்சி | 6–15 |
| வியாழன் — ஊர்க்கோலம் | 6–55 |
| வெள்ளி — காதம்பரி | 6–55 |
| சனி — தமிழ்ப் பாடல்கள் | 6–15 |

# ஒலி ஒளி உருவம்

ரூபவாஹினி
RUPAVAHINI

## சுயம்புலிங்கம் பாகவதர் பேட்டி

எஸ் ஆர் சுயம்புலிங்க பாகவதர் என்ற ஒரு முதுபெரும் சங்கீத வித்வான் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு (13–3–90) இலங்கை வானொலியில் "கலையகத்தில் கலைஞர்" என்ற நிகழ்ச்சியில் பேட்டி காணப்பட்டார்.


பேட்டி கண்டவர் சற்சொருபவதி, பேட்டியைத் தயாரித்து அளித்தவர் எஸ் ஜீ என் புஷ்பரத்ஜனம்.

இந்தப் பேட்டி வெகு கலகலப்பாகவே இருந்தது, சுயம்புலிங்க பாகவதருக்கு இப்போது வயது 75 ஆகிறது, அப்படியிருந்தும் அவர் தங்கு தடையின்றி வெகு சரளமாகப் பேசி

யும் வாசிப்பதில் அவ்வளவு பாண்டித்தியம் உண்டு பாகவதருக்கு!

அதே போல தமிழ், சிங்கள, ஆங்கில சினிமாப் படங்களுக்குக் கூட இசை அமைத்தவர் சுயம்புலிங்க பாகவதர், "எனி பண்ட் வாக்" என்ற ஆங்கிலப் படத்தில் பாகவதரின் இசை பிரமாதமாக இருந்ததாம!

சுயம்புலிங்கம் முதலில் தமது



ஈடுபட ஆசை ஏற்பட்டதுண்டா?

ப– ஒரு நாளும் ஏற்பட்டதில்லை! ஏனென்றால் அரசியலில் புகுந்தவர்கள் படும் பாட்டை நான் அருகிலிருந்து கண்டவனாச்சே!



வைஜயந்திமாலா

★

எம் டீ நசுறுதீன்
பாலைத்தோப்பூர்–

கே– "எப்படிப்பட்ட அருமையான பெண்களையும் நம்பாதே" என்று சொல்கிறார்களே– அது ஏன்?

ப– அதனால் தானே "நம்ப நட... நம்பி நடவாதே" என்று ஷேக்ஸ்பியர் சொல்லியிருக்கிறார்!

★

நவ்சாட்
தெல்தோட்டை–

கே– ஒரு ஆண் – அளவுக்கு அதிகமாக மகிழ்வது எப்போது?

ப– அவன் விரும்பியதை மனைவி பரிபூரணமாக நிறைவேற்றும்போது!

★

றெக்ஸ்பிலிப்
கொழும்பு – 13

கே– இக்காலத்துப் பெண்கள் எதிலும் ஆண்களுக்கு சளைத்தவர்கள் அல்லர்! ஆனால் அவர்

★

எஸ் ஜோன்சன்
பி திருச்செல்வம்
செட்டியார் தெரு–

கே– பெண்களின் கண்களுக்கு இருக்கக்கூடிய சக்திகள் என்னென்ன?

ப– அவள் கண்களில் அன்பும் உண்டு! அம்பும் உண்டு! பாசமும் உண்டு! மோசமும் உண்டு! காதலும் உண்டு! மோதலும் உண்டு!

★

ஏ நஸார்
கல்முனை–5

கே– என்னைத் தவிர உலகத்தில் உள்ள மனிதர்களுக்கெல்லாம் வாய்ப்பூட்டுப் போட்டால் என்ன நடக்கும்?

ப– உமக்கு மட்டும் தொண்டை கிழியும்!

★

எம் ஏ சில்வெஸ்ட்டர்
ஹட்டன்–

கே– பழம்பெரும் நடிகைகளான டி ஆர் ராஜகுமாரியும் வசுந்தராதேவியும் வைஜயந்திமாலாவும் என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள்?

ப– மூன்றிருவரும் இங்கும் அங்கும் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்! பின்னவர் பார்லிமெண்ட் மெம்பராய் இருக்கிறார்!

★

சுந்தர்
கலஹா–

கே– இசை அமைப்பதில் சிறந்த இளையராஜாவிற்கு "இசைஞானி" என்ற பட்டம் போல் – எதில் சிறந்தவரென உமக்குத் "திரிஞானி" பட்டம்?

ப– திரிப்பதில்!

★

எப் நாஸர்,
முல்லைத்தீவு–

கே– மைக்கல் ஜாக்சன் போல் பிரேக் டான்ஸ் ஆடுவதற்கு என்ன செய்யலாம்?



மைக்கல் ஜாக்சன்

★

எம் ஏ ஜப்பார்,
நிந்தவூர்–06

கே– ஒரு பெண் ஆண்களிடம் பேசக் கூடாதது எது? ஒரு ஆண் பெண்களிடம் பேசக் கூடாதது எது?

ப– ஆணிடம் சம்பளத்தைக் கேட்கக் கூடாது! பெண்ணிடம் வயதைக் கேட்கக் கூடாது

★

ஏ ஓ முகமமட் கலீலுல்
றகுமான்
சம்மாந்துறை–

கே– உலகில் ஆரம்பமுள்ளது எது? ஆரம்பமில்லாதது எது?

ப– ஆரம்பமுள்ளது கோடு! ஆரம்பமில்லாதது வட்டம்!

★

ஏ ஏ மொஹமட் றிஸ்வான்,
அக்குறணை.

கே– நீர் காணாமல் போனால் உம்மைக் கண்டு பிடிக்க ஏதாவது அடையாளங்கள் உண்டா?

ப– தலையின் மீது அறிவு ஒளி வட்டமாக வீசும்! அதில் இருந்து கண்டு கொள்ளலாம்!

★

எம் நளீஸ்,
அனுராதபுரம்.

கே– நீங்கள் படித்த நாவல்களில் உங்கள் மனதைக் கவர்ந்த நாவல் எது?

ப– அலெக்சாண்டர் டூமாஸ் எழுதிய "மேன் இன் த ஐயன் மாஸ்க்"
(Man in the Iron Mask)

★

ஏ ஆர் எம் அன்வர்டீன்,
தெல்தோட்ட.

கே– இக்காலத்தில் என்ன தொழில் செய்தால் முன்னேறலாம்?

ப– சாரதித் தொழில்!

★



நாகப்ரியா ராமதாஸ்

பாலமுரளியின் ஒவ்வொரு பாடல் வரிகளுடனும் பின்னணியில் இணைந்தொலித்த பெண் குரலுக்குரியவர் யாரோ? அந்தக் "ஹம்மிங்" குரலுக்குரியவரையும் நிகழ்ச்சியில் காட்டியிருக்கலாமே?

மூன்றாவதாக இடம்பெற்ற "பொன் வீணை விரல் மீட்டும் போது... பூமேனி குளிர் காயும் மாது" என்ற பாடல் இன்றைய இளைய தலைமுறையினரை மட்டு



கடந்த இரு வாரங்களாக (மார்ச் 6ம 13ம) வாஹினியின் "கலையரங்கம்" நிகழ்ச்சியில் யாழ்ப்பாணம் கலை மன்றம் வழங்கிய "பாமாவிஜயம்" நாட்டிய நாடகம் ஒளிபரப்பானது! ஆர் ரவீந்திரனின் தயாரிப்பிலும் திரிபுர சுந்தரி யோகானந்தத்தின் நடன அமைப்பிலும் நட்டுவாங்கத்திலும் யாழ்ப்பாணம் வீரமணி ஐயரின் பிரதி இசையிலும் ராமகுமாரசாமி...சத்யபாமா ராஜலிங்கத்தின் பாட்டிலுமாகப் பரிணமித்த "பாமா விஜயம்" டிவி பார்வையாளர்களின் பாராட்டுதல்களை நிச்சயம் பெற்றிருக்கும் என்பதில் சந்தேகமில்லை! "பாமா விஜயம்" நாட்டிய நாடகத்தில் இடம்பெற்ற நடனக் காட்சி ஒன்றையே இங்கே காண்கிறீர்கள்–

## பலநூறு பாம்புகள்!

வாஹினியில் ஒளிபரப்பான "லைப் ஒன் ஏத்" தொடரில் "விக்டேஸ் ஒப் த ட்றை லாண்ட்" என்னும் தலைப்பில் ஓணான், முதலை, ஆமை – பாம்புகள் பற்றிய ஆங்கில நிகழ்ச்சி... அச்சம், அருவருப்பு – ஆச்சரியம் ஆகியவற்றுடன் அனைவரையும் ஆர்வத்துடன் அவதானிக்க வைத்த விவரணச் சித்திரமாகியது!

இந்த ஊர்வன ஜந்துக்களை "க்ளோஸ்–அப்" காட்சிகளில் பார்க்கும் பொழுது பயங்கரமாகவே இருந்தன!

குட்டி ஈனும் பாம்புகளை பல நூறாகப் பார்க்கும் பொழுது அவற்றைப் படம் பிடித்தவரைப் பாராட்டத்தான் வேண்டும்! அவற்றின் வாழ்க்கையே ஒரு அதிசயம்தான்!

கலப்பாகவே இருந்தது, சுயம்புலிங்க பாகவதருக்கு இப்போது வயது 75 ஆகிறது, அப்படியிருந்தும் அவர் தங்கு தடையின்றி வெகு சரளமாகப் பேசினார், அதை விட, வெகு நேர்த்தியாகப் பாடினார், பேச்சில் சிறிது வயதுத் தளர்வு தெரிந்தாலும், பாட்டில் அறவே தெரியவில்லை, குரல் கணீரென்று கம்பீரமாக இருந்தது,

சற்சொரூபவதியின் ஒரு வினாவுக்கு விடையளிக்கையில் தமக்குப் "பாகவதர்" என்ற பட்டத்தை 1941 — 1942 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் வைத்த கலையரசு சொர்ணலிங்கம் சூட்டியதாகப் பதிலிறுத்தார் சுயம்புலிங்கம்,

அடுத்து ஒரு கேள்வி கேட்டார் சற்சொரூபவதி, "பாகவதர் என்றால் அர்த்தம் என்ன?" என்பதே அந்தக் கேள்வியாகும், தாம் தாங்கி நிற்கும் பட்டத்தின் பொருள் என்ன என்பது சுயம்புலிங்கத்திற்கு சரியாகத் தெரியவில்லை, பாகவதம் என்றால் தெய்வ பக்தி, ஒழுக்கம் பண்பு, ஐதீகம், புலால் உண்ணாமை என்றெல்லாம் கூறினார், உண்மையில் இதுவல்ல அர்த்தம், பாகவதர் என்றால் "சங்கீத விற்பன்னர்" என்பது தான் பொருள்,

(விரிவான விளக்கத்தை இன்றைய இலக்கியபீடத்தில் காண்க)

பழைய சிங்களக் கலைஞர்களை "டவர் ஹோல் ஆர்ட்டிஸ்ட்" என்று அழைக்கிறார்கள், அந்தக் காலத்தில் டவர் ஹோலில் நடந்த நாடக நிகழ்ச்சிகளில் பங்குகொண்ட முதுபெரும் கலைஞர்கள் அவர்கள்.

அவர்களைப் போலவே சுயம்புலிங்க பாகவதரும் டவர் மண்டபத்தில் நடைபெற்ற சிங்கள நாடகங்களுக்கு கூட ஹார்மோனியம் வாசித்திருக்கிறார், சுயம்புலிங்க பாகவதரை ஒரு "ஹார்மோனிய சக்கரவர்த்தி" என்று கூடச் சொல்லலாம். ஹார்மோனி



தகப்பனாரான ராமையா பாகவதரிடம்தான் இசை பயின்றார். ஹார்மோனியத்திற்கும் அவரே குரு, பின்னர் பல முன்னணி வித்துவான்களிடம் பயின்று சிறப்பெய்தினார், நாடகத்தில் நடிக்கும் ஆற்றலும் பெற்றவர் சுயம்புலிங்கம், யாழ்ப்பாணத்தில் "மயான காண்டம்" நாடகத்தில் நடித்து புகழும், பட்டமும் பெற்றவர் அவர்,

பஜனைப் பாடல்கள் பாடுவதில் பாகவதர் இணையற்றவர், அன்று "தீனபந்தோ விட்டலா" என்ற பஜனைப் பாடலை, தாமே ஹார்மோனியம் வாசித்துக் கொண்டு பாடிக் காட்டினார், குரலும் பாவமும் அற்புதமாக இருந்தன. கேட்போர் உருகும் வண்ணம் அமைந்தது அந்த பஜனைப் பாடல்.


பின்னர் தமது கர்நாடக இசை ஞானத்தையும் காட்டினார் பாகவதர். அவர் பாடிய "நடஜன பரிபாலனா" என்ற தியாகராஜ கீர்த்தனை அட்சர சுத்தியாக ராகவிந்யாசத்துடன் அழகாகப் பாடப்பட்டது, கேட்போர் லயிக்கும் வண்ணம் இருந்தது. மொத்தத்தில் ஒரு நிறைவான பேட்டியைக் கேட்ட திருப்தி ஏற்பட்டது மனதுக்கு!

— சஞ்ஜயன்,

— 3 —

# விற்காது என்ற கொம்பியூட்டர் இன்று பல்லாயிரம் விற்கிறது

## ஜோன் எவான் நியுமன் தந்த கணினி முழு உலகையும் ஆட்சி புரிகிறது



சரித்திரத்தில் தனியிடம் பெற்ற மார்க் 1 கொம்பியூட்டர், (ம)

ஐ பி எம் என்ற International Business Machines நிறுவனம் இன்று உலகிலேயே கொம்பியூட்டர் தயாரிப்பில் முதலிடத்தை வகிக்கின்றது.

டாக்டர் ஹேராலித்தின ரபியூலேட்டிங் மெஷின் (Tabulating Machine) நிறுவனத்துடன் மேலும் பத்த ஸ்தாபனங்கள் கூட்டுச் சேர்ந்த 1896 இல் I B M நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது.

இன்று கொம்பியூட்டர் தயாரிப்பில் முன்னணி வகிக்கின்ற I B M அன்று அலுவலக உபயோகங்களுக்குத் தேவையான அலுவலக உபகரணங்கள் கணக்கிடும் பொறிகள், தட்டச்சு இயந்திரங்கள் என்பவற்றை தயாரித்து வந்தது.

இந்த பொறிகளில் கணிதப் பொறிக்கு அதிக தேவை ஏற்பட்டது. பொறிகளில் இருந்தும் செய்த புதிய வடிவங்களுடன் புதிய உபயோகங்களுடன் அடிக்கடி புதிய பொறிகளை உருவாக்க I B M நிறுவனத்தில் நூற்றுக்கணக்கான "ஆஸ்தான" விஞ்ஞானிகள் இருந்தனர்.

இந்த கால கட்டத்தில் மின்சாரத்தின் சக்தி அறியப்பட்டு மின் சக்தியால் இயங்கும் பொறிகளுக்கு மதிப்பு அதிகரித்தது.

எனவே தனது பொறிகளின் விற்பனை அதிகரிக்க பொறிகளை மின்பொறிகளாக மாற்றி அமைக்க I B M இட்டது. I B M ஆஸ்தான விஞ்ஞானிகளுக்கு இதற்குரிய கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன.

ஆனால் விஞ்ஞானிகள் பல வாரம் கலந்தாலோசித்தும் அவர்களால் ஒரு தீர்வும் காணமுடியவில்லை.

அவ்வேளையில் அமெரிக்க (Harvard) ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்தார் ஹவார்ட் ஐக்கன் (Howard Aiken)

தங்களுக்கு ஐக்கனின் உதவியும் இருந்தால் விரைவில் மின் சக்தியால் இயங்கும் கணிதப் பொறி உருவாக முடியும் என்று I B M விஞ்ஞானிகள் கருதி தமது கருத்தை நிறுவனத்திற்கு தெரிவித்தனர்.

**சித்ரா அருள்ராமலிங்கம்**
**Diploma in Computer Science, Madurai University**

எனவேதான் ஒரு தேநீர் விருந்துக்கு வரும்படி பேராசிரியர் ஐக்கனை I B M அழைத்திருந்தது. அந்த அழைப்பிதழ்தான் போன வாரம் பேராசிரியர் ஐக் படுகின்ற புகழ் பெற்ற I B M நிறுவனம் கொம்பியூட்டர் தயாரிப்பில் இறங்கலாமா என யோசித்தது. கொம்பியூட்டர் தயாரிப்பினால் ஆதாயம் உண்டா என்று தனது கணக்காளர்களை ஆய்வு நடாத்தச் சொன்னது.

பல வார கால கணக்காராய்வுகளுக்குப் பின்னர் கணக்காளர் குழு என்ன சொன்னது?



கொம்பியூட்டர் மொழிகளை உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்த டாக்டர் கிரேஸ்ஹொப்பர். (ம)

"கொம்பியூட்டர் உற்பத்தியால் I B M க்கு பெரிய ஆதாயம் இல்லை. உலகத்தின் தேவைக்கு வருடத்திற்கு பத்து கொம்பியூட்டர் போதுமானது. அந்தப் பத்தில் இன்று முன்னணியில் உள்ள I B M கொம்பியூட்டரைத்தான் விற்க முடியும். எனவே கொம்பியூட்டர் தயாரிப்புத் திட்டத்தை கைவிடுவதுதான் நல்லது"

யோசிக்கப்பட்டன.

Mark 1 பத்து கூட்டல்களை ஒரு செக்கனில் செய்தது. பத்து இலக்க எண்களைப் பெருக்கி விடைதர பத்து செக்கன் எடுத்தது. அந்தக் கால கட்டத்தில் இவை பெரும் சாதனைகளேதான்!

Mark 1 இயங்கும் போது காது செவிடாகிற மாதிரி பெரும் இரைச்சலைத் தந்தது. "ஆயிரம் பாட்டிமார் ஒரு அறைக்குள் இருந்து அளவளாவிக் கொண்டும், இரும்பு ஊசிகளால் பின்னிக் கொண்டும் இருந்தால் எப்படி சத்தம் இருக்குமோ அப்படி இரைச்சலோடு Mark 1 இயங்கியதாக" ஒரு குறும்புக்கார பத்திரிகை அன்று விமர்சித்து இருந்தது.

Mark 1 இயங்கத் தேவையான கட்டளைகள், தரவுகள் என்பன துளை காகித நாடாக்கள் மூலம் கொடுக்கப்பட்டன.

உலகிலே முதலாவது தானியங்கி பொறி என்ற மகிமையும், உலகிலே முதலாவது மின்னியக்க கணிதப் பொறி என்ற பெருமையும், உலகில் உருவாக்கப்பட்ட பொறிகளில் பிரமாண்டமான பொறி என்ற தகைமையும் பெற்ற மார்க் 1 கொம்பியூட்டர் சரித்திரத்தில் தனியிடம் பெறுகிறது.

1944 ஆம் ஆண்டளவில் டாக்டர் ஜோன் வொன் நியூமன் (Dr John Von Neumann) கொம்பியூட்டர்கள் என்றால் இப்படித் தான் இருக்க வேண்டும் என்று சில வரைவிலக்கணங்களை வகுத்து வெளியிட்டார். அவரது கூற்றுப்படி.

"கொம்பியூட்டர்கள் மனித உதவியின்றி கூடுமானவரை தாமாகவே இயங்க வேண்டும்.

ஆனால் அதற்கிடையில் இரண்டாவது உலக மகா யுத்தம் ஆரம்பமானதால் அமெரிக்க பாதுகாப்பு புத்துறை ஒரு புதிய இரகசிய திட்டம் ஒன்றைச் செயல்படுத்த எண்ணியது இதனால் 1944 இல் ஆரம்பித்த எட்வாக் 1952 இல் தான் முழு உருவம் பெற்றது.

அமெரிக்கா இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது இராணுவத்துக்கு உதவக் கூடிய வகையில் சில கொம்பியூட்டர்களைத் தயாரிக்க எண்ணியது.

யுத்தத்தின் போது ஆகாயத்தில் பறக்கின்ற எதிரியின் விமானத்தை தரையில் இருந்து சுடுவதி, கடலில் செல்கின்ற எதிரியின் கப்பல் மீது ஆகாயத்திலிருந்து குண்டு போடுவது போன்ற செயல்களுக்கு சில கணித வேலைகளை சீக்கிரமாக செய்ய வேண்டியிருந்தது. இதனை சுடுகலன் வாய்ப்பாடுகள் (Firing Tables — என்று சொல்வர் இதனை மனிதர் போடும் போது காலதாமதமானது. தவறுகளும் நேர்ந்தன.

அது மாத்திரமல்ல பட்ஜெட் சம்பள பட்டுவாடா போன்ற விஷயங்களிலும் விரைவாகவும் தப்பில்லாமலும் கணித வேலைகள் செய்ய வேண்டி இருந்தன. இவற்றிற்கெல்லாம் ஒரு கொம்பியூட்டரைத் தயாரிக்க பெனிசில்வேனியா (Pennysylvania) சர்வகலாசாலை பேராசிரியர்களின் உதவி கோரப்பட்டது.

ஜோன் மவ்ஷிலி (John Mauchly) ஜே எக்கார்ட் (J Eckert) என்ற இரு பேராசிரியர்கள் 1943 இல் இராணுவத் தேவைகளுக்காக ஒரு கொம்பியூட்டரை உருவாக்க ஆரம்பித்தனர். 1946 இல் மூன்று அறைகளையுடைய ஒரு வீட்டின் பரப்பை அடைக்கக்

(Universal Automatic Computer) யூனிவாக் 1- உலகில் விற்பனை செய்யப்பட்ட முதலாவது கொம்பியூட்டரும் இதுதான். 1951 இல் அமெரிக்காவின் குடிசன மதிப்பு பணியகம் (Census Bureau) இதனை விலை கொடுத்து வாங்கியது. இந்தக் கொம்பியூட்டர் இரவும் பகலுமாக இருபத்தி நான்கு மணிநேரமும் தொடர்ந்து 12 வருடங்கள் இந்த பணியகத்தில் இயங்கியது.

1955 ஆம் ஆண்டுக்குள் 48



மார்க் 1 கொம்பியூட்டரை உருவாக்கிய ஹவார்ட் ஐக்கன் (ம)

யூனிவாக் கொம்பியூட்டர்களை தயாரித்த அமெரிக்க ரயில் நிறுவனம் ஆயுட் காப்புறுதி நிறுவனம் மின்சாரக் கூட்டுத்தாபனங்கள், ஆகியவற்றுக்கு விற்று பெரும் தொழிலதிபர்களாகி விட்டனர் மவ்ஷிலியும் எக்கார்ட்டும்.

இவர்கள் உருவாக்கிய தொழில் நிறுவனம் இன்றும்

களுக்கு ஆரம்பம் என்று கருதப்படுகிறது.

கொம்பியூட்டர் தலைமுறைகளில் யூனிவாக் கொம்பியூட்டர்கள் முதலாம் தலைமுறை கொம்பியூட்டர்கள் என்று குறிக்கப்படுகின்றன.

இந்த முதலாம் தலைமுறை கொம்பியூட்டர்களின் காலத்தில் கொம்பியூட்டர் துறையில் பல மாற்றங்களும் ஏற்பட்டன,

கொம்பியூட்டர் என்றால் வெறும் கணக்குப் போடும் பொறி என்ற நிலை மாறி, கொம்பியூட்டர் எண்ணோடு, எழுத்தையும் பரிவர்த்தனை செய்ய வல்லது என்ற நிலை தோன்றக் காரணமாயிருந்தது யூனிவாக்

Compute கொம்பியூட் என்ற சொல், லத்தீன் மொழியிலிருந்து வந்தது, கொம்பியூட் என்றால் கணித்தல் கணக்குப் பார்த்தல், மதிப்பீடு செய்தல் என்று பொருள்படும், ஆரம்ப கால ஆங்கில அகராதிகளில் Computer [கொம்பியூட்டர்) (Computator) கொம்பியூட்டேட்டர் என்ற சொற்கள் கணக்குப் பார்க்கும் தொழிலை செய்பவர்களைக் குறிக்க உபயோகிக்கப்பட்டு வந்தன.

பின்னர் கணிதப் பொறிகள் மக்களிடையே புழக்கத்திற்கு வந்ததும், இந்தப் பொறிகளையும் கொம்பியூட்டர் என்றே குறிப்பிட்டனர், இதனாற்றான் முழுக்க முழுக்க கணிதப் பொறி

தேர்ச்சிபெற்றிருக்க வேண்டியிருந்தது.

கொம்பியூட்டருக்கு கட்டளைகள் (Instructions) கொடுக்க — அவற்றிலுள்ள சுவிட்சுகளை (Switch) இயக்கத் தெரிந்திருக்க வேண்டியிருந்தது.

கொம்பியூட்டருக்கு சுவிட்சுகள் "On" போட்டிருக்கும் நிலை நிலை எனவும், சுவிட்சுகள் அணைந்திருக்கின்ற நிலை "Off" நிலை எனவும் உள்ள இரு நிலைகளை வைத்து,


எண்ணடி இரண்டு என்ற Binary பைனரி கணித முறையில System —

"On" என்ற நிலைக்கு 1 என்ற இலக்கமும் "Off" என்ற நிலைக்கு சைபர் "0" இலக்கமும் கொடுத்து கட்டளைகள் எழுதப்பட்டன.

கொம்பியூட்டர் என்ற மெஷினுக்கு (Machine) புரிந்த மொழியான "ஒன்று" "சைபர்" இலக்கங்களில் எழுதப்பட்ட கொம்பியூட்டர் மொழி மெசின் லாங்குவேஜ் (Machine Language) எனப்பட்டது. கொம்பியூட்டரின் பிறவி மொழி எனக் கூறக்கூடிய இந்த மொழியை இயந்திர மொழி என்று நாம் அழைக்கலாம்.

இயந்திர மொழியில் எழுதப்பட்ட கட்டளைகளை நிரைப்படுத்தி இந்தக் கட்டளைக்கு அடுத்ததாக செய்ய வேண்டிய கட்டளை இது என்று வரிசைப்படுத்தி எழுதப்படுவது கொம்பி

# ‘கொம்பியூட்டர்’ என்ற ‘கணினி’யின் கதை



சித்ரா அருள்ராமலிங்கம்
Diploma in Computer Science, Madurai University

எனவேதான் ஒரு தேநீர் விருந்துக்கு வருமபடி பேராசிரியர் ஐக்கனை I B M அழைத்திருந்தது—அந்த அழைப்பிதழ்தான் போன வாரம பேராசிரியர் ஐக்கனுக்கு வந்த கடிதம—

அந்த அழைப்பிதழ் பேராசிரியரை வியப்பில் ஆழ்த்தியதற்கும் காரணம் இருந்தது—

அந்தக் காலத்தில் பல்கலைக் கழக வட்டாரங்களுக்கும தொழில் நிறுவனங்களுக்கும இடையில் ஒரு சொல்லத் தெரியாத வெறுப்பு திரை இருந்தது—

பல்கலைக்கழக பேராசிரியர்கள், விஞ்ஞானிகள் என்போர் "ஏட்டுச் சுரக்காய்கள்" அவர்களின் கருத்துக்கள், ஆய்வுகள், தொழில் முறையில் செயல்படுத்த முடியாதவை— அதேவேளையில் தொழில் துறையில் கண்டுபிடிக்கப்படும புது விஷயங்களை கறாராக விமர்சிப்பவர்கள்—

இவ்வாறு தொழில் நிறுவனங்களுக்கு பல்கலைக்கழக வட்டாரங்களைப் பற்றிய தப்பபிப்பிராயம இருந்தது—

பல்கலைக்கழக வட்டாரங்களும பிரபல தொழில் நிறுவனங்கள் பற்றி நல்ல அபிப்பிராயம கொண்டிருக்கவில்லை—

"மக்கள் சேவை" "விஞ்ஞான வளர்ச்சிக்கு ஆதரவு" என்ற போர்வைகளில் இந்த தொழில் நிறுவனங்கள் தம் சொந்த ஆதாயம, முதலீடு, விளமபரம, வியாபாரம என்பவற்றிலேயே குறிக்கோளாய் இருக்கின்றன— தொழிலாளர் வர்க்கத்தை சுரண்டி பிழைக்கின்றன என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தொழில் நிறுவனங்களை எண்ணின—

ஓரளவில் இந்த எண்ணம சரியென்றே சொல்லலாம—

1947 இல் கொமபியூட்டர்கள் ஆரமப கால வாழ்க்கையை தொடங்கியிருந்த வேளையில் இன்று கொமபியூட்டர் என்றால் I B M என்று சொல்லப்படும் அளவுக்கு உள்ள I B M

கொமபியூட்டரைத்தான் விற்க முடியும— எனவே கொமபியூட்டர் தயாரிப்புத் திட்டத்தை கைவிடுவததான் நல்லது"

இதனால் 1954 வரை I B M கொமபியூட்டர் தயாரிப்பில் இறங்கவில்லை—

இந்த உண்மை தற்பொழுது பிரசுரமாகியுள்ள I B M சுயசரிதையில் கூறப்பட்டுள்ளது—

எனவே இப்படிப்பட்ட கருத்த வேறுபாடுகள் இருந்த வேளையில் பேராசிரியர் ஐக்கனை I B M தேநீர் விருந்துக்கு அழைத்தது— பேராசிரியருக்கு வியப்பாயிருந்தது—

தேநீர் விருந்தின் போது பேராசிரியரிடம I B M தயாரித்திருந்த இயக்கவியல் (Mechanical) கணிதப் பொறி ஒன்றை காட்டினார்கள்— இந்த கணிதப் பொறியை மின்சக்தியால் இயங்க வைக்கக் கூடிய ஒரு பொறியாக மாற்றியமைத்து தரமுடியுமா என்று I B M நிறுவனத்தினர் வினாவினார்கள்— இந்தத் திட்டத்தில் உதவுவதற்கு I B M நிறுவனத்தின் "ஆஸ்தான" விஞ்ஞானிகளின் ஒத்துழைப்பும நல்க தயாராக இருப்பதாக I B M கூறியது—

பிறகென்ன?

1937 இல் (Mark 1) மார்க் 1 என்ற பிரமமாண்டமான கணிதப் பொறி உருவாகத் தொடங்கி 1944 இல் பணி நிறைவு பெற்றது— இந்த இராட்சத இயந்திரத்தின் நீளம 51 அடி, உயரம 8 அடி மின்சார ஒட்டத்தின் போது காந்தத் தன்மையை அடைந்து அதனால் இயங்குகின்ற "ரிலே" சுவிட்சுகள் (Relay Switches) மூலம இந்தப் பொறி கணிதங்களை செய்தது— இந்தப் பொறியினுள்ளே ஏழு லட்சத்திற்கும அதிகமான உதிரிப்பாகங்கள் இருந்தன— இந்த பகுதிகளை இணைப்பதற்கு 500 மைல்களுக்கும மேலான நீளம உடைய வயர்கள் (Wire) உப

தான் இருக்க வேண்டும என்று சில வரைவிலக்கணங்களை வகுத்து வெளியிட்டார்— அவரது கூற்றுப்படி—

"கொமபியூட்டர்கள் மனித உதவியின்றி கூடுமானவரை தாமாகவே இயங்க வேண்டும—

அவற்றிற்கு தரப்படுகின்ற தரவுகள், கட்டளைகள் யாவும கொமபியூட்டர் இயங்க ஆரமபிக்க முன்னரே கொமபியூட்டர் உள்ளே சேமித்து வைக்கப்பட வேண்டும— இதனை Stored Program Concept ஸ்ரோர்ட் புரோகிறாம கொன்செப்ட் அதாவது கட்டளைகள் சேமிக்கும தன்மை என்று சொல்வர்—

தரவுகளும, கட்டளைகளும இரு நிலை (Two State) பண்பில் தரப்பட வேண்டும— இதற்கு Binary System பைனரி சிஸ்டம என்ற எண்ணடி இரண்டு முறையில் கட்டளைகள் எழுதப்பட வேண்டும—

என்பன முக்கிய இலக்கணங்களாக இருந்தன— தற்கால கொமபியூட்டர்கள் அன்று டாக்டர் நியூமன் வகுத்த இலக்கணப்படியே உருவாக்கப்பட்டும செயல்பட்டும வருவதால் —

டாக்டர் நியூமன் தற்கால கொமபியூட்டர் இயலின் சித்தாந்தங்களின் தந்தை என்ற புகழைப் பெறுகிறார்—

இந்த வரைவிலக்கண அடிப்படையில் டாக்டர் நியூமன் தலைமையில் Edvac (Electronic Discrete Variable Automatic Computer) எட்வாக் என்று பொறியை உருவாக்க அமெரிக்கா முயன்றது

ஜே எக்கார்ட் (J Eckert) என்ற இரு பேராசிரியர்கள் 1943 இல் இராணுவத் தேவைகளுக்காக ஒரு கொமபியூட்டரை உருவாக்க ஆரமபித்தனர்— 1946 இல் மூன்று அறைகளையுடைய ஒரு வீட்டின் பரப்பை அடைக்கக்

கூடிய அளவினதான 30 டொன் நிறையுள்ள Eniac (Electronic Numerical Integrator and Calculator) எனியாக் என்ற கொமபியூட்டர்வெளிவந்தது—

இந்தக் கொமபியூட்டர் உள்ளே 18,000 வெற்றிடக் குழாய்கள் எனப்படும ரேடியோ வால்வுகள் (Valves) பூட்டப்பட்டிருந்தன— இதனால் இந்த கொமபியூட்டர் இயங்க 130 கிலோ வாட் சக்தி தேவைப்பட்டது— நயகரா நீர்வீழ்ச்சியில் உற்பத்தியாகும மின்சாரத்தை போல் 3 மடங்கு மின்சார சக்திக்கு இது சமனாகும—

எனியாக் துளை அட்டைகள் மூலம கட்டளைகளையும தரவுகளையும பெற்று முடிவுகளை அட்டைகளில் துளைபோட்டு தெரிவித்தது— ஒரு செக்கனில் 5000 கணித்தல்களை செய்தது— உலக மகா யுத்தத்தின் போது இது ஆற்றிய சேவை பெரிதும பாராட்டப்பட்டது— 1955 இல் தான் எனியாக் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டது—

எனியாக்கை செய்த மவ்ஷிலியும எக்கார்ட்டும எனியாக்கின் வெற்றி கண்டு இதே அடிப்படையில் வியாபார நோக்கில் கொமபியூட்டர்களை உருவாக்க திட்டமிட்டனர்—

அவர்களின் திட்டத்தில் 1949 இல் உருவானததான் Univac—1

நிறுவனம மின்சாரக் கூட்டுத்தாபனங்கள், ஆகியவற்றக்கு விற்று பெரும தொழிலதிபர்களாகி விட்டனர் மவ்ஷிலியும எக்கார்ட்டும.

இவர்கள் உருவாக்கிய தொழில் நிறுவனம இன்றும Sperry Corporation ஸ்பெரி கூட்டு தாபனம என்ற பெயரில் கொமபியூட்டர், கொமபியூட்டரோடு சமபந்தப்பட்ட உதிரிப்பாகங்கள் என்பவற்றை தயாரித்து வருகிறத.

1952இல் யூனிவாக் கொமபியூட்டர் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பெரும பங்கு வகித்தத. மொத்தம ஏழு சதவீதமான வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் ஐஸனோவர்தான் மகத்தான வெற்றி பெற்று அமெரிக்க ஜனாதிபதியாவார் என்று கணித்துக் கூறியத யூனிவாக். அப்படியே முழுவாக்குகளும எண்ணி முடிக்கப்பட்ட போத பெரும வாக்குகள் வித்தியாசத்தில் ஜனாதிபதியாக ஐஸனோவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அன்றிலிருந்து இன்று வரை அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்களில் கொமபியூட்டர் கணிப்பு என்பத முக்கிய விஷயமாகி விட்டது.

யூனிவாக்கின் வழிவந்த (Maniac) "மெனியாக்" என்ற கொமபியூட்டரின் உதவியால்தான் ஹைட்ரஜன் குண்டு (Hydrogen Bomb) உருவாகியதாக சொல்லப்படுகிறத,

வால்வுகளால் இயங்கும யூனிவாக் கொமபியூட்டர்கள் தான் இன்றைய கொமபியூட்டர்

சொற்கள் கணக்குப் பார்க்கும தொழிலை செய்பவர்களைக் குறிக்க உபயோகிக்கப்பட்டு வந்தன.

பின்னர் கணிதப் பொறிகள் மக்களிடையே புழக்கத்திற்கு வந்ததும, இந்தப் பொறிகளையும கொமபியூட்டர் என்றே குறிப்பிட்டனர், இதனாற்றான் முழுக்க முழுக்க கணிதப் பொறிகளான மார்க், எனியாக் போன்றவையும கொமபியூட்டர் என்றே அழைக்கப்பட்டன.

பின்னர் கணக்குப் பார்க்க என்று ஆரமபித்த பொறிகள் எண்ணோடு எழுத்தையும பரிவர்த்தனை செய்ய ஆரமபித்த போத,

கணக்குப் பார்க்கும பொறிகளுக்கு கல்குலேட்டர் Calculator என்றும் எண்ணோடு எழுத்தையும பரிவர்த்தனை செய்து தகவல் பரிமாற்றத்திற்கு ....(Information Processing) (இன்போமேஷன் புரொசசிங) உதவுகின்ற பொறிகள் கொமபியூட்டர் என்றும அழைக்கப்பட்டன.

தமிழில் "மானி" என்ற சொல் அளவிடும கருவிகளைக் குறிப்பிடுவதாகும, உதாரணமாக வெப்பதை அளவிடும தேர்மா மீட்டர் (Thermometer) கருவியை அழகிய தமிழில் வெப்பமானி என்கின்றோம.

எனவே கல்குலேட்டர் என்ற கணக்குப் பார்க்கும மானியை கணனி என்றும,

கணக்கு கணித்தல் என்று தகவல் பரிமாற்றம செய்யும கொமபியூட்டர் என்ற மானியை கணினி என்றும அழைப்பது பொருத்தமானத.

அதே வேளையில் விஞ்ஞான கண்டு பிடிப்புகளான பஸ், சைக்கிள், ரேடியோ என்பவற்றை அவற்றின் ஆங்கில உச்சரிப்புடன் தமிழில் சேர்த்துக் கொண்டது போல் கொமபியூட்டர் என்ற ஆங்கில உச்சரிப்போடு அந்தச் சொல்லையும நாம சேர்த்துக் கொண்டால் நல்லதல்லவா?

ஆரமப காலத்தில் கொமபியூட்டரோடு தொடர்பு கொள்ள மின்னியல் துறையில்

எனக் கூறக்கூடிய இந்த மொழியை இயந்திர மொழி என்று நாம அழைக்கலாம.

இயந்திர மொழியில் எழுதப்பட்ட கட்டளைகளை நிரைப்படுத்தி இந்தக் கட்டளைக்கு அடுத்ததாக செய்ய வேண்டிய கட்டளை இது என்று வரிசைப் படுத்தி எழுதப்படுவத கொமபியூட்டர் புரோகிறாம் (Computer Program) ஆகும. இதனைத் தமிழில் செயல் திட்டம என்று அழகாகக் கூறலாம.

இயந்திர மொழியில் எழுதப்பட்ட செயல் திட்டப் பிரகாரம கொமபியூட்டரின் சுவிட்சுகளை சரிப்படுத்தினால்தான் கொமபியூட்டர் நாம விருமபியவாறு இயங்கும.

இந்தச் செயலை செய்யவல்லவர்களாக மின்னியல் துறை நிபுணர்கள் இருந்தார்கள்.

விஞ்ஞானிகள் கணித நிபுணர்கள் கொமபியூட்டரை தங்கள் பிரச்சினைகளுக்கு உபயோகப் படுத்த, தமது துறைக்கோ, அல்லது தமது பிரச்சினைக்கோ எதுவித சமபந்தமும இல்லாத இந்த மின்னியல் துறை நிபுணர்களின் உதவியை நாட வேண்டியிருந்தது—

இதனால் அவசர வேலைகள் காலதாமதமாகின, புரியாத துறைகளில் மின்னியல் நிபுணர்களால் திறமாக இயங்க முடியவில்லை. அது மாத்திரமல்ல, சமபந்தப்பட்ட துறைகளின் ரகசியத் திட்டங்களை பலரும அறியக் கூடிய ஆபத்தான சூழ்நிலை உருவாகவும ஏதுவாக இருந்தது—

இயந்திர மொழியில் மார்க், யூனிவாக் கொமபியூட்டர்களுக்கு செயல் திட்டம அமைத்துக் கொடுப்பதில் ஒரு வித்தகர் இருந்தார், அவர் டாக்டர் கிரேஸ் ஹொப்பர் (Dr Grace Hopper) என்ற கணிதப் பேராசிரியர்.

இன்று வர்த்தகத் துறைக்கு உதவுகின்ற "கோபல்" (Cobol) என்ற கொமபியூட்டர் மொழி உருவாக முக்கிய காரணகர்த்

(15 ஆம பக்கம பார்க்க)



# முஸாபிர் பார்வையில்

சிந்தாமணி 25-02-1990 இதழில் "உலமாக்கள்" சமுதாயத்தைக் குழப்பலாமா?" எனும் வினாவை எழுப்பி சமுதாயத்தின் சிந்தனையை சீண்டி விட்டிருந்தேன்—

அது சன்மார்க்க இதயங்களிடையே நல்ல தாக்கத்தை ஏற்படுத்தி விட்டிருக்கிறது என்பதை முஸாபிருக்கு வந்த கடிதங்களே புரியவைத்தன— பலர் முஸாபிரின் சிந்தனைகளை வரவேற்றே எழுதியிருந்தனர்—

முஸாபிர் பிரஸ்தாப தலைப்பில் முன்வைத்த சிந்தனைகள் யாவை?

"... அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை 64 வருடம் வரலாற்றுப் பாரம்பரியம் மிக்கதொரு பேரியக்கம்— இதனைக் கட்டிக்காக்க வேண்டியது சமுதாயத்தின் கடமை!

"... அதை விடுத்து உலமாக்கள் ஒவ்வொரு குழுவாகப் பிரிந்து ஒவ்வொரு உலமாச் சபையை உருவாக்குவது சமுதாயத்தை பலவீனப்படுத்தும்— ஏற்கனவே இருக்கின்ற அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாச் சபையின் ஒரே கொடியின் கீழ் ஒன்றிணைவதே சாலச் சிறந்தது!

"... அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் சமகால நடவடிக்கைகள் மீது எவருக்கேனும் அதிருப்தி — முரண்பாடு இருக்குமேயானால் அவற்றை உள்ளிருந்தே ஜனநாயக முறைப்படி பேசித் தீர்த்து ஒரு கருத்துப் புரட்சியையேற்படுத்துவதே இஸ்லாம் காட்டும் "மசூரா" முறையாகும்!"

— இவ்வாறு முஸாபிர் முஸ்லிம் சமுதாயத்தை வழிநடத்த வேண்டிய உலமாக்களின் ஒற்றுமை தொடர்பாக சில சிந்தனைகளை முன்வைத்திருந்தேன்—

அரும்பெரும் உலமாக்களால் அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டு தியாகசீலர்களின் உழைப்பினால் கட்டி வளர்க்கப்பட்ட 64 வருட வரலாற்றுப் பாரம்பரியமிக்க ஒரு பேரியக்கம் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை—

அதனைக் கட்டிக் காக்கும் நன்னோக்கிலும் அதன் சமகால நடவடிக்கைகள் மீது ஒரு சாராருக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியை போக்கி விடும் வகையிலும் —

சம்பந்தப்பட்ட உலமா சபை உத்தியோகத்தர்கள் சிந்தித்துத் தெளிந்து குறைகள் இருப்பின் அவற்றைக் களைந்து சமுதாயத்தின் முழுப் பார்வையையும் உலமா சபை மீது படியும

சம்பந்தமுமில்லை அவர்களுடைய விஷயமெல்லாம் அல்லாஹ்விடமே இருக்கின்றது அவர்கள் செய்து கொண்டிருந்த (இத்திய) வற்றைப் பற்றி பின்னர் அவன் அவர்களுக்கு அறிவித்து விடுவான்—

(6;159)

திருக்குர்ஆனின் மேற் குறிப்பிடப் பட்டுள்ள இரு வசனங்களின் அடிப்படையில், இன்றைய அகில இலங்கை உல்மா சபை தமது 64வது வயதில்கூட, இது வரை சமுதாயத்துக்குத் தந்த சாதனைகள் என்ன? தொட்டுப் பார்க்கலாமா?

1 பல ஸ்தாபன இயக்கங்களும் சங்கங்களும் தமக்கென சொந்த கட்டடங்கள் நூல் நிலையங்கள் தொலைபேசி வசதிகள், வாகனங்கள் முதலியவைகளை ஏற்படுத்திக் கொண்டு இயங்கும் போது, அ இ உ சபை, இலங்கையில் ஏறத்தாழ பன்னிரெண்டு லட்சம் முஸ்லிம் மக்களின் ஆத்மீக — அற வாழ்வுக்கு நேர்வழிகாட்டும் தலைமைத்துவ குழாம் எங்கோ

# பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க

# உலமா சபை தயங்குவது ஏன்?

மூலை முடுக்குகளில் சந்து பொந்துகளில் சிறு அறைகளை எடுத்துக் கொண்டு "பாரிய பணி" செய்வதன் காரணம் என்ன?

2 பல மாதங்களுக்கு முன் ஒரு சகோதர தினசரியை (தினபதி அல்ல) களமாக அமைத்து நடத்தப்பட்ட "ஷரீஅத்" பற்றிய ஒரு முக்கோண விவாதப் போர் இலங்கை முஸ்லிம்களை

(19 ஆம் பக்கம் பார்க்க)



உலமா சபை மீது படியும் விதமாக விருப்பு வெறுப்பு களுக்கு அப்பால் நீதியுடன் உண்மையுடன் செயல்பட வேண் டும என்ற துடிப்பு முஸாபிருக்கு உண்டு—

அந்த எண்ணங்களின் விளை வாய் முஸாபிருக்கு வந்த கடி தங்களுள் ஒன்றினை இவ் வாரம் சன்மார்க்க நெஞ்சங்க ளின் சிந்தனைக்கு சமர்ப்பிக்கி றேன்—

இதனை நீர்கொழும்பைச் சேர்ந்த ஜனாப் எம ஏ ஸெய்யித் யாஸீன் என்பவர் எழுதி அனுப்பி யுள்ளார்—

குறைகளை சுட்டிக்காட்டி யோர் பெருமையுறவோ குறை உள்ளவர்கள் சிறுமையுறவோ அவசியமின்றி ஒரு கருத்துப் புரட்சியை ஏற்படுத்த அனைவ ரும சிந்திப்பேரமாக!

கடந்த பல வாரஙகளாக "முஸாபிர் பார்வையில்" முஸ் லிம சமுதாயம் முடங்கிக் கிடக் கும நிலை — முன்னேரக்கியுள்ள பிரச்சினைகள் என்பன "சிந்து" வின் மூலம சிந்தனைக்கு விருந் தாக்கப்பட்டன— "சமுதா யத்தை உலமாக்கள் குழப்ப லாமா?" [சிந்தாமணி 25-02-1990] என்ற விடயம எல்லா முஸ்லிமகளின் எண் ணப் புரட்சியை ஏற்படுத்தி யுள்ளது—

உலமாக்கள் எனப்படுபவர்கள் யார்? அல்லாஹ் திருக்குர்ஆனில் வரைவிலக்கணம் கொடுத்துள் ளான் "நிச்சயமாக அல்லாஹ் வின் அடியார்களில் அவனுக்கஞ்சி நடப்போர் ஆலீமகள் தான் (35-28) அது மாத்திரமல்ல. மார்க்கத்தில் பிளவு உண்டு பண்ணுவோர் பற்றியும அல் லாஹ் எச்சரித்துள்ளான்— "எவர் கள் தங்கள் மார்க்கத்தைத் தங் கள் இஷ்டப்படி பலவாறாகப் பிரித்து (அவர்களும) பல பிரி வினராகப் பிரிந்து விட்டனரோ அவர்களுடன் உமக்கு யாதொரு




# பேர்மா ஷாப் சுப்றீமோ

விண் வெளித் தொழில் நுட்பச் சிறப்புடன், தரத்தில் அதி உன்னதமான துருப் பிடிக்காத எஃகு உருக்கில், தன் பெயரைக் கூடப் பதிக்க முடியாத பளிங்குச் சுத்த மெருகு பளிச்சிடத் தயாரிக்கப்பட்ட சவர பிளேட் பேர்மா ஷாப் சுப்றீமோ! தேர்மோப்ளாஸ்திக் பொலிமர் என்னும் அடர்த்தியான மும்முனை விளிம்புக் கூர்மையுடன் சவரச் சொகுசின் உச்ச இன்பத்தைத் தரும் விதத்தில் உருவாக்கப்பட்ட அதன் நேர்த்தியைப் பரீட்சித்து அதன் சிறப்பைக் கண்டு அனுபவியுங்கள்!

RJA 9711

PERMA-SHARP SUPREMO




ரூ- 14/75 விலையில் 5 பிளேட்டுகள் கொண்ட சுருளவான எடுப்புறையில் கிடைக்கும
பிளேட் ஒன்றின் விலை ரூ- 2/95

**பேர்மா ஷாப் சுப்றீமோ**
- சிறந்த சவரத்தின் புதிய சிகரம்.

இலங்கையில் சந்தைப்படுத்துவோர் : அங்லோ - ஏஷியன் Anglo-Asian

## சோவியத் ஜனாதிபதிக்கு பிரேமதாச நல்வாழ்த்து

கொழும்பு, மார்ச் 17

சோவியத் யூனியனின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள மிக்கெயல் கொர்பச்சேவுக்கு ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச வாழ்த்துச் செய்தி அனுப்பி வைத்திருக்கிறார்—

உங்கள் ஞானம் தூரதிருஷ்டி. தியாகம் ஆகியவற்றை இத்தெரிவு இனம்காணச் செய்கிறது—

இத்தெரிவு உங்கள் தலைமைத்துவத்திற்கும் ராஜதந்திரத் திறமைகளுக்கும் ராஜதந்திரத் தன்மைக்கும் காணிக்கையாகும். இலங்கை சோவியத் நட்பான உறவுகள் தொடர்ந்து வரும் காலங்களிலும் மேலும் வளர்ச்சி காணும்—

இவ்வாறு ஜனாதிபதி தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்—

(த-007)

## பட்டுப் போன்ற சருமம்

குளிக்கச் செல்லும் முன் தக்காளியை சாறு பிழிந்து உடல் முழுவதும் தேய்த்து சிறிது நேரம் கழித்து குளிக்க வேண்டும். இதைத் தொடர்ச்சியாக கடைப்பிடித்தால் சருமம் பட்டுப் போன்று மிருதுவாக இருக்கும்.

தோல் சம்பந்தப்பட்ட நோய்களும் நெருங்காது. இதற்கு தக்காளிக் குளியல் என்று பெயர்.

(த)

## பிறந்த நாள் வாழ்த்து



பெரோஸ் மொஹமட்

குருணாகொடையைச் சேர்ந்த முகம்மட் இனயா தம்பதிகளின் செல்வப் புதல்வனை பெரோஸ் மொஹமட் தனது மூன்றாவது பிறந்த தினத்தை 19-03-1990 ல் மிக விமரிசையாக கொண்டாடுகின்றார்—

அவரை அல்ஜுபெய்லில் இருக்கும் அன்பு டடா, உம்மா, தங்கை பவிலா, வாப்பும்மா, உம்மம்மா, அப்பா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சாச்சாமார், சாச்சிமார், தாத்தாமார், நானாமார் மற்றும் கன்னத்தோட்டை பாத்திமா, பாலர் பாடசாலை ஆசிரியை, சகோதர, சகோதரிகள், ஊற்றார், உறவினர், குருணகொடை வதாத் அப்பா குடும்பத்தினர் ஆகியோர் அல்லாஹ்வின் நல்லருளால் செறிந்த அறிவும், நிறைந்த செல்வமும் பெற்று வளமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்—

## பிறந்த நாள் வாழ்த்து



பாத்திமா டில்ஷா

ரம்புக்—எல, முஸ்தபா — பாயிஸா தம்பதிகளின் செல்வப் புதல்வி "பாத்திமா டில்ஷா" [ஜுலி] 11 ஆவது பிறந்தநாளை 13-03-1990 இல் தமது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடினார்.

ஜுலியை டடா, மம்மி, தம்பி ரிஷா, தங்கைகள் ரைஷா, ஷர்மிளா, பியாஸா பேபி, நவிகா, ஸில்மியா, உம்மம்மா குடும்பத்தினர், வாப்பம்மா குடும்பத்தினர், ஊற்றார், உறவினர்கள் பல்லாண்டு வாழ வாழ்த்தியுள்ளார்கள்—

வி இ 032819

# சத்யஜித்ரே உருவாக்கிய 5 வங்க மொழிப் படங்கள்

## திரைப்பட விழாவில் இலங்கையர் கண்டு ரசிக்க வாய்ப்பு

இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம் இந்திய அரசின் ஒத்துழைப்புடன் நடத்தும் திரைப்பட விழா இவ்வாரம் நடைபெறுகிறது.

வெள்ளிக்கிழமை (23 ஆம் திகதி) கொழும்பு லிபர்ட்டி திரை அரங்கில் ஆரம்பமாகும் இந்தத் திரைப்பட விழாவில் பிரபல இயக்குநர் சத்யஜித்ரே உருவாக்கிய ஐந்து வங்காளப் படங்கள் ஆங்கில விளக்கங்களுடன் திரையிடப்படும்.

இந்தியத் திரைப் படங்கள் உருவாகத் தொடங்கிய நாள் முதல் இலங்கையில் திரையிடப்பட்டன. இலங்கைத் திரைப் படங்கள் ஆரம்ப காலத்தில் உருவாக்கம் பெற்றதும் இந்தியாவில் தான்.

ஆனால் இடையில் சில காலங்கள் இந்தியத் திரைப்படங்கள் இறக்குமதியாவதில் மந்த நிலை ஏற்பட்டது. இந்தியப் படங்கள் முற்றாகவே வருவதில்லை. ஆயினும் இந்த நிலையில் விரைவில் மாற்றம் ஏற்படும் எனத் தெரிகிறது.

தகவல் தொடர்பு ராஜாங்க அமைச்சர் திரு ஏ ஜே ரணசிங்க மேற்கொண்ட முயற்சியின் பயனாக இலங்கையில் இந்தியத் திரைப்பட விழாக்கள் நடைபெறவுள்ளன. இந்தியாவில் இலங்கைத் திரைப்பட விழாக்கள் நடைபெறும்.

முதல் கட்டமாக உலகப் புகழ்பெற்ற சத்யஜித்ரேயின் ஐந்து மணியான படங்கள் கொண்ட திரைப்பட விழா கொழும்பில் நடப்பது ரசிகர்களுக்கு நல்விருந்து.

சத்யஜித்ரே கலாரசனையுள்ள படங்களைத் தயாரிப்பதில் புகழ் பெற்றவர். அவருடைய படங்களில் மசாலாத்தனம் இருக்காது. ஒவ்வொன்றும் சர்வதேச தரத்திலான கலைப்படைப்புகள். ஆயினும் பாமர ரசிகர்களும் ரசித்துப் பார்க்கும் விதத்தில் இருக்கும்.



"அரன்யெர் டின்பட்ரி" படத்தில் ஒரு காதல் காட்சி. (ம)



"ஹிரொக் ராஜர் தேய்ஷே" படத்தின் கொடுங்கோல் மன்னன். (ம)



ஞானிக்கல்); ஒரு வங்கி ஊழியருக்குக் கிடைக்கும் கல் அவரைப் பணக்காரராக்குகிறது.

ரைப் பணக்காரராக்குகிறது, அதன் மூலம் அவருக்கு வரும் தொல்லைகளோ அதிகம். பொலீஸ் வரைக்கும் போய் அவர் படும் பாட்டைச் சித்திரிக்கும் படம் இது.

* ஜல்சாஹர் (சங்கீத அறை); இந்தியாவில் மன்னர் மானியம் ஒழிக்கப்பட்ட காலத்தில் ஒரு ஜமீந்தார் தமது செல்வம் குன்றிய போதிலும் தமது பாழடைந்த மாளிகையில் ஓரிரு வேலைக்காரர்களுடன் ராஜ வாழ்க்கை நடத்தி அவரிடம் வாழ்க்கை நடத்தி அவதியுறும் கதையைச் சித்திரிக்கும் படம்.

— கதாசி —

* பிரதித்வாண்டி (சித்தார்த்தாவின் பட்டண வாழ்க்கை); தந்தையின் மரணத்தை அடுத்து மருத்துவக் கல்லூரிப் படிப்பைத் தொடர முடியாமல் வெளியேறும் மாணவன் வேலை தேடித் திரிந்தும் பட்டணத்தில் வாழ முடியாமல் போய் வெளியேறும் கதை.

* அரன்யெர் டின் பட்ரி (இரவும் பகலும் காட்டிலே); பட்டணத்தில் இயந்திர வாழ்க்கை நடத்தும் நான்கு இளைஞர்கள் சில நாட்கள் காட்டு வாழ்க்கை நடத்தச் செல்கிறார்கள். ஆதிவாசிகள் வாழும் ஒரு காட்டில் மாறியதைச் சித்திரிக்கும் படம்.



சத்யஜித்ரே

(நுவரத்தின ராஜதானி); சரித்திரக் கதை ஒன்றை ஆடம்பரம் இல்லாமல் கலை நுணுக்கத்துடன் தருகிறார் சத்யஜித்ரே. கொடுங்கோல் மன்னனை வீழ்த்திய மக்கள் எழுச்சியை சித்திரிக்கும் கலர்ப்படம் இது.

— இந்த ஐந்து படங்களும் இந்தியாவில் தேசிய விருதுகளைப் பெற்றிருக்கின்றன. உலகின் பல நகரங்களில் திரையிடப்பட்டு பாராட்டுப் பெற்றிருக்கின்றன. அவற்றைக் கண்டு ரசிக்கும் வாய்ப்பு இலங்கை ரசிகர்களுக்கு இப்போது கிடைத்திருக்கிறது.

(ம)

## எம். எல். ஏ. தோசை வேண்டுமா?

ஐதராபாத் ஹோட்டல்களில் 35 எம் எம் - 70 எம் எம் தோசை என்ற பெயருக்கு தோசை விற்பனை செய்கிறார்கள் இது சினிமா ரசிகர்களை திருப்தி செய்ய வைக்கப்பட்ட பெயர் சமீபத்தில் திடீரென்று எம் எல் ஏ தோசை என்று ஒரு புதிய பெயரை அறிமுகம் செய்துள்ளார்கள்—

எம் எல் ஏக்கள் விரும்பி சாப்பிடுவதால் இதற்கு இந்தப் பெயராம்— ஹோட்டல் சர்வர்கள் ஒரு படி மேலே போய் இந்தத் தோசையைச் சாப்பிட்டால் எம் எல் ஏ ஆகி விடலாம் என்று சாப்பிட வருபவர்களுக்கு சொல்கிறார்கள்—

(த—10)

மில்க்வைற் சேவகம்

இளம் வயதிலேயே சேமிப்புப் பழக்கம் உண்டாவதால் சுபீட்சமான எதிர்காலம் உறுதியாகிறது—

மில்க்வைற் சோப் மேலுறையிலிருந்து 100 திருக்குறளைச் சேர்ப்பித்து ஒரு உண்டியலைப் பெற்றுக் கொள்ளுங்கள்—

மில்க்வைற்
யாழ்ப்பாணம்

இக்றா சர்வதேச பாடசாலை

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருநாமத்தால்
அநுமதி 3, 4, 5 ஆம் வகுப்புகளுக்கு

மேற்கூறப்பட்ட வகுப்புகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன—
முடிவு திகதி— 15-4-1990

ஆங்கிலத்திலும் பொதுத் திறமையிலும் பரீட்சிக்கப்பட்ட பின்பே மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்—

விபரங்களுக்கு திங்கள்/புதன் நாட்கள்
(9-30 — 11-30)

காரியதரிசி,
இக்றா சர்வதேச பாடசாலை,

ந்த செல்வமும பெற்று வளமு டன் வாழ வாழ்த்துகிறார்கள்—

வி இ 032209

வாழ வாழ்த்தியுள்ளார்கள்—

வி இ 032819

இருக்கும்.

## பிறந்த நாள் வாழ்த்து



முஹம்மது பௌஸான்

கொழும்பு-10 பி 23 ஜீ-1 மாளிகாவத்தை தொடர் மாடி வீட்டைச் சேர்ந்த நூர்பாயிஸ்—ஹயாத்துமமா தமபதிகளின் செல்வப் புதல்வன் முஹம்மது பௌஸான் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று 18-3-90 மிகவும குதூகலமாக கொண்டாடுகிறார்—

இவரை உமமா, வாப்பா, வாப்பம்மா, உமமமமா, அப்பாமார், மாமாமார், மாமிமார், சாச்சாமார், சாச்சிமார், குவைட் மாமாமார் மற்றும் உற்றார் உறவினர் அனைவரும பல்கலையும பயின்று சீரும சிறப்புமாக நீடூழி வாழ்கவென அல்லாஹ்வின் அருளால் வாழ்த்துகின்றார்கள்—

வி இ 032660

## பிறந்த நாள் வாழ்த்து



ஜேக்கப் பிரசாந்தன்

திருகோணமலை உவர்மலையைச் சேர்ந்த சிவப்பிரகாசமு—ஜீவிதா தமபதிகளின் செல்வப் புதல்வன் ஜேக்கப் பிரசாந்தன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளை நோர்வேயில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார்—

இவரை அன்பு அப்பா, அமமா, தமபி நிசாந்தன், அப்பும்மா, அப்பப்பா, மாமிமார்கள், மாமாமார்கள், சித்தப்பாமார்கள், சித்திமார்கள், திருகோணமலையைச் சேர்ந்த அமமமா, அம்மப்பா, கிரிஷ்டி சித்தப்பா, வினிக்கா, தங்கா சித்தி, ஆசை மாமா, லக்ஸ்சாந்தன், கனடா சித்தப்பா, சித்தி பல்கலையும கற்று நோய் நொடியின்றி பல்லாண்டு காலம வாழ வாழ்த்துகிறார்கள்—

வி இ 032869

## பிறந்த நாள் வாழ்த்து



முகமமது அர்ஸத்

கொழும்பு மருதானை இல- 41, லொக் கேட் லேனைச் சேர்ந்த ஹுஸைருல் அமீர்—சித்தி ரசீனா தமபதிகளின் செல்வப் புதல்வன் முஹமத் அர்ஸத் கடந்த 14-3-1990 ல் தனது இரண்டாவது பிறந்த தினத்தை மிகக் குதூகலமாகக் கொண்டாடினார்—

இவரை ஜித்தாவைச் சேர்ந்த டெடா, மமி, உம்மம்மா, பெரியமமா, ஓமான் பெரிய மாமா, சின்ன மாமா, நோனா என்டி ஆகிய குடுமபத்தார் அனைவரும மற்றும உற்றார் உறவினர் அனைவரும எல்லாம வல்ல அல்லாவின் அருளால் நலம பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்—

வி இ 032098



"பிரதித் வாண்டி" படத்தில்வரும மேனகையுடன் கல்லூரி மாணவன். (ம)

கொழும்பு திரைப்பட விழாவில் அணி வகுத்து நிற்கும படங்களின் விவரம இதோ:

* பராஷ் பதர் (தத்துவ

அவர்கள் தங்கியிருக்கும வேளையில் காட்டு மிராண்டிகளை விட மோசமானவர்களாக அவர்கள்

* ஹிரொக் ராஜர் தேய்ஷே

## ஜெனரல் கல்கட்டுக்கு பிரியாவிடை வைபவங்கள்

இலங்கையில் உள்ள இந்திய அமைதி காக்கும படையின் தளபதி ஜெனரல் ஏ எஸ் கல்கட்டுக்குப் பலரும பிரியாவிடை வைபவங்களை நடத்தினர்—

கொழும்பில் உள்ள பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் இவருக்குப் பிரிவுபசார வைபவத்தை நடத்தினர்—

ஜெனரல் கல்கட் கடந்த வெள்ளியன்று கொழும்பு வந்தார்—

வெளிவிவகார அமைச்சரும பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்னவையும பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கவையும அவர் சந்தித்தார்—

இன்று ஞாயிறன்று அவர் திருகோணமலை செல்வாரென எதிர்பார்க்கப்படுகிறது—

[த—007]

## விவித நாடக விழா

கொழும்பு, மார்ச் 17

பிரபல வானொலி - மேடை நாடகக் கலைஞர்கள் இணைந்து வழங்கும "விவித நாடக விழா" ஒன்று எதிர் வரும வெள்ளிக்கிழமை மாலை 6-00 மணிக்கு பமபலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை தமிழ் நாடகப் பேரவையின் நிதிக்காக இவ் விழா நடைபெறுகிறது.

பல புகழ் பெற்ற கலைஞர்களின் கைவண்ணத்தில் உருவான ஐந்து குறு நாடகங்கள் இவ் விழாவில் இடமபெறவுள்ளன.

(த)

## தேவத்தை யாத்திரை

கொழும்பு, மார்ச் 17

தபசு காலத்தில் இயேசுவின் திருப்பாடுகளை தியானிக்க ராகம தேவத்தை இலங்கை மாதா பேராலயத்திற்கு பக்தர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை (18-3-90) காலை 7-30 மணிக்கு செல்வார்கள்.

இதற்குரிய ஏற்பாடுகளை பனிமய மாதா சங்கம மேற்கொண்டுள்ளது.

(த)


காரியதரிசி,
இக்றா சர்வதேச பாடசாலை,
282/5, காலி வீதி,
கொழும்பு—3.

## டுபாய், ஓமான், பஹ்ரெயின் குவைட் நாடுகளில் வேலை வாய்ப்பு

முஸ்லிம் வீட்டுப் பணிப்பெண்களுக்கு எவ்வித கட்டணமும் இன்றி

வயது- 22 வயது முதல்
சம்பளம்- 4250 ரூபா முதல்
சேவைக் காலத்திற்குள் பூரண பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கப்படும்.

யசோதா எண்டர்பிரைசஸ்

ஆட்பலப் பிரிவு,
455, கூட்டுறவு கட்டிடம், 4 ஆம் மாடி,
காலி வீதி, கொழும்பு—03.
தொலைபேசி- 502868

தொழில் அங்கீகார/லைஸன்ஸ் இல:- ஏ எல்/647/11/89

## சவூதி—குவைட்—டுபாய்

★ வீட்டுப் பணிப்பெண்கள்
★ டெய்லர்ஸ் (ஆண்/பெண்)
★ சமையற்காரர்

கடவுச்சீட்டு- 6 புகைப்படங்கள் சகிதம வரவும

NOOZKIYA
(MANPOWER RECRUITMENT SERVICES)

94/2, Stace Road.
Grandpass Colombo 11
Labour Licence: 528 App No: 528/1/90—2/90

# மலையக மாருதம்



தயாரிப்பு: கே. தமிழ்மாறன்

வரலாற்றில் ஒரு திருப்பு முனை

# பொலீஸ் பயிற்சியை முடித்து வெளிவரும் மலையக இளைஞர்

## 11 சப் இன்ஸ்பெக்டர்கள் 113 கான்ஸ்டபிள்கள்


மலையக இந்திய வமசாவளி மக்களின் வரலாற்றில் இவ் வாரம ஒரு புதிய திருப்பு முனைக்கு வழிகோலிட்டுள்ளது,

காலம காலமாக கைகட்டி, வாய்பொத்தி மௌனிகளாக இருந்த மலையகத்தவர்கள், நாடற்றவர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டபின், படிப்படியாக தேசிய நீரோட்டத்தில் பங் கேற்க நுழைவாயில் திறந்து விடப்பட்டிருக்கிறது,

தோட்டத் தொழிற்றுறையிலிருந்து அரசியல் துறையில் ஆசிரியர் பதவிகளையே படித்த மலையக இளைஞர், யுவதிகள் நமபி வந்தனர்,

இன்று கிராமசேவகர் பதவிகளிலும, பொலீஸ் பதவிகளிலும காலடி எடுத்து வைப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

இலங்கைத் தொழிலாளர் காஙகிரஸ் தலைவரும, புடைவைக் கைத்தொழில், கிராமத் தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சருமான திரு சௌமிய மூர்த்தி தொண்டமான், இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சஙகத் தலைவரும, தோட்டத் தொழிற்றுறை அமைச்சருமான திரு காமினி திசாநாயக்கா ஆகியோரின் உந்தும சக்தியால், முதன்முறையாக மலையக இளைஞர் பொலீஸ் சேவையில் சேர்க்கப் பட்டுள்ளனர்,



மலையக பொலிஸார் அணிவகுப்புப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சேவையில் 2700 மலையக இளைஞர்களும, யுவதிகளும சோத்துக் கொள்ளப்படுவர்,

இவர்களில் நுவரெலியா, தலவாகொல்லை, ஹட்டன் மஸ்கெலியா, கினிகத்தேனை பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் முதல் கட்ட பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர், கடந்த ஜனவரி 3ஆம திகதி பயிற்சிக்குச் சென்ற இவர்கள், இந்த வாரம 20 ஆம திகதி பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறுகின்றனர்,

11 சப் இன்ஸ்பெக்டர்களும, 113 பொலீஸ் கான்ஸ்டபிள்களும முதல் கட்டமாக கண்டி, அஸ்கிரிய பொலீஸ் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெற்று வெளியேறுகின்றன..

இவர்களுக்கு மலையகப் பகுதிகளில் இயஙகும பொலீஸ் நிலையஙகளில் பணியாற்ற நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கின்

— ஐ. ஏ. றஸாக் —

[கண்டி நிருபர்]

பாதசுந்தரம மேற்கொள்கிறார்,

இவர்களோடு பொலீஸ் "பெரேட்" எனப்படும அணி நடை போன்றவற்றுக்குப் பொறுப்பான சார்ஜன்ட் மேஜா சஙகரும, சார்ஜண்ட் மேஜர் சி பீ ஹேரத்தும இருக்கின்ற சி பீ ஹேரத்தும இருக்கின்றனர்.

மலையகத் தமிழ் இளைஞர்களின் அடக்கமும், அன்பும, பணிவும், ஆர்வமும என்னை வெகுவாகக் கவர்ந்தன என்கிறார் பயிற்சிக் கல்லூரியின் பொறுப்பாளர் இன்ஸ்பெக்டர் ரணவீர.



பயிற்சி கல்லூரி சுப்ரிண்டன் ஜீ ரத்வத்தை. (ம)

காலை 6-00 — 8-00 வரை அணிவகுப்பு (பரேட்) உடற் பயிற்சியும, 9-00 — 12-30 வரை விரிவுரைகளும, மாலையில் மீண்டும அணி வகுப்பும நடைபெறுகின்றன.

# இ. தொ. கா. பொன்விழா

இலஙகைத் தொழிலாளர் காஙகிரஸ் அதன் 50 ஆண்டு நிறைவு விழாவையும, 30ஆவது ஆண்டு மாநாட்டையும அட்டன் மாநகரில் இமமுறை நடத்துகிறது.

மிகவும பிரமாண்டமான முறையில் மாநாட்டை நடத்துவதற்காக, மாநாட்டு அமைப்புக் குழுவினர் தீவிரமாக செயல்பட்டு வருகின்றனர்.

இ தொ கா வை பொறுத்தளவில் அதனது 50 ஆண்டு நிறைவு விழா வரலாற்றுச் சிறப்புமிக்கதொரு விழாவாக அமைகிறது.

இது அதனது பொன்விழா என்பதால் மட்டும அல்ல, இந்த 50 ஆண்டு காலத்தில் அது சாதித்த சாதனைகளை எல்லாம பட்டியல் போட்டுக் காட்டும விழாவாகவே இது இருக்கும.

எதிர்வரும சனி 24, ஞாயிறு 25 ஆகிய இரு நாட்களும அட்டன் மாநகரம விழாக் கோலம பூண்டிருக்கும.

முதல்நாள் 24 ஆம திகதி காலை 10.00 மணிக்கு அட்டன் இந்து மகா சபை மண்டபத்தில் பேராளர் மாநாடு ஆரமபமாகும, 3500 பேராளர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப் படுகிறது.

மலையக மக்களின் எதிர்கால நலவுரிமைகளுக்கான பல தீர்மானஙகள் இமமாநாட்டில் எடுக்கப்படும,

குறிப்பாக தொழிலாளர்களுக்கு வீட்டுரிமையும நிலவுரிமையும அவசியம என்பதால் அத்தீர்மானம முக்கிய இடத்தைப் பெறும என எதிர்பார்க்கலாம.

முதல்நாள் நிகழ்வில் இ தொ கா தலைவரும, புடைவைக் கைத்தொழில், கிராமத் தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சருமான திரு சௌமிய மூர்த்தி தொண்டமான் தலைமையில் பேராளர் மாநாடு நடைபெறும.

அன்றைய தினம இரவு, மலையக மக்களின் பாரமபரிய கலை நிகழ்ச்சிகள் இடம பெறும.

மறுநாள் காலை 8-00 மணிக்கு அட்டன் பிரின்ஸஸ் தியேட்டர் சந்தியிலிருந்து ஆண்களும பெண்களும தொண்ட பிரமாண்டமான ஊர்வலம ஒன்று டன்பார் திடலுக்குப் புறப்படும.

இந்த ஊர்வலத்தில் மலையக இளைஞர்களின் அணிவகுப்புடன், ஊர்திகளும இடம பெறும.

காலை 10-00 மணிக்குப் பொது கூட்டம. இந்தக் கூட்டத்திற்கு ஜனாதிபதி திரு ஆர், பிரேமதாச விசேட விருந்தினராக வந்து சிறப்புரையாற்றுவார்.

அமைச்சர் திரு எஸ் தொண்டமான், போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் திரு எம எஸ் செல்லச்சாமி, இந்து சமய கலாசார அமைச்சர் திரு பி பி தேவராஜ் ஆகியோர், உரையாற்றுவர்.

மாநாடு பிற்பகல் 2.00 மணிக்கு முடிவுறும.

இந்த 30ஆவது மாநாடும பொன் விழாவும இ தொ கா வரலாற்றில் பிறிதொரு முக்கியத்துவத்தையும பெறுகிறது.

முதன் முறையாக மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவராக ஒரு பெண் இருக்கிறார், மகளிர் ஆண்டு என்பதால் மட்டும அல்ல பெண்மைக்கு முக்கியத்துவம கொடுத்து மலையக சமுதாய விழிச்சிக்கும எழுச்சிக்கும வழிகாட்டுவதே இ தொ கா நோக்கம என்பதை எடுத்துக் காட்டுவதற்காகும.

செல்வி எஸ் செந்தமிழ்ச் செல்வி என்பவர்தான் வரவேற்புக் குழுத் தலைவி,

இவரது தலைமையில் மாநாடு பொலிவுற்று விளஙகும என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை,

இந்த மாநாட்டில் வெளிநாடுகளின் தொழிற்சஙகப் பிரதிநிதிகளும கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது, (ம-ந)


## விரையுங்கள்!

எதிர்வரும பெருநாள் வைபவத்தை முன்னிட்டு இறக்குமதி செய்யப்பட்ட ரெடிமேட் ஷேட்டுக்கள் உயர் தரத்தில் பல ரகஙகளில் பலவித நிறஙகளில் அத்துடன் ஆண்களுக்குரிய பாத அணிகள், வாசனை திரவியஙகள், வாசனை பவுடர் முதலியவற்றை நியாயமான விலையில் மொத்தமாகவோ, சில்லறையாகவோ பெற்றுக் கொள்ள பெஸ்ட் சொய்ஸ்—

## இலங்கை துறைமுக அதிகார சபை



மலையக பொலீஸார் அணிவகுப்புப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.


# இலங்கை துறைமுக அதிகார சபை

## டெண்டர் அறிவித்தல்

## துறைமுக இறங்கு துறைகளிலும் களஞ்சிய சாலைகளிலும் எடுத்துச் செல்லப்படாமல் தேங்கிக் கிடக்கும் பொருட்களின் விற்பனை

கொழும்பு துறைமுக இறங்கு துறைகளிலும களஞ்சிய சாலைகளிலும உரிமை கோரி எடுத்துச் செல்லப்படாத நிலையில் காணப்படும கீழ்கண்ட பொருட்களை விலைக்கு வாங்கி அவற்றை அகற்றிச் செல்லும பொருட்டு முத்திரையிடப்பட்ட டெண்டர்கள் கோரப்படுகின்றன-

| | | |
|---|---|---|
| விட்டுகளுக்கான பாகங்கள் | ஆடைகளுக்கான துணைப் பொருட்கள் | பில்டருக்கான பொருட்கள் |
| குயளிலறைக்கான உபகரணங்கள் | | இயந்திர பாகங்கள் |
| | பலகைகள் | கிளாஸ் தமளர்கள் |
| ஈஸ்டிக் அஸிட் | சிப்கள் | உபயோகிக்கப்பட்ட துணிகள் |
| அயன் ஒக்சைட் | டயர்கள் | கைக்கருவிகள் |
| ரசாயன பொருட்கள் | மோட்டார் உதிரிப்பாகங்கள் | தையல் நூல் |
| உருக்கு வலை | ஷேர்ட் ஹெங்கர்ஸ் | ஜீ ஐ வயர் |
| பாடிங் | பெதி விதைகள் | ரவுண்ட் பார்ஸ் |
| ஜீ ஐ ஷீட்ஸ் | வெள்ளைப் பூண்டு | றெயில் வயர் |
| உருக்கு தகடுகள் | பஞ்சு | நொசல் சீட்ஸ் |
| உருக்கு அன்லெலோப்ஸ் | சைக்கிள் உதிரிப்பாகங்கள் | விளையாட்டுச் சாமான்கள் |
| சோடியம மெடாபிருள்பைட் | புத்தகங்கள் | மற்றும ஏனைய பொருட்கள் |

சகல டெண்டர்களும வர்த்தக முகாமையாளர், இலங்கை துறைமுக அதிகார சபை, கொமிசாரியட் வீதி, கொழும்பு-1 என்ற விலாசத்துக்கு 90-03-24 ஆம திகதி 1000 மணித்தியாலங்களுக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்- இக்கால எல்லையில் கிடைக்கப் பெற்ற சகல டெண்டர்களும உடனடியாக வர்த்தக முகாமையாளரின் அலுவலகத்தில் வைத்து பிரித்துப் பார்க்கப்படும்-

இதற்கான டெண்டர் பத்திரங்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் வர்த்தக முகாமையாளர் அலுவலகத்தில் 90-3-23 ஆம திகதி 1400 மணித்தியால கால எல்லை வரை பெற்றுக் கொள்ளப்பட முடியும்- இதன் பொருட்டு டெண்டர் கோருபவர்கள் திருப்பிப் பெறக் கூடிய ஐயாயிரம ரூபாவையும திருப்பி வழங்கப்படாத 250/- ரூபாவையும செலுத்த வேண்டும- விற்பனைக்கு விடப்படவுள்ள பொருட்களை பார்வையிட விரும்புவோர் 90-03-22 ஆம திகதிக்கும 90-03-23 ஆம திகதிக்கு உட்பட்ட காலப்பகுதியில் வழமையான வேலை நேரத்தில் அவை வைக்கப்பட்டுள்ள துறைமுக இறங்குதுறைப் பகுதிகளிலும களஞ்சிய சாலைகளிலும அவற்றைப் பார்வையிட முடியும-

டெண்டர் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்குக் கீழ்ப்படிய டெண்டர் விண்ணப்பதாரர்கள் இணக்கம தெரிவிக்க வேண்டும-

வர்த்தக முகாமையாளர்
இலங்கை துறைமுக அதிகார சபை,

வர்த்தகப் பிரிவு,
இலங்கை துறைமுக அதிகார சபை
கொமிசாரியட் வீதி,
கொழும்பு-1


ஜீ ரத்வத்தை. (ம)

வெளியேறுகின்றன.

இவர்களுக்கு மலையகப் பகுதிகளில் இயங்கும பொலீஸ் நிலையங்களில் பணியாற்ற நிய

**ஐ. ஏ. றஸாக்**

[கண்டி நிருபர்]

மனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இவர்களைத் தொடர்ந்து இரண்டாம கட்டமாக மேலும 200 பேருக்கு பயிற்சி வழங்கப்படும.


இதற்கென நுவரெலியா, அட்டன், பதுளை, பசறை, பண்டாரவளை, மொனறாகலை பகுதிகளில் மேலும் சப்இன்ஸ்பெக்டர் பதவிகளுக்காக 24 பேரும, பொலீஸ் கான்ஸ்டபிள் பதவிகளுக்காக 466 பேரும தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பொலீஸ் அறிக்கைகள் வந்து வாக்க் குவர்த்தன என்கிறார் பயிற்சிக் கல்லூரியின் பொறுப்பாளர் இன்ஸ்பெக்டர் ரணவீர.

காலை 6-00 — 8-00 வரை அணிவகுப்பு (பரேட்) உடற்பயிற்சியும, 9-00 — 12-30 வரை விரிவுரைகளும, மாலையில் மீண்டும அணி வகுப்பும நடைபெறுகின்றன.

கரபந்தாட்டம, உதைபந்தாட்டம, கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களில் மிகுந்த ஆர்வம காட்டும இந்த இளைஞர்கள் துப்பாக்கியால் சுடுவதற்குமான பயிற்சியும வழங்கப்பட்டுள்ளது,

பொலீஸ் திணைக்களத்தின் நிர்வாகம தொடர்பான சகல துறைகளிலும இவர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டதன் மூலம பொலீஸ் சேவையில் பலன் தரத்தக்க சேவைகளை எதிர்பார்க்க இயலும என்றும அவர் கூறினார்,



துப்பாக்கி சுடும பயிற்சியில் மலையகப் பொலீஸார்.

சேர்ந்ததும கட்டம, கட்டமாக பயிற்சிக்கு இவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

அஸ்கிரிய பொலீஸ் பயிற்சிப் பிரிவின் பொறுப்பாளரான இன்ஸ்பெக்டர் திரு எச் எம ஜே பீ ரணவீர இந்தப் பயிற்சிக்குப் பொறுப்பாக இருக்கின்றார்,

20 வருட காலம களுத்துறைப் பொலீஸ் பயிற்சிக் கல்லூரியில் அனுபவம பெற்ற இவரோடு தமிழ் மொழியில் போதனைகளையும, விரிவுரைகளையும சப்இன்ஸ்பெக்டர் திரு எஸ் சிவ

* தமிழ்மொழியில் பயிற்சிகள் வழங்கப்பட்டதன் மூலம தோட்டப் பகுதி மக்களின் முறைப்பாடுகளை தமிழிலும சிங்களத்திலும பதிவு செய்யக் கூடிய நிலை உருவாகும.

* அடிக்கடி தோட்டங்களில் நிலவும அசமபாவிதங்கள் படிப்படியாகக் குறைந்து விடும,

* மொழி புரியாத நிலையில் அல்லல்படும தோட்டத் தொழிலாளர்களின் புரிந்துணர்வு வலுவடையும,

(19 ஆம பக்கம பார்க்க)


எதிர்வரும பெருநாள் வைபவத்தை முன்னிட்டு இறக்குமதி செய்யப்பட்ட ரெடிமேட் ஷேட்டுக்கள் உயர் தரத்தில் பல ரகங்களில் பலவித நிறங்களில் அத்துடன் ஆண்களுக்குரிய பாத அணிகள், வாசனை திரவியங்கள், வாசனை பவுடர் முதலியவற்றை நியாயமான விலையில் மொத்தமாகவோ, சில்லறையாகவோ பெற்றுக் கொள்ள பெஸ்ட் சொய்ஸ்-

**BEST CHOICE**

180/1, SECOND CROSS STREET,
"PETTAH PLAZA"
COLOMBO—11.



## கல்ப் ஏசியன் வழங்கும்

## வெளிநாடு வேலை வாய்ப்பு

சவூதி அரேபியா (துரித பயணம)

| | |
|---|---|
| இயந்திரசாதன இயக்குனர் | — 600 ரியால் |
| ஏ/சி டெக்னீசியன் | — 800 ரியால் |
| மெக்கானிக் | — 750 ரியால் |
| இலக்ட்ரீசியன் | — 800 ரியால் |
| இலக்ரோனிக் டெக்னீசியன் | — 800 ரியால் |
| தொலை தொடர்பு டெக்னீசியன் | — 800 ரியால் |
| தியணைப்பு உதவியாளர் | — 600 ரியால் |
| லொன்ரிமென் | — 500 ரியால் |
| அயன்மேன் | — 600 ரியால் |
| சாரதிகள் | — 700 ரியால் |
| டெயிலர் | — 600 ரியால் |

சவூதி- குவைட்- ஓமான்- டுபாய் வீட்டுபணிக்கு
தையற்காரர்கள் (ஆண்/பெண்)
பணிப்பெண்கள்
சாரதி/பணிப்பெண் (கபல்ஸ்)
சாரதிகள்
சமையற்காரர்கள்

நேரில் வருக அல்லது உடன் தொடர்பு கொள்க-

**கல்ப் ஏசியன் டுவர்ஸ் அன் டிரவல்ஸ்**

5, வோல்டர் குணசேகர மாவத்தை, நாவல, ராஜகிரிய
போன்- 562662
அனுமதி இல- ஏ/எல் 690/1/2/3/4/5/6/7/8/90



# காதலி தேடிக் கொடுத்த மனைவி

ஆர். இராஜலிங்கம்

— 11 —

தேன்மொழிக்கு அத பெருமை யாக இருந்தது- தன் கணவன் தான் போட்டுக் கொடுத்த தேநீரை குடித்துவிட்டானே என்றுதான் பெருமைப்பட்டாள்

காலப்போக்கில் கணவனின் அன்பு தனக்குக் கிடைக்கும என்று அவள் நம்பினாள்

இதேவேளை திலீபனும தன் மூர்க்கத்தனமான நடவடிக்கை களை நினைந்து உள்ளூர வெட்க மும் வேதனையும பட்டான் ஒரு அப்பாவிப் பெண்ணை எவ்வித நியாயமும் இல்லாமல் இப்படி துன்புறுத்துகிறோமே என்று கவ லைப்பட்டான்-

அவளுடன் எப்படி நடந்து கொள்வது என்றும அவனுக்குப் புரியவில்லை- பிரேமினியை ரனகாரக் காதலித்த அவனால் இன் னொரு பெண்ணை நினைத்தும பார்க்க முடியவில்லை- இருந்தாலும பிரேமினியின் பேச்சைக் கேட்டு அவசரப்பட்டு இந்த திருமணத்தை ஏன் செய்தோம என்று மிக வருந்தினான் யோசிக் காமல் முட்டாள்தனமாக நடந்து கொண்டோமே என்று பலவாறு சிந்தனைக்குள்ளா னான்-

இப்படியே யோசித்து யோசித்து அவன் மூளைதான் குழம்பி யது- இனி என்ன செய்வது என்றே அவனுக்குப் புரியவில்லை

நேரம போவதே தெரியாமல் பல மணித்தியாலங்களாக தனி யான இடத்தில் அமர்ந்திருந்து சிந்தித்தான்-

நன்றாக இருட்டிய பின்னரே சுயநினைவு வந்து வீட்டுக்குப் போக ஆயத்தமானான்-

வீட்டையடைந்ததும உடைக ளைக் கூட மாற்றாமல் தன் அறைக்குள் போய் படுக்கையில் தொப்பென்று விழுந்தான்-

கூர்மையாக்கிக் கொண்டான்

அடுத்த அறையில் பேசும குரல் அவனுக்குத் தெளிவாகக் கேட்டது-

"ஏம்மா இப்படியே எத்தனை நாளைக்குத்தான் சாப்பிடாம



இருக்கப் போறீங்க? பட்டினி யாகக் கிடந்து உயிருக்கு எதை யும இழுத்துக் கொள்ளாதீங் கம்மா- வந்து கொஞ்சம சாப் பிடுங்க"

இது வேலைக்காரி முத்தம்மா வின் குரல்-

"இல்ல முத்தம்மா! எனக் குப் பசியில்ல- நீ போய் சாப்

"எனக்கு என்ன நடந்தாத் தான் என்ன முத்தம்மா! நான் ஒரு குற்றமும் செய்யாமலிருக் கையிலேயே அவர் என்னை இப் படி வெறுக்கிறார்- என் போன் றவங்களுக்கெல்லாம வாழ்க்கை

தேவைதானா? கணவரோட அன்பைக் கூட பெற முடியாத என் போன்ற பெண்கள் வாழ் வதே பாவம- வீட்டில் அவர் சாப்பிடாமலிருக்கும போது என்னை மட்டும சாப்பிட சொல்றியே!"

"பைத்தியம மாதிரி பேசா தீங்க அம்மா! அவர் வெளி

கடவுளே! நான் என்ன செய்வேன்" இப்படியே சிந்தித்த படி அவன் அடுத்த அறைக்குச் சென்றான்.

அவன் வந்ததை தேன்மொழி கவனிக்கவில்லை. அவள் ஆழ்ந்த

சிந்தனையிலிருந்தாள்.

சுவரை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

கண்களிலிருந்து கண்ணீர் மாலை மாலையாக வழிந்து கொண்டிருந்தது. சோகமே உருவாகக் காட்சியளித்தாள்.

அவள் இருந்த நிலையைப் பார்த்ததும திலீபனுக்கு மிகப் பரிதாபமாகப் போய் விட்டது

வேண்டும. இனியும அவளைத் துன்பப்படவிடக் கூடாது.

பட்டினியாகக் கிடக்கும அவளை சமாதானப்படுத்தி சாப்பிட வைக்க வேண்டும. இனி அவளிடம வெறுப்பைக் காட்டக் கூடாது"

இப்படி தீர்மானித்துக் கொண்ட திலீபன் தான் வந்தி ருப்பதை அவளுக்கு உணர்த்துவ தற்காக மெதுவாகச் செருமி னான்.

அவள் அவசர அவசரமாக முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டு அவனைத் திருமபிப் பார்த்தாள்.

அவளுடன் எப்படி பேசுவது என்ன பேசுவது என்று அவனுக் கும புரியவில்லை. மெதுவாக எச்சிலை விழுங்கிக் கொண்டு பேசினான்.

"தேன்மொழி! எனக்குப் பசிக்கிறது. சாப்பிட ஏதாவது தாவேன்" என்று கேட்டான்.

அதிர்ச்சியோடு எழுந்த அவ ளுக்கு அவன் சொன்ன வார்த் தைகள் புரியவில்லை. ஏதோ கனவு போல் தோன்றியது.

கேள்விக்குறியுடனும ஆச்சரி யத்துடனும அவன் முகத்தை நோக்கினாள்.

"எ...என்...ன? என்ன அத்தான் சொன்னீர்கள்?"

தட்டுத்தடுமாறியபடி கேட் டாள் தேன்மொழி.

"என்ன தேன்மொழி விளங்க வில்லையா? பசிக்கிறது. சாப்பிட ஏதாவது தா" என்றான்.

அவன் இப்படிக் கூறியதும அவளுக்கு மகிழ்ச்சி தாள வில்லை.

அவளின் முகம அன்றலர்ந்த தாமரையை நினைவுபடுத்தியது. அவளின் முகத்தில் இப்படியொரு சந்தோஷத்தை அவன் கண்டதே யில்லை.

"ம... வாங்க... அத்தான்... வாங்க சாப்பிடலாம" என்று சாப்பாட்டு அறையை நோக்கி சென்றவளை பரிதாபமாகப் பார்த்தான் திலீபன்.

"பாவம. அப்பாவிப் பெண். படித்திருந்தும பத்தாமபசலியாக இருக்கிறாளே. ஏன்தான் இந்தப் பெண்கள் இப்படி கணவனின் அன்புக்காக ஏங்குகிறார் களோ?"

இப்படி சிந்தித்துக் கொண்டு நின்றவனை சிறிது தூரம சென்று விட்டு திருமபிப் பார்த்தாள் தேன்மொழி. அவனை ஒரு மாதிரியாகப் பார்த்து விட்டு,

"வாங்கள் அத்தான். சாப்பிட

## வசீகரிக்குந் தீவு

— ஏ. எம். எம். அலி —

இந்து மகா சமுத்திரத்தில் இலங்கும முத்து — அழகு
இலங்குகின்ற இலங்கைநா டெங்கள் சொத்து
இந்தழகுத் தீவின்மேற் பாசம் வைத்து — இனி
இணைந்தொன்றாய்ச் செயற்படுவோம
நாமொன் றித்து

★

போர்த்துக்கீ சன்;வந்தான் "முத்தெ"டுத்தான் —
அவனைப்
போரிட்டு ஒல்லாந்தன் வென்றெ டுத்தான்
பார்ப்போமென் றாங்கிலேயன் போர்தொ டுத்தான் —
ஒல்லாந்
தனை;விரட்டி இத்தீவை அவன்;ப றித்தான்

★

வசிகரிக்குந் தீவின்றும அரங்க மாச்சே — இங்கே
வல்லரசு கள்;வந்து ஆட லாச்சே
அதிகரிக்கும அநியாயம கூட லாச்சே — பிர
லாபிக்கும புனலெழுந்து ஓட லாச்சே

★

பாக்குவெட்டி யின்;வாயிற் பட்ட பாக்கு — இரு
பாதிகளாய் ஆனதுபோல் நமது போக்கு
நீக்கிடுவோம இப்போக்கு பகைமை நீக்கு — நீ
நெஞ்சினிலே ஞாயத்தை நிறையத் தேக்கு

★

மேல்நாட்டான் நமநாட்டை ஆண்ட காலம —
அவன்
மேல்வைத்தோம ஒருமித்து நாங்கள் கோபம
மேல்நாட்டான் கால்நட்ட அந்தக் காலம — நம
மிடைவந்த ஒற்றுமைஎங் கென்றே கூறும?

★

தனவந்தர் தமக்கில்லை கவலை இப்போ — கல்விக்
கண்பெற்ற வர்;கூட கபோதி இப்போ
மனம நொந்து வாழ்க்கையிலே மகிழ்வும உப்போ —
என
மாறிவரும நிலை சொன்னேன் அதுவுந்
தப்போ

பின்தொடர்ந்தான்.

அவள் சுறுசுறுப்பாக இயங்கி னாள்- சில நிமிடங்களுக்குள் மேஜை மீது சாப்பாடு தயாராகி விட்டது.

அமர்ந்து சாப்பிடத் தொடங்கி னான். அவள் அருகில் நின்று கொண்டிருந்தாள். அவனுக்கு தேவையானதைப் பரிமாற தயாராக இருந்தாள். அவளைப் பொறுத்தவரை இது ஒரு அபூர்வ மான வாய்ப்பு ஆயிற்றே.

தொடர் கதை

சாப்பிட்டுக் கொண்டே அவள் முகத்தை நோக்கினான் திலீபன். பின்னர்,

"தேன்மொழி! நீ சாப்பிட

அதிகம சாப்பிட முடியவில்லை. மனதில் இருந்த பாரத்தால் உணவு இறங்கவில்லை. இருந்தா லும அவளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதற்காக ஓரளவுக்கு சாப்பிட்டான்.

கையைக் கழுவிவிட்டு அவன் சென்றபின் தேன்மொழி சாப்பிட அமர்ந்தாள். கணவன் வைத்து விட்டுச் சென்ற மிகுதிச் சாப் பாட்டில் அவள் கவனம சென் றது. அமர்ந்திருந்து அதனைச் சாப்பிட ஆரமபித்தாள்.

ஏதோ கிடைத்தற்கரிய பொருள் கிடைத்து விட்டதைப் போல் அதனை மகிழ்ச்சியுடன் சுவைத்து சாப்பிட்டாள். அந்த மிகுதிச் சாப்பாடே அவளுக்கு மனநிறைவைக் கொடுத்தது.

கணவனின் அன்பு தனக்கு இனி கிடைத்துவிடும என்று நமபிய அவள் இன்று அவனின் அறைக்குள்ளேயே போய் படுத்துக் கொள்ளலாமா என்று நினைத்தாள். அதனால் ஏதும அவனுக்கு தன்மேல் மீண்டும வெறுப்பு ஏற்பட்டு விடுமோ

ளைக் கூட மாற்றாமல் தன் அறைக்குள் போய் படுக்கையில் தொப்பென்று விழுந்தான்—

அவன் வந்ததை தேன்மொழி கவனிக்கவில்லை போலும அடுத்த அறையில் அவள் யாருடனோ பேசிக் கொண்டிருக்கும சத்தம் கேட்டது— அவள் யாருடன் என்ன பேசுகிறாள் என்பதை அறிவதற்காக திலிபன் காதை

இது வேலைக்காரி முத்தம்மா வின் குரல்—

"இல்ல முத்தம்மா! எனக்குப் பசியில்ல— நீ போய் சாப்பிடு" இது தேன்மொழி—

"பசியில்ல, பசியில்லன்னு மூணு நாளா சாப்பிடாமக் கிடக்கிறீங்களே அம்மா! இது எதுல கொண்டுபோய் விடுமோ தெரியலியே!"

என்னை மட்டும சாப்பிட சொல்றியே!"

"பைத்தியம மாதிரி பேசாதீங்க அம்மா! அவர் வெளியில சாப்பிட்டுட்டு வாறார் வீட்டில் சாப்பிட வேண்டியதில்ல நீங்க அப்படியா? மூணு நாளா பட்டினியா கிடந்து வாடுறீங்களே!"

"மனைவின்னு ஒருத்தி வீட்டில் இருக்குமபோது அவர் வெளியில் சாப்பிடுறது எப்படி நியாயமாகும?"

"நியாயம் அநியாயமெல்லாம பார்க்க முடியாது அம்மா அவரு ஏதோ கோபத்துல இருக்காரு போல— சீக்கிரம உங்களோட நல்ல குணத்தை புரிஞ்சிக்கத்தான் போறாரு வேணும்னா பாருங்க"

"அப்படி ஒரு நல்ல நேரம வந்தா நான் வயிறார சாப்பிடுகிறேன் முத்தம்மா இப்ப நீ போய் சாப்பிடு, போ"

இப்படி அவர்கள் பேசிக் கொண்டிருந்ததை திலீபன் கூர்ந்து கவனித்தான்—

அவனின் கல்மனம கரைந்தது

"கடவுளே! தேன்மொழி மூன்று நாளாக சாப்பிடாமல் பட்டினியாகக் கிடக்கிறாளா? இது என்ன கொடுமை? இப்படி அவள் துன்பத்தை அனுபவிக்க நான்தானே காரணம பட்டினியாகக் கிடந்தவளையா அடித்து கொடுமைப்படுத்தினேன்— எவ்வளவு கொடூரமானவன் நான்

"சே... பிரேமினியின் பேச்சைக் கேட்டு எவ்வளவு மடத்தனமான காரியத்தைச் செய்து விட்டேன். ஒரு பாவமும அறியாதவளை அடித்துக் கொடுமைப்படுத்தும நிலைக்கு வந்து விட்டேனே.

என் அன்புக்காக ஏங்கும அவளை வெறுத்து ஒதுக்கும நிலையில் இருக்கிறேனே. அவளுடன் என்னால் சந்தோஷமாக வாழவும முடியாது.

கொண்டிருந்தது. சோகமே உருவாகக் காட்சியளித்தாள்.

அவள் இருந்த நிலையைப் பார்த்ததும திலீபனுக்கு மிகப் பரிதாபமாகப் போய் விட்டது.

சில நிமிடங்கள் பின்னால் நின்றபடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் நிலையில் மாற்றம ஏற்படவே இல்லை.

"சோகமே உருவாக இருக்கும அவளை சந்தோஷப்படுத்த

தேன்மொழி. அவளை ஒரு மாதிரியாகப் பார்த்து விட்டு,

"வாங்கள் அத்தான். சாப்பிட வேண்டும என்றீர்களே!" என்று கேட்டாள்.

அவன் மனநிலை அதற்குள் மாறிவிட்டதோ என்ற சந்தேகம அவளுக்கு. அதனைப் புரிந்து கொண்ட அவன் "இதோ வாறேன்" என்றபடி அவளைப்

சாப்பிட்டுக் கொண்டே அவள் முகத்தை நோக்கினான் திலீபன். பின்னர்,

"தேன்மொழி! நீ சாப்பிடவில்லை?" என்று கேட்டான்.

"இல்லை அத்தான். நீங்கள் சாப்பிடுங்கள். நான் பின்பு சாப்பிடுகிறேன்" என்றாள்.

சாப்பாடு மிகவும சுவையாக இருந்தது. இருந்தாலும அவனால்

அறைக்குள்ளேயே போய் படுத்துக் கொள்ளலாமா என்று நினைத்தாள். அதனால் ஏதும அவனுக்கு தன்மேல் மீண்டும வெறுப்பு ஏற்பட்டு விடுமோ என்றும பயந்தாள், மற்ற நாட்களைப் போல இன்றும வேறு அறையிலேயே படுத்துக் கொள்வது என்று தீர்மானித்துக் கொண்டாள்.

[தொடரும்]

# தேய் பிறையானேன்!

— செ. குணரத்தினம் —

மீனழுதால் தெரிவதில்லை கடலுக்கு — இங்கே
நானழுதால் தெரிவதில்லை உலகிற்கு!
மானழுதால் கவலையில்லை நிலவிற்கு — காட்டில்
தேனழுதால் லாபமுண்டு பலருக்கு!

★

வற்றாத கஙகையெந்தன் கண்களே — நான்
விற்காத தஙகமெந்தன் பெண்மையே!
உற்றார்க்கும, உறவினர்க்கும பொமமையே —
இங்கே
மற்றார்க்கு எல்லாமநான் மந்தையே!

★

பழிதீர்க்க ஆண்டவனும பழகிவந்தானா? — இல்லை
விழிநீரை முத்தாக்கக் கவலை தந்தானா?
அழிகின்ற உடலெடுத்தால் அழுவது நானா? —
நெஞ்சை
பிழிகின்ற இறைவனைநான் தொழுவது வீணா?

★

முற்பிறப்பில் மூண்டவினை முடியவில்லையா? —
அந்த
முற்பிறப்பில் பட்டகடன் ஒழியவில்லையா?
இப்பிறப்பில் பழைய கடன் கேட்பது பாவம! —
நான்
எப்பிறப்பு எடுத்தாலும எனக்கில்லை லாபம!

★

தாயிருந்தால் தலைதடவி ஆறுதல் சொல்வாள் —
எனக்கு
வாய் திறந்து வார்த்தைகளால் தேறுதல் சொல்வாள்!
தாயுமில்லை யாருமில்லை எஙகு நான் போவேன்? —
நான்
தேய் பிறையாய்ப் போனேனே எப்படி வாழ்வேன்?

# ஏறி வந்த ஏணியை சில்வஸ்டர் எட்டி உதைக்கலாமா?

## ரம்போ பாத்திரத்தில் நடிக்கமாட்டாராம்

ரமபோ பாத்திரம எனக்கு சலித்து விட்டது, இனிமேல் ரமபோவாக நான் நடிக்கப்போவதில்லை என்று கூறியிருக்கிறார், சில்வஸ்டர் ஸ்டெலோன் ரொக்கி தொடரில் நடித்து இவர் உலகப் புகழ் பெற்றிருந்தாலும, பெஸ்ட் பிளட் திரைப்படம தான் ரசிகர்களின் கவனத்தை இவர் மீது திருப்பியது,

அடுத்து இவர் நடித்து வெளி வந்த ரமபோ திரைப்படம ஸ்டெலோனை ஒஹோ என உயர்த்தி விட்டது,

இன்று இவர் ஒரு திரைப் படத்துக்கு பல கோடிகளை வாஙகுகிறார், ஆனாலும இதற்கு அடித்தளமான ரமபோ எனக்கு இனிமேல் வேண்டாம என்று ஏறி வந்த ஏணியை உதைக்கிறார் ஸ்டெலோன்,

ரமபோவாகட்டும, ரொக்கியாகட்டும அல்லது கோப்ராவாகட்டும தனது திரைப்படஙகளில் இவர் அதிகம வாய் திறந்து பேசுவதேயில்லை,


முகத்தில் உணர்ச்சிகளை பிரதிபலிப்பதும குறைவு, இவர் பேசினாலும சொற்கள் இலேசில் புரிவதில்லை, ஆனால் இவர் என்ன சொல்கிறார் தெரியுமா?

நான் நன்றாகக் கதைக்கக் கூடியவன், ஊமை ரமபோ பாத்திரம எனக்கு வேண்டாம என்கிறார், நான் நடிகனாகத் தான் சினிமாத் துறைக்கு வந்தேன், தசைத்திரட்சி கொண்ட ஆணழகனாக அல்ல, என்று கூறியிருக்கிறார் ஸ்டெலோன்,

எல்லா ஸ்டன்டுகளும செய்தாகி விட்டது, இனி செய்வதற்கு ஒன்றும இல்லை, நான் இனிமேல் நல்ல கதாபாத்திரஙகளை ஏற்று நடிக்கப் போகிறேன் என்கிறார் இவர்,

புகழின் உச்சியில் இருந்த போது இப்படிச் சொல்லித்தான் வெளியே போனார் ஜேமஸ் பாண்ட் கானறி, அத்தோடு அவர் கதை சரி, ஆனால் ஜேமஸ் பாண்ட் பாத்திரம பிழைத்துக் கொண்டது, இன்றும ஷோன் கானறி நினைவு கூரப்படுகிறார், என்றால் அது பொன்ட் காரணமாகத்தான்,

சில்வெஸ்டரும இதே பாதையைத்தான் இப்போது பின்பற்



சில்வஸ்டர் ஸ்டேலோன்

றுப் போகிறார் என்றே தோன்றுகிறது, அவர் பிழைத்துக் கொள்வாரா, பாத்திரம பிழைத்துக் கொள்ளுமா? காலம தான் பதில் சொல்ல வேண்டும,

(த-032)

# போதைப் பொருள் ஒழிப்பு தசாப்தம்

ஐ நா பொதுச் சபை விசேஷ கூட்டத்தில் போதைப் பொருள் உற்பத்தி, மற்றும கள்ளக் கடத்தல் தடுப்பு குறித்து முக்கியத்தவம கொடுக்கப்பட்டது.

சபை அரசியல் பிரகடனம ஒன்றையும உலக வியாபகமான செயல் திட்டம ஒன்றையும நிறைவேற்றியது.

போதைப் பொருள் துஷ்பிரயோகம கள்ளக் கடத்தல் மூதலியவற்றிலிருந்து மனித குலத்தைப் பாதுகாக்க திடசங்கற்பம பூண்டுள்ளதாக அரசியல் பிரகடனம கூறுகிறது.

1991 - 2000 ஆண்டுகள் போதைப் பொருள் துஷ் பிரயோகத்திற்கு எதிரான தசாப்தமாக பிரகடனஞ் செய்யப்பட்டது.

இன்று போதைப் பொருள் வர்த்தகர்கள் இராட்சத பலம பெற்றுள்ளனர். அவர்களின் கைவரிசை படாத நாடு ஒன்றுமே இல்லை. வருடம ஒன்றுக்கு அவர்களின் வியாபாரம 500 பில்லியன் டாலர் மட்டத்திற்கு உயர்ந்துள்ளது.

பெருவாரியான போதை வஸ்துக்கள் ஆசியாவிலிருந்து உலகச் சந்தைகளுக்குச் செல்கின்றன. "பொன் முக்கோணம" மற்றும "பொன் இளமபிறை" இரண்டும ஆசியாவில் உள்ளன.

இவை மிக பிரசித்தமானவை. முன்னது தாய்லாந்து, பர்மா மற்றும லாவோஸ் எல்லைகளின் சந்திப்பில் உள்ளது. "பொன் இளமபிறை" ஈரான், ஆப்கானிஸ்தான் மற்றும பாகிஸ்தான் எல்லையில் உள்ளது.

"பொன் இளமபிறை" முதல் ஸ்தானத்தை வகிக்கக் கூடிய அளவுக்கு வளர்ந்து விட்டதாக நிபுணர்கள் கருதுகின்றனர்.

ஐ நா புள்ளி விவரங்களின் பிரகாரம ஹெரோயின், அபின் மற்றும போதை வஸ்துக்கள் உற்பத்தியில் இன்று பாகிஸ்தான் பிரதான இடம வகிக்கிறது.

கடந்த பத்து வருடகாலத்தில் அங்கே உற்பத்தியான பக்குவப்படுத்தப்பட்ட ஹெரோயினும அபினும நாலு மடங்கு அதிகரித்தது. இன்று அது 900 தொன் ஆக உள்ளது. இதில் 70 சத விகிதம அமெரிக்காவுக்கும மேற்கு ஐரோப்பாவுக்கும "ஏற்றுமதி செய்யப்படுகிறது"

தாய்லாந்தில் 700 கிராம போதைப் பொருளின் விலை 193 டாலர். ஆனால் அமெரிக்காவிலே இதன் விலை சுமார் பத்து லட்சம டாலர்.

போதைப் பொருள் சமபந்தப்பட்ட பிரச்சினைகள் அநேக நாடுகளில் பொதுஜன, பொருளாதார மற்றும ஜனநாயக அமைப்புகளை அச்சுறுத்துகின்றன என்று ஐ நா பொதுக் காரியதரிசி ஜாவியபெரெஸ் டி குவெய்லர் கூனார்.

"அது எமது நாகரிகத்தின் உள்ளத்தின் நடுவே வைக்கப்பட்ட நேர - குண்டாக" அமைந்துள்ளது. அது வெடிக்காமல் இருக்க வேண்டும. அதற்கு "சர்வதேச ஒத்துழைப்பு வேண்டும" என்று அவர் மேலும கூறினார். (ம)

## கூட்டு தொழில் முயற்சிகள்

3,300 மில்லியன் ரூபின் மூலதனத்துடன், 1274 கூட்டுத் தொழில் முயற்சிகள் சோவியத் யூனியனில் செயல்படுகின்றன, இவர்களில் 1400மில்லியன் வெளிநாட்டுப் பங்குதாரர்களாவ்ர், அதிகமான கூட்டுத் தொழில் முயற்சிகள் மேற்கு நாடுகளுடன் செயல்படுகின்றன,

191 மேற்கு ஜெர்மனியுடனும், 146 பின்லாந்துடனும, 143 ஐக்கிய அமெரிக்க நாடுகளுடனும பிரிட்டனுடன் 84, ஒஸ்ரியாவுடன 90, இத்தாலியுடன் 831 கூட்டுத் தொழில் முயற்சி நடவடிக்கைகள் செயல்படுகின்றன,

(ப

## பரிசோதனை

எயிட்ஸ் நோய் தொற்றியிருக்கிறதா என்று ரஷ்யாவில் ஐந்து கோடி மக்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். அதாவது ஒவ்வொரு ஆறு பேரிலும ஒருவர் இப் பரிசோதனைக்கு உற்பத்துப்படுவார்.

வங்காளதேசத்தைச் சேர்ந்த முக்கிய குடும்பத்தினர் பிரிட்டிஷ் ஆஸ்பத்திரி ஒன்றிற்கு விழிவெண் படலத்தைப் பொருத்தும சிகிச்சை செய்யச் சென்ற போது இலங்கைக்குச் செல்லுமாறு கூறி அனுப்பினர்-

கண் சிகிச்சையால் பணக்காரர் மட்டுமல்ல ஏழைகளும பயன் பெற்றுள்ளனர்- 45 நாள் குழந்தையாக இருக்கும போது தங்களின் பார்வையை இழந்த ஜயந்தி சுந்தரத்திற்கு 1988 ஆம் ஆண்டு கண்பார்வை கொடுக்கப்பட்டது- மலேஷியாவைச் சேர்ந்த சிறுமி அவர்-

கென்யாவைச் சேர்ந்த ஐசாக் மயூராவும் ஸ்டான்லி கஞ்சுவும இலங்கைக் கண்களுடன் இப்பொழுது பார்க்கிறார்கள்- ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச பிரதம மந்திரியாக இருந்த போது அவ்விருவரையும சந்தித்து மகிழ்ந்தார்-

வியட்நாம் யுத்தத்தின் போது பார்வை இழந்த சிறுவர்களுக்கு அமெரிக்கக் கப்பல்களில் இலங்கைக் கண்களைப் பொருத்தியுள்ளனர்- அவை இலங்கையிலிருந்து சைகோனுக்கு விமானத்தில் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து ஹெலிகொப்டர்கள் மூலம கப்பல்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன-

இலங்கையின் தேவைக்குமதிகமான விழிவெண் படலங்கள் யாவற்றையும எடுக்க 1967 ஆம ஆண்டில் பாகிஸ்தான் விருப்பம தெரிவித்தது- அதிக அளவு இலங்கைக் கண்களைப் பெற்ற நாடு பாகிஸ்தான்.

வெளிநாடுகளின் தேவையைக் கவனிப்பதற்காக சர்வதேச கண்வங்கி 1965 ஆம ஆண்டில் ஆரமபிக்கப்பட்டது- ஆண்டு தோறும 200 முதல் 500 கண்களை அனுப்பும இலக்கை அது இப்போது வைத்திருந்தது. இன்றைய இலக்கு ஆண்டுக்கு 2000-

"விமானங்கள் செல்லும நேர அட்டவணையை நாம கவனமாக ஆராய்ந்துள்ளோம" என்கிறார் டாக்டர் சில்வா. "விமானம புறப்படும சமயம் கண்களைக் கொண்டு போய் ஒப்படைத்து விடுவோம" என்கிறார் அவர்-

ஆரமபத்தில் ஒரு கண்ணை 34 மணி நேரமதான் பாதுகாத்து வைக்க முடியும- இப்பொழுது 3 முதல் 5 வாரங்கள் வரை வைக்கலாம- இதன் விளைவு- கிராமப் புறங்களுக்கும கார்கள் ரயில்கள் மூலம கண்களைக் கொண்டு செல்லலாம- (ம)

— பனோஸ் —



ஹட்சன் சில்வா

## கப்பலின் வேகம்

பாய்மரக் கப்பல்களில் பல வகை உண்டு- நூற்றுக் கணக்கில் சிறிய பாய்மரங்கள் வைத்து கட்டப்பட்ட கப்பல்கள் மிக வேகமாகச் செல்லக் கூடியவை

வேகமாக வீசும் காற்றின் சக்தியைக் கொண்டு இந்தக் கப்பல் செல்லும்- இக்கப்பலின் வேகம முன் காலத்தில் பயன்படுத்தப்பட்ட நீராவி கப்பல்களுக்கு இணையாக இருக்கும்-

(த—024)

## ஒட்டகத்தை கட்டுங்கள்

— ஜின்னாஹ் —

ஒட்டகத்தைக் கட்டிவைக்க வேண்டும பின்தான்
உதவியருள் என்றிறைய வேண்ட வேண்டும
திட்டமிட்டு நல்வழியில் முயன்றால் தானே
தெய்வஅருள் கிட்டுமபொருள் சேரும அன்றி
இட்டமபோல் இறைகாப்பான் என்று வீணே
இருப்பதனாற் பயனுண்டோ கூரை நீக்கி
கொட்டிடுவான் ஆண்டவனென் றெண்ணு வோன்தன்
குறுமதியால் தோல்விதனைத் தழுவு வானே.

★

பாடுபட்டு உழைப்பவனே கூலி வேண்டிப்
பார்த்திருக்க லாமகிட்டும அன்றி வீணாய்
வீடடைத்து கிடந்திறைவன் உதவி கேட்டால்
வேண்டுதலோர் நாளெனினும பலிக்க மாட்டா
தேடுபவன் தேட்டத்திற்க் கேற்ற வாறே
தெரிந்தவனும தனதருளை மனமே ஒப்பி
நாடிடுவான் இதிலொன்றும ஐய மில்லை
நான் வாழ்வில் கண்டவுண்மை நமபு வீரே.

★

முயலுங்கள் முயலுங்கள் முயற்சி செய்வீர்
முயன்றவரை முயன்றிடுவீர் சோமபி டாதீர்
முயலுங்கள் முயற்சியிலே தோல்வி காணின்
முன்வைத்த காலைப்பின் வைத்தி டாதீர்
தயங்காதீர் தோல்விகளே வெற்றி தன்னைத்
தேடியுயர்ந் தேற்றுகின்ற படிக ளாகும
முயல்வததான் எமதுகடன் முடிவில் நல்ல
முயற்சிக்குத் தெய்வஅருள் உண்டு தேர்வீர்.

# பொருந்தாக் கல்வி

செல்வங்களில் கல்விச் செல்வமும பெரியது. இன்று பல தாய்மார் "டிகிரி" வாஙகிய தஙகள் புதல்விகளுக்கு மாப்பிள்ளை பார்க்கும போது "அவள் படிப்பில் பிசியாக இருந்ததால் சமையல் பழக நேரமில்லை. விரைவில் பழகிடுவாள் என்று சொல்கிறார்கள்.

ஒருநாள் மாமியார் வீட்டில் தன்னைப் பார்க்க வந்த தாயாருக்கு பாயசம கொடுக்க விரும்பினார். மருமகளை பத்திரிகைக் குறிப்பைப் பார்த்து பாயசம காய்ச்சுமபடி கூறினார்.

மருமகளும குறிப்பைப் பார்த்து தயாரித்தாள். அதில் கடைசியாக அடுப்பிலிருந்து இறக்கியதும ஏலம போடவும என்றிருந்தது.

மருமகளும ஏலம ஒரு தடவை! ஏலம இரண்டு தடவை!! ஏலம மூன்று தடவை!! என்று சத்தம போட்டாள்.

படித்த பெண் பாட்டியை அணுகி சுலபமாக செய்யக் கூடிய சாப்பாடு தயாரிப்பது எப்படி?" என்று கேட்டாள். பாட்டியும உப்புமா என்று சொல்லி, அதை தயாரிக்கும முறையை சொல்லிக் கொடுத்தார்.

"வெஙகாயம, மிளகாய். கடுகு போன்றவற்றை தாளிதம செய்து விட்டு சிறிது தண்ணீர் விட்டு ரவையைப் போட்டு அது கெட்டியாகும வரை கிளறு. அது தான் உப்புமா" என்று சொன்னார்.

அவளுக்கோ சந்தோஷம பிடிபடவில்லை. இதோ ஒரே நொடியில் என்று சொல்லிவிட்டு அடுக்களைக்குள் ஓடினாள்.

பாட்டியும அரை மணி நேரம காத்திருந்து விட்டு உள்ளே எட்டிப் பார்த்தார். "என்ன பாட்டி கிளறுகிறேன் கிளறுகிறேன் தண்ணியாகத்தானே இருக்கிறது" என்றாள்.

பாட்டி கவனமாக பார்த்து விட்டு, "அதுசரி அடுப்பைப் பற்ற வைத்தாயா?" என்று கேட்டார்.


"பாட்டி அதை நீஙகள் முன்னர் கூறவில்லையே." என்றாள் அவள்.

பெண்கள் எவ்வளவுதான் படித்தாலும அது பொருந்தாக் கல்வியாக இருக்கக் கூடாது. இல்லாவிட்டால் இப்படித்தான் விபரீதமாக முடியும.


(பேராசிரியை இளமபிறை மணிமாறன் சொற்பொழிவில் கேட்டது. தொகுப்பு: எஸ் சூரிய குமாரன்.)
(ம)

பிறிஸ்டல்

சொல்லாக்கம்



ஆம் நீங்கள் பரிசுக்கு மேல் பரிசு பெற வாய்ப்பளிக்கும் மகத்தான போட்டி. இன்றே பிறிஸ்டல் சொல்லாக்க விளையாட்டில் பங்குபற்றி அற்புதமான பரிசுகளை வெல்லுங்கள்!



பிறிஸ்டல் சொற்களை எண்ணுங்கள்



ரூ.1,000,000 பெறுமதியான 675 பரிசுகளை வெல்லுங்கள்

இது மிகவும் சுலபமான விளையாட்டு. இந்தக் கட்டங்களுக்குள் பிறிஸ்டல் என்ற வார்த்தை நிடையாகவும் நிலைக்குத்தாகவும் பல இடங்களில் காணப்படுகின்றது. எத்தனை பிறிஸ்டல் என்ற வார்த்தைகள் உள்ளன என்பதை எண்ணுங்கள் நினைவிருக்கட்டும். பிறிஸ்டல் என்ற சொல்லின் எல்லா எழுத்துக்களும் இடைவிடாமல் நேர்கோட்டில் இருக்க வேண்டும்.

சரியாக எண்ணி முடித்த பின் கீழ்க்காணும் கூப்பனை நிரப்பி ஏதாவது ஒரு பிறிஸ்டல் பக்கெட்டையும் இணைத்து த.பெ. இல 2061 கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பவும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் 'பிறிஸ்டல் சொல்லாக்கம் என்று குறிப்பிட மறவாதீர்கள் சீட்டிழுப்பு மூலம் தெரிவாகும் அதிஷ்டசாலிகளுக்கு விதவிதமான பரிசுகள் வழங்கப்படும்

இறுதித் ...

1 மேலதிக கூப்பன்கள் தேவைப்படி நீங்களே தயாரித்துக் கொள்ளலாம அல்லது பத்திரிகையில் உள்ள கூப்பனின் நிழற்பட பிரதியை பாவிக்கலாம
2 ஒருவர் எத்தனை பிரவேசக் கூப்பன்களும் அனுப்பலாம ஒவ்வொன்றும் தனித்தனி

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| B | B | R | I | S | T | O | L | B | B |
| | I | S | T | O | L | I | R | R |




# இறுதிச் சீட்டிழுப்பில் 75 பரிசுகள்

1 டொயோட்டா கொரொல்லா கார்
2 125 சீசி ஹொண்டா மோட்டோர் சைக்கிள்கள்
8 8-கன அடி சிங்கர் குளிர்சாதனப் பெட்டிகள்
8 14'' சிங்கர் வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்
5 துவிச்சக்கர வண்டிகள்
20 யுனிக் ஸ்டீரியோ கசெற் றெக்கோடர்கள்
கூ சாதாரண துவிச்சக்கர வண்டிகள்
25 சிங்கர் இரட்டை காஸ் அடுப்புக்கள்

ஒவ்வொரு கூப்பனும் உங்களுக்கு ஒவ்வொரு வெற்றி வாய்ப்பைத் தரும்

# இருவாராந்த சீட்டிழுப்புகளில் 600 பரிசுகள்

100 சிற்றிஸன் கைக்கடிகாரங்கள்
100 2 அலைவரிசை வானொலிப்பெட்டிகள்
100 விளையாட்டுப் பைகள்
100 கைப்பந்துகள்
100 காற்பந்துகள்
100 ரி-சேட்டுகள்



## விளையாட்டின் விதிகள்

1 மேலதிக கூப்பன்கள் தேவைப்படின் நீங்களே தயாரித்துக் கொள்ளலாம் அல்லது பத்திரிகையில் உள்ள கூப்பனின் நிழற்படப் பிரதியைப் பாவிக்கலாம்
2 ஒருவர் எத்தனை பிரவேசக் கூப்பன்களும் அனுப்பலாம் ஒவ்வொன்றும் தனித்தனி உறையில் அனுப்பப்பட வேண்டும்
3. உங்கள் பிரவேசக் கூப்பன்களை மே 31 1990 க்கு முன் கிடைக்கத்தக்கதாக அனுப்ப வேண்டும்
4. சீட்டிழுப்பில் தெரிவாகும் சரியான கூப்பன்களுக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்
5. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது கடிதத் தொடர்புகளுக்கு இடமில்லை
6. சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட். தொம்ஸன் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் ஆகியவற்றின் ஊழியர்களும் அவர்களின் குடும்பத்தினரும் பங்குபற்ற முடியாது.
7. இருவாராந்தச் சீட்டிழுப்பில் பரிசுபெறும் கூப்பன்கள் உட்பட சகல கூப்பன்களும் இறுதிச் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும்.
8. 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே இப் போட்டியில் பங்குபற்றலாம்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| B | B | R | I | S | T | O | L | B | B |
| B | R | I | S | T | O | L | I | R | R |
| R | I | S | T | O | L | B | R | I | I |
| I | S | T | O | L | B | R | I | S | T |
| S | T | B | R | I | S | I | B | T | O |
| I | O | R | B | R | I | S | T | O | B |
| L | L | B | R | I | S | T | O | L | R |
| O | T | R | I | S | T | O | B | B | I |
| B | R | I | S | T | O | L | R | B | S |
| B | R | S | T | O | L | B | I | B | T |
| R | O | T | O | B | T | O | T | R | O |
| I | S | L | L | B | R | I | S | T | L |

எண்ணுங்கள்!
பிறிஸ்டல் விளையாடுங்கள்
வெல்லுங்கள்!

JWT CTC 20127




## சுவையைப் பகிர்ந்துகொள்வோம்

# பிறிஸ்டல்

விலை:
10 - ரூ. 17·00
20 - ரூ. 34·00

அரசாங்க எச்சரிக்கை:
புகைப்பிடிப்பதால் உங்கள் சுவாசப்பைகளுக்குத் தீங்கு விளையக்கூடும்

கட்டங்களுள் காணப்படும் பிறிஸ்டல்களின் எண்ணிக்கை.

கடித உறையின் இடது மேல் மூலையில் பிறிஸ்டல் எனக் குறிப்பிட்டு த.பெ. 20 கொழும்புக்கு அனுப்பவும்

பெயர் ______________________

முகவரி ______________________

______________________



# மனையும் மங்கையும்

## எல்லைக் கோட்டுக்குள் வாழப் பழகுங்கள்

## பெண்களுக்கு அதுவே அழகு

பெண்ணிற்கு இயல்பாக உள்ள குணங்கள் நான்காகும்- தமிழ் இலக்கியங்களிலும் பண்பாட்டிலும் இந்த அம்சங்கள் வலியுறுத்தப்பட்டு இருப்பதை அனைவரும் அறிவார்கள்-

இக் குணங்கள் பெண்களுக்கு இயற்கையாக ஊற்றெடுத்துக் கொள்கின்றன- இவைதான் அவர்களுக்கு அழகைத் தருகின்றன... மதிப்பைத் தேடித் தருகின்றன-

கண்ணியத்தின் பிறப்பிடமாக அவர்கள் காட்சியளிக்க முடிகிறது- அவர்களது சுபாவத்திற்கு ஒத்ததும் அதுவே!

அவர்களுக்கு இறைவன் ஏற்படுத்தியுள்ள பணிகளும் மேற்கூறிய பண்புகள் இன்றி அமையாதவை- பெண்ணின் உடல் அமைப்புக்கும் அவர்களுக்குள் ஏற்பட வேண்டிய சிந்தனா சக்தி உள்ளுணர்வுகள் மனோபாவங்கள் போன்ற தன்மைகளுக்கும் மேற்கூறிய பெண்மை குணங்கள் மெருகூட்டுகின்றன - அழகு சேர்க்கின்றன-

அவர்களது பணிகளை சிறக்கச் செய்கின்றன- இயற்கையும் அதைத்தான் எதிர்பார்க்கிறது- இறைவனும் அவ்வாறே பணித்திருக்கிறான்- அமைத்திருக்கிறான்-

துரதிஷ்டவசமாக இப் பெண்மைக் குணங்கள் சிறிது சிறிதாக இன்று சிலரிடையே மங்கி வருகின்றன- மறைந்து வருகின்றன-

நவநாகரிகத்தைப் பின்பற்றுபவர்கள் இயற்கையாகப் பெண்களிடம் காணப்பட வேண்டிய தன்மைகளை மாற்றி அமைத்து வருகின்றனர்-

அதற்காக அரும்பாடுபட்டு வருகின்றனர்- தாங்கள் கெட்டுப் போனதுமல்லாமல் மற்றவர்களையும் கெடுப்பது என்ற ஒரே சிந்தனையில் இன்று அவர்கள் லயித்திருக்கிறார்கள்

நவநாகரிகத்தில் மூழ்கியிருக்கும் பெண்களுக்கு மன அமைதி கிடையாது- தியாக உணர்வு என்பது மருந்துக்கும் கூட இருக்காது-

தங்களது சுயநலன்களை இம்மியும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள்- திருப்தி என்னும் பண்பு அவர்கள் தேடித் தேடி அலையும் கானல் நீர்-

அவர்களுக்கு அது கிட்டவே செய்யாது- பெண்மையையே அவர்கள் புறக்கணித்து விடத் துணியும் போது மன நிறைவு அமைதி என்பன அவர்களை விட்டு என்றோ பறந்துவிட்டிருக்கும்!

இம்மாதிரியான மனப் போராட்டங்களிலும் உள் வேதனைகளிலும் உழன்று கொண்டிருப்பவர்கள் தங்களது தோல்வியை வெளிக்காட்டிக் கொள்வதில்லை-

வெளிப்பார்வைக்கு அவர்கள் சுதந்திரமாகவும் தன்னிச்சையாகவும் காரியமாற்றி வருவதாகக் காட்டிக் கொள்வார்கள்-

இந்தப் பகட்டும் ஆர்ப்பாட்டமும் வெளிப்பார்வைக்குத்தான் அவர்களுடைய அந்தரங்கத்தில் அவர்களை வாட்டியெடுக்கும் பிரச்சினைகளை உணர்வுகளை அவர்கள் தங்களுக்குள் அமுக்கியே வைத்துக் கொள்வார்கள்-

சிறுகச் சிறுக அதில் கிடந்து அமுங்குவார்களே தவிர தங்களது குறைபாடுகளை பகிரங்கமாக அவர்கள் ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள்-

அவர்கள் தோற்றுவிட்டாலும் பரவாயில்லை- ஒப்புக் கொள்ளாவிட்டாலும் பாதகமில்லை... ஆனால் அவர்கள் தங்களது கதி மற்ற பெண்களுக்கும் ஏற்பட வேண்டும் என்று முயற்சிக்கிறார்கள்-

அதற்காக அரும்பாடுபடுகிறார்கள்... தானும் கெட்டான் பிறரையும் கெடுத்தான் என்ற கதையாக அல்லவா இருக்கிறது-

எனவேதான் ஒவ்வொரு பெண்களும் எச்சரிக்கையாக இருக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்- தங்களது சுகத்தை மன அமைதியை திருப்தியை கற்பை தேவையுள்ளத்தை மனப் பக்குவத்தை இணக்கமான வாழ்வை விட்டுக் கொடுக்கும் தன்மையை ஒத்துப் போகும் பண்பாட்டை — சகித்துக் கொள்ளும் பெருந்தன்மையை அவர்கள் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும்-

இவற்றில்தான் அவர்களது சுகம் இருக்கிறது- வாழ்வு இருக்கிறது- எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனது பொருத்தமும் அவனது அருளும் அவர்களுக்கு என்றென்றும் உண்டு!

ஆகவே பெண்கள் அந்த எல்லைக் கோட்டுக்குள்ளேயே நின்று செயல்படுவது அவர்களது உடலுக்கும் நல்லது உள்ளத்திற்கும் நல்லது- அவர்களது சந்ததிகளுக்கும் ஏற்றது!

[த]

— ஸீனியா நிலாம் —

## யுத்தக் கப்பல் சேவையில் பெண்களை சேர்க்காதீர்

உலகையே ஒரு காலத்தில் ஆட்டி வைத்த பிரிட்டிஷ் கடற்படைக்கு எதிராக அந்நாட்டு குடும்பப் பெண்கள் போர்க்கொடி எழுப்பியுள்ளனர். இங்கிலாந்து கடற்படை தான் காலங்காலமாக கடைப்பிடித்து வந்த ஒரு விதியை தளர்த்த முடிவு செய்துள்ளதையடுத்தே கடற்படை வீரர்களின் மனைவிமார் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டிஷ் கடற்படையில் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுவது உண்டானாலும், யுத்தக் கப்பல்களில் சேவையாற்ற பெண்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. ஆண்கள் மட்டுமே கப்பல்களில் சேவையாற்ற முடியும். ஆனால் இந்த விதியை நீக்கி பெண்களையும் யுத்தக் கப்பல்களில் சேவையாற்ற அனுமதிப்பது என்ற கடற்படை தீர்மானித்ததையடுத்தே படை வீரர்களின் மனைவிமார் கொதித்தெழுந்தனர். இங்கிலாந்து பிளைமவுத் மற்றும் போர்ட்ஸ் மவுத் கடற்படை செயலகங்களை நோக்கி அணி வகுத்து சென்ற இல்லத்தரசிகள் கப்பல்களில் பெண்கள் சேவையாற்ற அனுமதிக்கப்படக் கூடாது என்று கோஷமெழுப்பியதோடு மகஜர்களையும் கடற்படை அதிகாரிகளிடம் சமர்ப்பித்தனர்.

"கப்பல்களில் கடற்படை வீரர்களுடன் ஒன்றாக சேவையாற்ற பெண்களுக்கு அனுமதி வழங்கினால் எமது கணவர்மார் எம்மை முற்றாக மறந்து விடக் கூடும். கப்பல்களில் அவர்கள் குடும்பம் நடத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை"

— இவ்வாறு பொரிந்து தள்ளியிருக்கிறார்கள் இப்பெண்கள். சில கடற்படை வீரர்களின் மனைவிமார் தமது கணவர்மாரிடம் ஏற்கனவே தெளிவாக சொல்லி விட்டார்களாம், கப்பல்களில் பெண்கள் பணியாற்ற அனுமதிக்கப்படுவார்களானால் பேசாமல் வேலையை விட்டு விட்டு வீட்டுக்கு வந்து விடுங்கள் என்று!

(ம-0:)

## சமையற்கலை

### பகோடா

### பலாச்கொட்டை

தேவையான பொருட்கள்—
பலாக்கொட்டை — அரை கிலோ
வெங்காயம் — 03
பச்சை மிளகாய் — 10
நெய் — 2 டேபிள் ஸ்பூன்
பாமாயில் — கால் கிலோ

செய்முறை— பலாக்கொட்டைகளை நன்றாக கழுவி குக்கரில் போட்டு வைக்கவும்- நன்றாக வெந்து ஆறிய பிறகு தோலை உரித்து அத்துடன் வெங்காயம் பச்சை மிளகாய் உப்பு தேவையான அளவு பூண்டு (வேண்டியவர்கள் போட்டுக் கொள்ளலாம்) எல்லாவற்றையும் போட்டு உரலில் வடை மாவு அளவுக்கு கெட்டியாக அரைக்கவும் -

அத்துடன் நெய் பிசைந்து வாணலியில் எண்ணெய் ஊற்றி காய்ந்த பிறகு பகோடாவைப் போட்டு பொன்னிறமாக வாட்டி எடுத்துச் சாப்பிட்டால் ருசியாக இருக்கும்- [ம—10]

## பருத்த உடம்பை விரட்டி அடிக்க....

பெண்கள் எப்பொழுதும், மற்றவர்களின் கவனத்தை இழுக்கவே முயலுகிறார்கள். பெண்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் தாம் பேரழகிகளாக வாழ வேண்டும், பிறர் ஏறெடுத்துப்

...ளுக்காக தயாரித்து வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் திட்டம் சரியாக அமையா விட்டால், முயற்சியில் தோற்றுப் போவீர்கள்.

இந்த உணவுத் திட்டம் உங்களுக்கு

## டெலிவிஷனுக்கு அருகில் இருந்து சிறுவர், படம் பார்க்க விடாதீர்

பெண்கள் எப்பொழுதும், மற்றவர்களின் கவனத்தை இழுக்கவே முயலுகிறார்கள். பெண்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் தாம் பேரழகிகளாக வாழ வேண்டும், பிறர் ஏறெடுத்துப் பார்க்கும் பெருமை நிறைந்த, பொலிவும் அழகும் பெற வேண்டும் என்றுதான் நினைக்கின்றார்கள்.

சில பெண்கள் ஒல்லியாக இருக்கின்றார்கள். சிலர் பருமனாக இருக்கின்றார்கள். அதிகமான பருமனான பெண்கள் தாங்கள் சாதாரணமாக ஒல்லியாக வேண்டுமென்று ஆசைப்படுவதுண்டு.

ஆகவே பலவிதமான குளிகைகளையும் அப்பியாசங்களையும் செய்து வருகின்றார்கள். நீங்கள் அதிகமாக பருமனாக இருந்தால், அல்லது அதிகமாக எடை போட்டிருந்தால், உங்களது எடையை குறைக்கும் வழி இருக்கிறது.

நீங்கள் எவ்வளவு எடைதான் இருக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொள்ளுங்கள். அதற்காக உண்மையிலேயே பிராயச்சித்துப் படுவது நல்லது.

நீங்கள் மற்றவர்களுடைய கண்களுக்கு அழகாகத் தெரிய வேண்டுமென்று ஆசைப்படுகின்றீர்கள். உங்களுடைய எடை குறைப்பிற்கு திட்டமான உணவுத் திட்டம் கைகொடுத்து உதவும்.

எடை குறைப்பிற்கான உணவுத் திட்டத்தை மேற்கொள்ளும் பொழுது இரண்டு முக்கிய காரியங்களை கவனிக்க வேண்டும். முதலாவது உண்பதில் கட்டுப்பாடு அவசியம். இரண்டாவதாக உடற்பயிற்சியும் அத்துடன் இணைந்து செயல்பட வேண்டும்.

கண்களை நன்றாக மூடிக் கொள்ளுங்கள். உடலைத் தளர்த்தி, நீங்கள் எடை காட்டும் இயந்திரத்தில் எடை காண்பது போன்றும், நீங்கள் எந்த எடையை உங்களது லட்சிய எடையாக வைத்திருக்கிறீர்களோ அதற்குள்ளாக காணப்படுவது போன்றும் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

ஒல்லியாகவும், அழகாகவும் காணப்படத்தக்கதாக உடைகளை அணிந்து கொள்ளுங்கள். அந்த நினைவை மனதில் பதித்துக் கொள்ளுங்கள். இதைப் பற்றி கற்பனை செய்யுங்கள். நீங்களே ஒல்லியாவதற்கு வழிமுறைகளையும் கையாள ஆரம்பித்து விடுவீர்கள்.

நல்லதொரு உணவுத் திட்டத்தை உங்களுக்காக தயாரித்து வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் திட்டம் சரியாக அமையா விட்டால், முயற்சியில் தோற்றுப் போவீர்கள்.

இந்த உணவுத் திட்டம் உங்களுக்கு சமசீரான ஊட்டச்சத்தைக் கொடுக்கக் கூடியதாகவும், நீண்ட நாட்களுக்கு பின்பற்றக் கூடியதாகவும் அமைய வேண்டும்.

உங்களை சோகை நோய்களுக்கு ஆளாக்காமலும், கேடு விளைவிக்கும் பக்க விளைவுகள் எதையும் ஏற்படுத்தாமலும், முணுமுணுத்துக் கொண்டு அலைகின்ற நபராக உங்களை ஆக்காமலும் இருக்க வேண்டும்.

நீங்கள் உண்ணும் உணவுகள் விஷயத்தில் ஒரு குறிப்பை வைத்துக் கொள்ளுங்கள். அது எங்கே, எவ்விடத்தில் சாப்பிட வேண்டுமென்ற பிரச்சினைகள் தோன்றும். இம்மாதிரியான பிரச்சினைகளை சமாளிக்கவும் தயாராக இருக்க வேண்டும்.

உடல் பருமனிற்கு ஒரு காரணம் சுறுசுறுப்பின்றி சோம்பேறித்தனமாகவும், மந்தமாகவும் செயல்படுவது என்பதை இன்னும் அநேகர் நினைப்பதில்லை. உட்கார்ந்து, உடல் உழைப்பின்றி வேலை செய்பவர்களை விட, சுறுசுறுப்பாக இயங்குபவர்கள், அதிக கலோரிகளை கொடுக்கும் உணவுகளை உண்ட பின்னரும் கூட குறைவான எடையோடு இருக்க முடியும்.

நன்றாக நடந்து, ஓடி, நீந்தினால் அதிகமாக உண்ண விரும்ப மாட்டீர்கள். அதிகமான எடை உடலோடு இழுத்துக் கொண்டு செல்ல யாருக்குத்தான் விருப்பமுண்டு!

இனிப்பான பானங்களுக்கு பதிலாக வேறு வகையான குடிவகைகளை தெரிந்து கொள்ளுங்கள். இவ்வாறு மாற்றி அமைத்து, நாள் ஒன்றிற்கு 100 கலோரிகளையாவது குறைக்க வேண்டும். இவ்வாறு குறைக்கா விட்டால் 12 மாதங்களில் உங்களது உடலோடு 12 இறாத்தல் எடை கூடிவிடும்.

எடையைப் பற்றிய குறிப்பை தவறாமல் ஒழுங்காக எடுங்கள்.

உங்களது வயிற்றுப் பசிக்கு செவிசாய்க்க வேண்டாம். வயிறு பசிக்கின்றது என்று குரல் கொடுக்கின்றது. உணவைக் கண்டவுடன் "உணவை உள்ளே அனுப்பு" என்ற குரல் உங்கள் செவியில் தொனிக்கிறது. அப்பொழுது குறிப்பிட்ட அளவில் மாத்திரம் உணவு அருந்துங்கள்.

(ம-455)

# சிறுவர், படம் பார்க்க விடாதீர்

மனிதனின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் துல்லியமாக பிரதிபலிக்கக் கூடியவை நமது கண்கள். அன்றாட கவனிப்பில் கண்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

கண்களுக்குப் பாதுகாப்பான இயற்கை அரண் இமைகளே! அவற்றையும் மீறி தூசு படிந்து கண்களில் எரிச்சல் ஏற்படும். அந்த நேரங்களில் கண்களைக் கசக்காமல் குளிர்ந்த நீர் கொண்டு கழுவ வேண்டும்.

வெயில் அதிகமாய் இருக்கின்ற நேரத்தில் கண்கள் பாதிக்கப்படாமல் இருக்க கறுப்புக் கண்ணாடி அணிகிறோம். அது முழு கறுப்பாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. விலை சற்றே கூடுதலானாலும் தரம் வாய்ந்த கண்ணாடிகளே அணிய வேண்டும். படிக்கின்ற நேரத்தில் நிமிர்ந்து அமர்ந்து படிக்கின்ற புத்தகத்திற்கும் கண்களுக்கும் கிட்டத்தட்ட ஒரு அடி இடைவெளி இருக்க வேண்டும் என்பது நாம் எல்லோரும் அறிந்ததே!

அதே போல் டி வியும் குறைந்தது 8 முதல் 10 அடி தள்ளி அமர்ந்து பார்த்தால் நலம்.

குழந்தைகள் கண்ணுக்கு அருகில் வைத்துப் படித்தாலோ அருகில் அமர்ந்து பார்த்தால்தான் டி வியில் படம் தெளிவாகத் தெரிகிறது என்று சொன்னாலோ உடனே கண் மருத்துவரிடம் காட்டி சிகிச்சை பெற வேண்டும்.

அதிக நேரம் கண்களுக்கு வேலை தருவதினால் களைத்துப் போன கண்கள் புத்துணர்வு பெற ஒரு சிறிய பயிற்சியை சில தடவைகள் செய்யலாம்.

மேஜை மீது முழங் கைகளை வைத்து இரு உள்ளம் கைகளில் இரு கண்களையும் வைத்து மூடி தலை கழுத்துப் பகுதியின் கனம் பூராவும் உள்ளம் கைகளில் இருக்கும்படி வைக்க வேண்டும்.

எந்த வெளிச்சமும் இல்லாமல் இருந்தால் நல்லது. 5 நிமிடம் முதல் 10 நிமிடம் வரை அப்படி கண்மூடி இருக்கலாம். இப்படிச் செய்வதால் கண்களின் களைப்பு தீரும்.

சிலருக்குக் கோபத்தாலும் அதிக வெயிலினாலும் குளிரிலும் கண்களை அடுக்கிக் கொண்டு பார்க்கும் பழக்கம் ஏற்பட்டு நாளடைவில் அப்படியே கோடுகள் ஏற்பட்டு விடும்.

நடு நெற்றியிலும் கண்களின் ஓரங்களிலும் நின்று போகும் இக் கோடுகள் முகத்தின் அழகைக் கெடுக்கிறது. சுருக்கம் சீக்கிரமே வரவழைத்துக் கொள்வதால் வயதுக்கு மீறிய முதிர்ச்சி தரும் கோடு "சிடு மூஞ்சி" என்ற பட்டத்தையும் தருகிறது. இது தேவைதானா?

இப்படி ஏற்படும் சுருக்கங்களைப் போக்க முதலில் எதைப் பிரச்சினையையும் நிதானமாக எதிர்நோக்கும் பக்குவத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். (ஆழ்நிலைத் தியானம் மூலம் இது சாத்தியமாகும்)

கண்களின் கீழ் சுருக்கங்கள் ஏற்பட்டு விட்டால் நீக்குவது கடினம். தூக்கமின்மை மன உளைச்சல் ஆத்திரம் அவசரமான டென்ஷன்கள் குடிப்பது போன்றவை இந்த சுருக்கங்கள் ஏற்படக் காரணமாகின்றது.

வெள்ளரிக் காயின் சாற்றுடன் கொஞ்சம் பன்னீர் கலந்து குளிர்பதன பெட்டியில் சற்று நேரம் வைத்த பின் பஞ்சில் நனைத்து இரு கண்கள் மீது படுத்த நிலையில் வைத்து இளைப்பாறுங்கள்.

களைப்பு நீங்கிக் கண்கள் புத்துணர்வு பெறுவதுடன் கண்களின் கீழ் உள்ள கருமையும் நாளடைவில் மறையும். (கொஞ்சம் எலுமிச்சை சாறு சேர்ப்பதால் வெளுக்கும் தன்மை ஏற்படுகிறது.

பொதுவாக உணவில் விட்டமின் "ஏ" கண்களுக்கு பெரும் பாதுகாப்பு சக்தியை அளிக்கிறது. இத்தகைய விட்டமின் "ஏ" குறைவால் மாலைக் கண் நோய் ஏற்படுகிறது.

மங்கலான ஒளியில் கண் பார்வை குறைகிறது. ஒளித் திறனுக்கு ஏற்றவாறு ஒத்துப் போகும் திறன் கண்ணுக்குக் குறைவுபடுகிறது.

பச்சைக் காய்கறிகள் பசலி பொன்னாங்கண்ணி முளைக் கீரைகள் கொத்தமல்லி முருங்கைக் கீரை புதினா காரட் கறிவேப்பிலை முள்ளங்கி மஞ்சளான பழங்கள் ஆகியவற்றிலும் பால் தயிர் வெண்ணெய் நெய் முட்டை (மஞ்சள்) கல்லீரல் மீன் மீனெண்ணெய் போன்றவற்றிலும் விட்டமின் அதிகமாய் உள்ளது.

யோகாசனம் குறிப்பாக சிரசாசனம் செய்வதால் கண் பார்வை பளிச்சென்று இருக்கும். அதிகாலையில் சூரிய வெளிச்சம் கண்களில் படும்படி நிற்பது (வெள்ளெழுத்து ஏற்படுவதைத் தள்ளிப்போடும்.

கண்ணுக்குள் எந்தவிதமான மருந்து போடுவதாக இருந்தாலும் கண் மருத்துவரின் ஆலோசனை இன்றி செய்யக் கூடாது.

சிறு வயது முதற் கொண்டே கண்களுக்கு சில பயிற்சிகள் செய்யப் பழக்க வேண்டும். காலையில் எழுந்ததும் கண்களை சுத்தமான நீர் கொண்டு அலசிய பின் வலது பக்கமிருந்து வட்டமாகவும் (தலையை அசைக்காமல்) இடது பக்கமிருந்து வலது பக்கமாகவும் இரு விழிகளை ஒருசேர சுழல வைக்க வேண்டும். மாற்றி மாற்றி பத்துத் தடவை செய்யலாம்.


தலையை அசைக்காமலேயே உயரமான பொருளையும் உடனே விழிகளை இறக்கித் தரையையும் பார்க்கிற பயிற்சியையும் பத்துத் தடவை செய்யலாம். பரத நாட்டியத்தில் கண்களுக்கு நிறைய வேலை உண்டு சிறந்த பயிற்சியுமாகும்.

[ம—10]


## மகன் நண்பனாக மாறுகிறான்

உங்கள் மகனுக்கு ஐந்து வயதாகும் போது அவனை அரசனைப் போல நடத்த வேண்டும். பின்பு 16 வயது வரை மாணவனாகவும் 16 வயது பூர்த்தியானதும் நண்பனைப் போலவும் நடத்த வேண்டும்.

— ஆஸ்திரேலியப் பழமொழி



# தாயும் சேயும்



# உடல் வளர்ச்சி மாத்திரம் பிள்ளைகளுக்கு போதாது

## மன வளர்ச்சியும் அவசியம்

— ஆர். கே. வேணி —

பருவகாலம் என்பது சகல ஜீவ ராசிகளுக்கும் உண்டு- பருவத்தே பயிர் செய் என்று வேளாண்மைக்கும் சொல்லுகிறார்கள்-

இயற்கையின் கூறுகளையும் பருவங்களாகப் பிரித்து வாழ்க்கையோடு இணைத்து அந்தந்தப் பருவத்தில் அதை அதைச் செய்ய வேண்டும் என்று நெறிமுறைகளை வகுத்து வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி வந்திருக்கிறார்கள் நம் முன்னோர்கள்-

மனித வாழ்க்கையையும் மூன்று பருவங்களாகப் பிரித்திருக்கிறார்கள்- பாலப் பருவம்- வாலிபப் பருவம்- முதுமைப் பருவம் ஆகியவையே அவை-

பொதுவாக ஆண்களைவிடப் பெண்கள் தாம் விரைவாகப் பருவம் அடைகிறார்கள்- பெண்கள் 11 வயதிலிருந்து 15 வயது வரையிலான காலத்தில் பூப்படைகிறார்கள்-

ஆண்கள் 18 வயதிலிருந்து 20 வயதில் பருவ நிலையை அடைகிறார்கள்- வெப்பமான நாடுகளில் ஒரு பெண் 13 வயதிலும் குளிர் நாடுகளில் வாழ்பவர்கள் 18 வயதிலும் பூப்படைவதாக கருத்து உண்டு-

நகரத்தில் உள்ள பெண்கள் சீக்கிரத்திலும் கிராமத்தில் உள்ள பெண்கள் காலதாமதமாகவும் வயதுக்கு வருகிறார்கள் என்கிறது ஒரு கணக்கெடுப்பு-

நகரத்தில் பாலுணர்வுகளைத் தூண்டும் சூழ்நிலைகள் அதிகம் இருப்பதால் நகரத்தில் வாழும் பெண்கள் சீக்கிரம் இந்நிலையை அடைகிறார்கள்-

புத்தகங்கள் - பத்திரிகைகள்- நாடகம் - திரைப்படம் - தொலைக்காட்சி - வானொலி ஆண் பெண் சேர்ந்து படிக்கும் வாய்ப்புக்கள் ஆகியவற்றால் இளைஞர்களும் இளம் பெண்களும் மிக விரைவில் பருவம் அடைகிறார்கள்-

இதனால் திருமணங்கள் பக்குவம் அடையாத நிலையில் நடைபெறுகின்றன-

பக்குவம் என்பதில் உடல் பக்குவம் - மனப்பக்குவம் என்று இரண்டு நிலைகள் உள்ளன- உடல் வளர்ச்சி பெற்றவர்கள் எல்லோரும் மனவளர்ச்சி பெற்று விடுவதில்லை-

இதனால் உடல் வளர்ச்சியை மட்டும் கருத்தில் கொள்ளாமல் மனவளர்ச்சியையும் கருத்தில் கொண்டு திருமண ஏற்பாடுகளைச் செய்வது நல்லது-

ஒரு பெண்ணுக்கோ அல்லது ஓர் ஆணுக்கோ திருமணம் எப்போது செய்யலாம் என்று பெற்றோர் சிந்தித்து செயல்பட வேண்டும்-

ஒரு பெண் அல்லது ஓர் ஆண் எந்த வயதில் திருமணம் செய்து கொள்வது நல்லது என்று இளைஞர்களும் இளம் பெண்களும் மட்டுமல்ல பெற்றோர்களும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்

முதிர்ச்சி என்பது உடலைப் பொறுத்ததல்ல- மனதைப் பொறுத்தது- ஆகவே வயது வந்த ஒவ்வோர் ஆணும் பெண்ணும் 20 வயதிற்கு மேல் திருமணம் செய்து கொள்ளலாம்-

ஆனால் வாழ்க்கை சூழ்நிலைகளைப் பார்க்கும்போது படிப்பு வேலை போன்ற விஷயங்களைக் கவனிக்க வேண்டும்- இந்த இரண்டும் வாழ்வுக்கு மிக அவசியமானவை-

இன்றைய நிலையில் இந்த இரண்டும் இருந்தால் விரைவாக திருமணமும் நடக்கும்- இந்நிலையில் பெண்ணுக்கு 21 வயதும் ஆணுக்கு 24 வயதும் இருக்கலாம்-

பெண் பருவமடைந்ததும் திருமணம் செய்து வைப்பது கிராமத்து மரபு- மூன்று நான்கு ஆண்டுகள் ஆக வேண்டும்- அப்போதுதான் தாயாகும் தகுதியைப் பெண்கள் பெறுகிறார்கள்-

பெண்ணின் உறுப்புக்கள் ஒரு குழந்தையைப் பெறுவதற்குத் தேவையான வளர்ச்சியைப் பெற வேண்டியது அவசியம்-

எலும்புக் கூட்டுக்குள் ஒரு கருப்பையில் குழந்தை வளர வேண்டும்- இதற்கு 20 வயது தான் தகுதியான காலம்- 30 வயதில் இடுப்பு எலும்புகள் கடினமாகி விடுகின்றன- இதனால் பிரசவம் கடினமாகிறது- சிசேரியன் செய்யும் நிலையும் உண்டாகிறது

திருமணமான கணவனும் மனைவியும் சம முதிர்ச்சியுள்ளவர்களாய் நடு வயதை அணுகும் போது இல்லறம் சிறப்பாக அமைகிறது-

இதற்கு வயதும் ஒரு காரணம் ஒரு மணமகனுக்கு மணப் பெண்ணுக்கும் வயது இடைவெளியும்

# முறைகேடான ஆண் பெண் உறவில் நாட்டம் இல்லை!

அமெரிக்காவில் நாடு தழுவிய முறையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வு வயதுக்கு வந்த அமெரிக்கரில் கால் வாசிப் பேருக்கு பாலியலில் அவ்வளவு ஆர்வம் இல்லை என்பதைக் கூறுகிறது.

1988 மற்றும் 89ஆம் ஆண்டுக்கான சமூக கணிப்பீட்டில் பாலியல் வாழ்க்கை பற்றி கேட்கப்பட்ட கேள்விகளை அடிப்படையாகக் கொண்டே சிக்காக்கோ பல்கலைக்கழகம் தமது கணிப்பின் முடிவுகளை வெளியிட்டிருக்கிறது.

வயதுக்கு வந்த கால்வாசி அமெரிக்கர்கள் வாரத்துக்கு ஒரு முறையே தாம்பத்திய உறவில் ஈடுபடுகின்றனராம். அல்லது அதுவும் இல்லையாம்.

திருமணமானவர்களில் 1. 5 சத வீதமானோர் மட்டுமே மனைவியை அல்லது கணவர்மாரைத் தவிர வெளியாருடன் தாம் உறவு கொண்டிருப்பதாக ஒப்புக் கொண்டுள்ளனர். திருமணமானவர்களில் 48 சத வீதமானோர் தாம் தமது கணவனுக்கோ. மனைவிக்கோ துரோகம் செய்ததேயில்லை என்று கூறியிருக்கின்றனர்.

65 சத வீதமான திருமணமான அமெரிக்க பெண்கள் தமது கணவர்மாருக்கு ஒருபோதும் தாம் துரோகம் செய்ததில்லை என்று அடித்துச் சொல்லியிருக்கிறார்கள். 30 சத வீதமான ஆண்கள் மட்டுமே தாம் ஏகபத்தினி விரதம் பூணுவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

(ம-032)

# பூப்போல இட்லி தயாரிக்கலாம்

இட்லிக்கு ஊற வைக்கும் அரிசியுடன் ஒரு பிடி அவலையும் சேர்த்து ஊற வைத்து அரைத்தால் இட்லி பூப்போல் மென்மையாகவிருக்கும்-

பால் புளித்துப் போய் விட்டால் அதில் சமையல் சோடா உப்பைப் போட்டுக் காய்ச்சுங்கள்- பால் திரிந்து போகாமல் இருக்கும்-

விடும்- இரண்டிரண்டாக நறுக்கி வைத்தால் பழுக்காமலிருக்கும்-

கேள்வரகு மாவுடன் எள்ளும் சிறிது வெல்லமும் சேர்த்து இடித்து அடை செய்து தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடல் ஆரோக்கியமாக இருக்கும்- தாய்ப் பால் சுரக்காத பெண்களுக்கு வேண்டிய பால் சுரக்கும்-

# பச்சைக் குழந்தையை கிள்ளினால் வலிக்கும்

பச்சைக் குழந்தையைக் கிள்ளினால் அதற்கு வலிக்காது என்பது பொதுவான அபிப்பிராயம். வலி என்றால் என்ன என்பதை

காட்டுவதில்லை. தாய்மாரே கண்டுபிடித்தால்தான் உண்டு. வலி என்றால் என்ன? வலி என்பது மூளை எமக்கு

தைகளுக்கு வலிப்பதில்லை என்று பலரும் தவறாக நினைத்துக் கொள்கிறார்கள்

களும் வலியை உணரவே செய்கின்றன.

வலிக்கு எதிரான நடவடிக்கையை எப்படி மேற்கொள்வது

# கிள்ளினால் வலிக்கும்

பச்சைக் குழந்தையைக் கிள்ளி னால் அதற்கு வலிக்காது என் பது பொதுவான அபிப்பிராயம். வலி என்றால் என்ன என்பதை உணர்த்தும் தன்மை அதன் உடலில் வளர்ச்சி பெற்றிருப்ப தில்லையாதலால் வலிக்காது என்கிறார்கள். ஆனால் இது உண்மையா?

இல்லை என்கிறது சமீபத்தில் இது தொடர்பாக மேற்கொள் ளப்பட்ட ஆராய்ச்சி. நம்மைப் போலவேதான் குழந்தை களுக்கும் வலிக்குமாம். வய துக்கு வந்தவர்களுக்கும் குழந் தைகளுக்கும் இவ்விடயத்தில் காணப்படும் வித்தியாசம் வலியை எப்படி வெளிப்படுத்து வது என்பதே.

வயதுக்கு வந்த ஒரு நபர் அல் லது சிறுவர், சிறுமியரிடையே வலியை உணரும் தன்மை மனோதத்துவ ரீதியாக முற்றாக வளர்ச்சி பெற்று விடுவதால் திடீரென ஏற்படும் வலியை அவர்கள் பெரிதுபடுத்துவ தில்லை.

ஏனெனில் திடீரென உண்டா கும் வலி சட்டென மறைந்து விடும் என்பதை அவர்கள் அறி வார்கள். ஆனால் அழுத்தமான வலி பற்றியே நாம் அதிகம் கவலைப்படுகிறோம். ஏனெனில் இவ்வகை வலி, பின்னணியில் ஏதோ ஒன்று இருப்பதை சுட்டிக்காட்டுவதை நாம் அறி வோம்.

ஆகவே வலியின் காரணியை அறிவதில் நாம் அக்கறை காட்டு கிறோம். ஆனால் குழந்தைகள் அப்படியல்ல. திடீர் வலியை உணர்ந்து கொண்டு விடுகின் றன. நீண்ட நேர வலியை அவை பெரிதுபடுத்தாமல் சுமமா இருந்து விடுகின்றன.

அதாவது உடலில் எங்காவது வீக்கமோ சிறாய்ப்போ இருக்கு மானால் அவை ஏற்படுத்தும் வலியை குழந்தைகள் வெளிக் காட்டுவதில்லை. தாய்மாரே கண்டுபிடித்தால்தான் உண்டு.

வலி என்றால் என்ன?

வலி என்பது மூளை எமக்கு விடுக்கும் ஒரு எச்சரிக்கை சமிக்ஞை. ஒரு விஷயத்தை மேலும் தொடர வேண்டாம் என்றும், உடனடியாக பின் வாங்கும்படியும், நடவடிக்கை எடுக்கும்படியும் மூளை எமக்கு அறிவுறுத்த உபயோகிக்கும் சமிக்ஞையே வலியாகும்.

இஸ்திரி பெட்டியில் கை விரல் பட்டதும் எவ்வளவு வேக மாக கையை அப்பால் எடுத்து உதறுகிறோம் நாம்!

ஆனால் குழந்தைகள் விடயத் தில் அவை வலியை உணர்ந்து கொண்டாலும் அந்த ஆபத்தில் இருந்து எப்படி மீள்வது என்ற மனோ ரீதியான செயற்பாடு குழந்தைகளிடம் இல்லை.

ஒரு குழந்தை தீச்சுவாலையில் கை வைக்குமானால் கை விரலை சட்டென எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற உந்துதலை குழந்தையின் மூளை உருவாக் காது.

குழந்தைகள் வலியின் வெளிப் பாட்டை சட்டென வெளிப் படுத்தாத காரணத்தினால் குழந் தைகளுக்கு வலிப்பதில்லை என்று பலரும் தவறாக நினைத்துக் கொள்கிறார்கள்

உலகின் பல நாடுகளில் குழந்தைகள் பேரில் சத்திர சிகிச்சைகள் நடத்தப்படும் போது வைத்தியர்கள் மயக்க மருந்தை உபயோகிப்பதில்லை. அல்லது சத்திர சிகிச்சை மேற் கொள்ளப்படும் பகுதியில் மட் டும் ஓரளவு உணர்விழக்கச் செய்யும் மருந்து பிரயோகிக் கப்படுகிறது.

சில டாக்டர்கள் நரம்புகளை அமைதிபடுத்தும் மருந்துகளை உபயோகிக்கிறார்கள்.

ஆனால் உண்மையில் குழந்தை களும் வலியை உணரவே செய் கின்றன.

வலிக்கு எதிரான நடவடிக் கையை எப்படி மேற்கொள்வது என்பதையும், வலியை எப்படி வெளிப்படுத்துவது என்பதை யுமே குழந்தைகள் அறிவ தில்லை.

ஆகவே கைக்குழந்தை களுக்கு சத்திர சிகிச்சை மேற் கொள்ளும் போது வயதுக்கு வந்தவர்களைப் போலவே குழந் தைகளுக்கும் உணர்விழக்கச் செய்யும் மருந்து வழங்க வேண் டும் என்பதே சரி என்று புதிய ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்தியுள் ளது.

(ம-032)



---

செய்யும் நிலையும் உண்டாகிறது

திருமணமான கணவனும் மனைவியும் சம முதிர்ச்சியுள்ள வர்களாய் நடு வயதை அணுகும் போது இல்லறம் சிறப்பாக அமை கிறது.

இதற்கு வயதும் ஒரு காரணம் ஒரு மணமகனுக்கு மணப் பெண் ணுக்கும் வயது இடைவெளியும் அதிகம் இருக்கக் கூடாது.

நான்கு வயது வித்தியாசம் இருக்கலாம். அல்லது ஆறு வயது வித்தியாசம் இருக்கலாம் குறைந்த பட்சம் இருவருடமா வது வித்தியாசம் இருக்க வேண் டும்.

ஆகவே பெற்றோரும் சரி திருமணம் செய்து கொள்ளும் வயதில் உள்ள ஆண்களும் பெண்களும் சரி தேக வளர்ச்சி யைக் காட்டிலும் மனதின் வளர்ச் சியை முக்கியமாக கருத வேண் டும்.

இக்காலத்தில் இளம் வயதி னர் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் மிகவும் சிறிய வயதில் திருமணம் முடித்து வாழ்க்கையை புரிந்து கொண்டு நடத்த முடியாமல் தடு மாறுகின்றனர்.

வேறு சிலரோ படிப்பு வேலை வெளிநாடு போக வேண்டும். பணம் சம்பாதித்தே திருமணம் முடிக்க வேண்டும் என பல கார ணங்களை கொண்டு (பருவ காலம்) அதாவது திருமணம் முடிக்கும் வயது கடந்த பின் திரு மணம் செய்து வாழ்க்கையை மகிழ்ச்சியாக அனுபவிக்க முடி யாமல் தடுமாறுகின்றனர். இந் நிலை தவிர்க்கப்பட வேண்டும்.

(த)

## பொறாமை கொடியது

அணுகுண்டு போட்ட இடத் தில் நாற்பது ஆண்டுகளுக்குப் புல் முளைக்காது. பொறாமைக் காரன் இருந்த இடத்தில் நானூறு ஆண்டுகளுக்கு எது வும் முளைக்காது. அணு குண்டை விட பொறாமை மக் களை அழிக்கும்!

— வாரியார்

---

அவலையும் சேர்த்து வைத்து அரைத்தால் இட்லி பூப்போல் மென்மையாகவிருக் கும்.

பால் புளித்துப் போய் விட் டால் அதில் சமையல் சோடா உப்பைப் போட்டுக் காய்ச்சுங் கள். பால் திரிந்து போகாமல் இருக்கும்.

பாகற்காய் சீக்கிரம் பழுத்த

கேள்வரகு மாவுடன் எள் ளும் சிறிது வெல்லமும் சேர்த்து இடித்து அடை செய்து தொடர் ந்து சாப்பிட்டு வந்தால் உடல் ஆரோக்கியமாக இருக்கும். தாய்ப் பால் சுரக்காத பெண் களுக்கு வேண்டிய பால் சுரக் கும்.

[ம—10]

---

## அவளின்....

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

"எவ்வளவுதான் உன்னை மறக்க முயற்சி செய்தாலும் என் னால் முடியவில்லை ஒருமுறை... ஒரேயொரு முறை நீ என் மனை வியாக நடந்து விட்டால் உன்னை நிம்மதியாக வாழவிடுவேன்"

மரகதத்திற்கு என்ன செய்வ தென்றே புரியவில்லை. அறையை விட்டு வெளியே ஓட முயற்சித்த வளை ஓடவிடாது தடுத்துப் பிடித் தான் அந்த இளைஞன். அவள் மல்லுக்கட்டி வெளியில் ஓடி வரவும் கணபதி அங்கு வரவும் சரியாக இருந்தது.

நன்றாகக் குடித்திருந்ததால் சற்றுத் தடுமாறிய கணபதி இடுப் பிலிருந்த கத்தியைக் கையிலெடுத் தான். எங்கே தனக்குக் குத்தி விடுவானோ என்ற பயத்தில் கத்தி யைத் திடீரெனப் பறித்த அவ்வி ளைஞன் அவன் நெஞ்சை நோக்கி கத்தியை உயர்த்தினான்.

எங்கிருந்தோ ஓடிவந்து அவன் நெஞ்சில் சாய்ந்து கொண்ட மரகதத்தின் நெஞ்சின் மேல் கத்தி பாய்ந்தது. மரகதம் துவண்டு விழுந்தாள். கத்தியைக் கையிலெடுத்த கணபதி அவ்வி ளைஞனை தன்னால் முடிந்த மட் டும் குத்தினான். இரத்த வெள் ளத்தில் கிடந்த மரகதத்தை தூக் கியணைத்தான் கணபதி.

"உங்களை அநாதையாக விட்டு விட்டுப் போகிறேன் அத் தான்" அவள் விக்கி விக்கி பேசி னாள். கணபதி அவளைக் கட்டி யணைத்து அழுதான்.

"அத்தான் நான் இறந்து விடு வேன். எனக்காக ஒன்று செய் வீர்களா?"

"யாருமற்ற அநாதையாக விருந்த என்னைக் கைப்பிடித்த வள் நீ. என்ன மரகதம் என் உயிரைத் தரட்டுமா"

"அத்தான் இந்த ஊரும், உலகமும் உங்களை நல்லவன் என்று பாராட்ட வேண்டும் அப் பொழுதுதான் என் ஆத்மா சாந்தி யடையும்" அவள் உயிர் பிரிந் தது.

சாமியார் தன்னை மறந்து விக்கி, விக்கியழுதார், பக்கத்தில் நின்றோர்க்கு ஒன்றும் புரிய வில்லை.

"அழாதீங்க சாமியார்" இந்தி ரன் அவர் கண்ணீரைத் துடைத் தான்.

"நீங்க அழக் கூடாது. உங்க ளுக்கு ஒன்றும் இல்லை. நீங்க வாழணும் உங்களுக்காக இல்லா விட்டாலும் எங்கள் கிராமத்து மக்களுக்காக நீங்கள் பல்லா ண்டு வாழவேணும்.

உங்கள் மேல் சத்தியமாகச் சொல்கிறேன் சாமியார் நான் இனிமேல் கோபப்படவே மாட் டேன். தங்களைப் போலவே கிராம மக்களுக்குத் தொண்டு செய்யப் போகிறேன்"

தன்னை மறந்து எழுந்த சாமி யார் அவனைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டார். அவர் கண்களிலிருந்து ஆனந்தக் கண் ணீர் சொரிந்தது.

ஆனந்தனும் ராணியும் கதறி அழுதனர். தங்களால் தானே இவ்வளவும் நடந்தது. நாங்க ளும் இனிமேல் தங்கள் வாயை அடக்கி இருப்போம் என கதறி மன்னிப்பு கேட்டனர்.

சாமியார் அவர்களையும் ஆறுதல்படுத்தினார். அனைவர் கண்களும் ஆனந்தக் கண்ணீரை சொரிந்தன.

(த)

சிந்தாமணி
தின வெளியீடு "தினபதி" ஞாயிறு வெளியீடு "சிந்தாமணி"
சின்தாமணி CHINTAMANI

# சூரியன் தயவுடன் சைக்கிள் ஓட்டம்

சூரியனின் தயவுடன் மனிதன் சைக்கிள் ஓடுவதற்கு வழி பிறந்திருக்கிறது. அவ்விதம் ஒருவர் சைக்கிள் ஓடும் காட்சியை இங்கு காண்கிறீர்கள்.


இந்த துவிச் சக்கர வண்டி சூரிய சக்தியினால் இயங்கக் கூடியது. வண்டியின் பக்கவாட்டில் காணப்படுவது தான் சூரிய சக்தியை மின்சாரமாக மாற்றும் சூரிய பாட்டறி.

இத் துவிச்சக்கர வண்டியை இயக்குபவர் மோட்டார் சைக்கிளை இயக்குவது போலவே ஸ்டார்ட் பண்ணிக் கொண்டு மணித்தியாலத்துக்கு 45 கிலோ மீட்டர் அதிகபட்ச வேகத்தில் பயணம் செய்ய முடியும்.

அதற்கான மின் சக்தியை சூரிய சக்தி பாட்டறி வழங்கும். ஆனால் இப்பாட்டறி மின்சாரம் மூன்று மணித்தியாலம் மட்டுமே தாக்குப் பிடிக்கக் கூடியது.

அதன் பின்னர் சைக்கிளை ஓட்டுபவர் மோட்டாரை நிறுத்திவிட்டு பெடலை மிதித்து சாதாரண சைக்கிளை ஓட்டுவதைப் போல செலுத்திச் செல்ல வேண்டும்.

சூரிய சக்தியை சேமித்து பாட்டறி மீண்டும் சார்ஜ் ஆகும்வரை மட்டும்தான். அதன் பின்னர் மீண்டும் சூரிய சக்தியில் ஓடலாம்.



இப்புதிய துவிச்சக்கர வண்டியை மேற்கு ஜெர்மனியின் கீல் நகரத்து தொழில் நுட்ப பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் வடிவமைத்து உருவாக்கியுள்ளனர்.

இத் துவிச்சக்கர வண்டி வர்த்தக ரீதியாகவோ பிரபலம் அடைய நாளாகலாம். இவ்வண்டியை எதிர்கால வாகனமாகவே இதன் வடிவமைப்பாளர்கள் குறிப்பிடுகிறார்கள். இதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு.

உலகின் இயற்கை வாயு மற்றும் மசகு எண்ணெய்யின் கையிருப்பு எதிர்காலத்தில் மிகவும் குறைந்து விடப் போகிறது.

இப்போது நாம் உபயோகித்து வரும் பெற்றோல் மற்றும் டீசல் வாகனங்களை எல்லாம் குப்பை மேடையில் அப்போது வீசி எறிய வேண்டியிருக்கும்.

மக்கள் அப்போதுதான்

நிம்மதியான நித்திரைக்கு

## உணவாக பயன்பட்ட ஷேர்ட்

இந்தோனேஷிய கப்பலொன்று டைமர் கடற் பிராந்தியத்தில் தலைகுப்புறக் கவிழ்ந்தது. இச்சமயம் கடலில் தூக்கி வீசப்பட்ட மாலுமிகளில் சுமார் பதினைந்து பேர் எண்ணெய்ப்பீப்பாய் ஒன்றைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கடலில் தத்தளிக்கத் தொடங்கினர்.

சுமார் பத்து நாட்களாக கடலில் தத்தளித்த இம்மாலுமிகள் பின்னர் காப்பாற்றி கரை சேர்க்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் தன் அனுபவங்களைச் சொல்லிய போது பசி தாங்காமல் தன் ஷேர்ட்டைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கிழித்து வாயில் போட்டுமென்று விழுங்கி வந்தேன் என்று தெரிவித்தார்.

பசி எவ்வளவு கொடியது என்பது அதை அனுபவமாக அனுபவித்துப் பார்த்தவர்களுக்கு மட்டுமே புரியும்.

(த-032)

## தொழிற்சங்க வங்கி

தொழிற்சங்க வங்கி ஒன்றை ஸ்தாபிப்பது பற்றிய பேச்சுவார்த்தை மாஸ்கோவில் நடைபெற்றது. 130 அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

120 பில்லியன் ரூபிள் மூலதனத்துடன் ஆரம்பமாகவுள்ள இந்த வங்கி வெளிநாட்டு வர்த்தகத்தை ஊக்குவிக்கும் என்று நம்பப்படுகிறது. சுகாதார வசதிகள், கட்டடங்கள் நிர்மாணிப்பு, உல்லாசப் பயணத் துறை ஊக்குவிப்பு என்பவற்றிற்கும் இந்த வங்கி கடனுதவி வழங்கும்.

(ம)

## பொலீஸ்...

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாசலோர் ஆடையார் கவனத்து வருகின்றனர்.

இம்மாதம் 20 ஆம் திகதி கண்டி அஸ்கிரிய சர்வதேச விளையாட்டரங்கில் முதற்கட்ட மலையக தமிழ் இளைஞர்களைக் கொண்ட ரிசர்வ் பொலிஸ் பயிற்சியாளர்களின் மரியாதை அணிவகுப்பு நடைபெறும்.

அமைச்சர் திரு எஸ் தொண்டமான, மத்திய மாகாண முதலமைச்சர் திரு டபிள்யூ பீ பீ திஸாநாயக்க, கண்டி மேயர் திருமதி சந்திரா ரணராஜா ரிசர்வ் பொலிஸ் படை பயிற்சிப் பிரிவு பிரதி பொலிஸ் மா அதிபர் ஜனாப் ஏ வி ஏ கபூர் ஆகி

# பச்சோந்தியாக வாழ்வது எப்படி?

சந்தர்ப்பவாதிகளும் கட்சி தாவும் அரசியல்வாதிகளும் சொந்த நலன் கருதி அவ்வப்போது தமது கொள்கைகளையும் இலட்சியங்களையும் மாற்றிக் கொள்வதைப் பார்த்து எரிச்சலடையும் நாம் இயற்கையில் "பச்சோந்தித்தனம்" எப்படி உருவாகிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்!

இயற்கை எதிரிகளிடமிருந்து தப்பி வாழும் பொருட்டு சதா போராட வேண்டிய நிலை பிராணிகளுக்கு உண்டு! எதிரிகளிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள சிந்தனை என்ற சக்தியை மனிதனுக்கு அளித்துள்ள இயற்கை, ஐந்தறிவு ஜீவராசிகளுக்கு பல்வேறு இயற்கை ரீதியான பாதுகாப்புகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது!


கண்கொத்திப் பாம்பு என்ற பச்சைப் பாம்பை எடுத்துக் கொள்ளுங்கள்- நன்றாக உற்றுப் பார்க்காவிட்டால் இது கொடிகளோடு கொடியாக பச்சை வர்ணத்தில் மறைந்திருப்பதை நாம் அவதானிக்கவே முடியாது! ஓணான் இனத்தைச் சேர்ந்த பச்சோந்தியும் இடத்துக்கு ஏற்ற மாதிரி தன்னை நிறம் மாற்றிக் கொள்ளக் கூடியது!

கும்பிடு பூச்சி காய்ந்த மரக்கிளையில் இருக்கும் போது எது கும்பிடு பூச்சி, எது காய்ந்த குச்சி என்பதைக் கண்டுபிடிக்க முடியாது! ஓர்க்கிட் பூக்களைப் போலவும் இலை வடிவிலும் சில பூச்சிகள் உள்ளன! இலையோடு இலையாகவும் மலர்களோடு மலர்களாகவும் மறைந்திருப்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியாது!

தென் அமெரிக்காவில் காணப்படும் மீனொன்று இலையைப் போல வடிவம் கொண்டுள்ளது! நீரில் வீழ்ந்து மிதக்கும் இலையினையே வாழும் இம்மீன் இலையைப் போலவே கண்ணீரில் மிதந்து செல்லும் தன்மை கொண்டது! ஏராளமான வண்டுகளின் வடிவும் மற்றும் வர்ணங்கள் அவை வாழும் சூழலை ஒத்ததாகவே அமைந்துள்ளன!

தமது எதிரிகளிடமிருந்து தப்பிக் கொள்ளும் பொருட்டே இயற்கை வெற்றுக்கு அற்புதமான இவ்வரப்பிரசாதத்தை அளித்திருக்கிறது!

(ம—0221)



The chameleon (left) is known for its ability to change colour from green to brown, which enables it to blend in with its surroundings. The stick insect (below) is a prime example of coloration. Its shape as well as its striking colour changes hide from its enemies.

# அரைக் கிறுக்கை அடக்க பாடுபடும் கௌபோய்

அமெரிக்கக் கௌபோய்த் திரைப்படங்களில் தோன்றி பயங்கர முரட்டு வில்லன்களையெல்லாம் அனாயாசமாகப் பந்தாடி வந்துள்ள நடிகர் கிளின்ட் ஈஸ்ட்வூட்டுக்கு தன் அழகு மகளின் பின்னாலேயே சுற்றி வரும் ஒரு அரைக் கிறுக்கை அடக்குவது பெரும் பாடாக இருக்கிறா

விட்டாராம், வீட்டுக்கு வெளியே டென்ட் ஒன்றை அமைத்துக் கொண்டு அலிசனின் முகம் தெரிகிறதா என்று நோட்டம் விடவும் ஆரம்பித்தார்.

கிளின்ட் ஈஸ்ட்வூட்டின் பெக்ஸ் சாதனம் வழியாக காதல் கடிதங்களை அனுப்பவும் தொடங்கி விட்டார் என்றால் இவாக

இவ்விளைஞரின் தொல்லை தாங்க முடியாத கிளின்ட் ஈஸ்ட்வூட் ஒரு தடவை உள்ளூர் மதுச்சாலை ஒன்றில் பியரை ருசித்துக் கொண்டிருந்த இக் காதல் கிறுக்கு கொண்ட இளைஞரிடம் நேராகவே சென்று எச்சரிக்கை விடுத்தாராம்.

பேராசிரியர்கள் வடிவமைத்து டியை எதிர்கால வாகனமாகவே உருவாக்கியுள்ளனர். இதன் வடிவமைப்பாளர்கள் இத் துவிச்சக்கர வண்டி வர்த் குறிப்பிடுகிறார்கள். இதற்கு

உலகின் இயற்கை வாயு மற்றும மசகு எண்ணெய்யின் கையிருப்பு எதிர்காலத்தில் மிகவும குறைந்து விடப் போகிறது.

இப்போது நாம உபயோகித்து வரும பெற்றோல் மற்றும டீசல் வாகனங்களை எல்லாம குப்பை மேடையில் அப்போது வீசி எறிய வேண்டியிருக்கும.

மக்கள் அப்போததான் சுமமா கிடைக்கும சூரிய சக்தியின் மகிமையை உணரப் போகிறார்கள்.

இரண்டாவது காரணம நமமை விட எதிர்கால பரமபரையினர் சூழல் பாதுகாப்பின் அவசியம பற்றி மிகவும உணர்ந்து நடக்கப் போகிறார்கள். சூரிய சக்தி உபயோகம எவ்வகையிலம சூழல் மாசை ஏற்படுத்தப்போவதில்லை அல்லவா?

(ம-032)


நிம்மதியான நித்திரைக்கு

தீங்கற்ற

ARS நுளம்புச் சுருளை

பாவியுங்கள்.



* ஜப்பானிய கூட்டுத் தயாரிப்பில் உருவான ஏ ஆர் எஸ் நுளமபுச் சுருளை கேட்டு வாஙகுஙகள்-

* 7 மணித்தியாலஙகள் எரியக் கூடியது-

* 10 மணித்தியாலஙகளுக்கு நுளமபுத் தொல்லையிலிருந்து பாதுகாக்கும தன்மையுள்ளது-

இலகுவாக பிரித்து எடுக்கக் கூடியது-

தயாரிப்பாளர்கள்-

லங்கா மொஸ்க்கிட்டோ

கொயில் கம்பெனி

(பிரைவேட்) லிமிட்.,

244 பாஙஷால் வீதி கொழுமபு-11

தொலைபேசி- 25529/545348

நாடு முழுவதும ஏஜண்டுகள் தேவை வீ%. ரூ- 15/-)


வகுப்பு நடைபெறும,

அமைச்சர் திரு எஸ் தொண்டமான, மத்திய மாகாண முதலமைச்சர் திரு டபிள்யூ பி பி திஸாநாயக்க, கண்டி மேயர் திருமதி சந்திரா ரணராஜா ரிசர்வ பொலீஸ் படை பயிற்சிப் பிரிவு பிரதி பொலீஸ் மா அதிபர் ஜனாப் ஏ வி ஏ கபூர் ஆகியோர் கலந்து கொள்ள இருக்கின்றனர்.

இவாகளோடு மலையக தொழிற்சங்க பிரமுகர்களும கலந்து கொள்வதோடு, பயிற்சியாளர்களின் பெற்றோர்களும கலந்து கொள்வர்.

மலையகத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் பொலீஸ் சேவையில் இந்த பயிற்சியின் பின்னர் வெளியேறும இந்தச் சமபவம வரலாற்ற சிறப்பு மிக்க ஒரு நிகழ்வாகும,

(ம-ந-017)

# மதிய உணவாக சூப் அருந்திய ஜனாதிபதி

செக்கோஸ்லாவாகிய ஜனாதிபதி வக்லாவ்ஹாவல் சமீபத்தில் கனடாவுக்கு விஜயம செய்திருந்த போது தனக்கு அதிகம செலவழிக்க வேண்டியதில்லை என்று கனேடிய அரசாஙகத்தைக் கேட்டுக் கொண்டார்.

வெறும வேண்டுகோளோடு அவர் நின்று விடவில்லை, பகல் உணவுக்கு வெறும சூப் மட்டும தந்தால் போதும என்று சொல்லி சூப் மட்டும அருந்தவும செய்தார்.

அவர் கனேடிய அரசாஙகத்திடமும கனேடிய மக்களிடமும, எனக்கு செலவழிக்க வேண்டாம, பதிலாக செக்கோஸ்லாவாக்கியாவில் ஜனநாயகத்தைத் துளிர்க்கச் செய்யவும நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்தவும உதவ முன்வர வேண்டும என்று கேட்டுக் கொண்டார்.

(த-032)

# மனிதன் தோன்றியது 5 லட்சம் ஆண்டுகளுக்கு முன்

சினாவில் கண்டெடுக்கப்பட்டுள்ள பண்டைய மனிதனின் எஞ்சிய பாகஙகள் மனித வரலாற்றில் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது மனிதன் முப்பது லட்சம ஆண்டுகளுக்கு முன்னர் உலகில் தோன்றியிருக்க வேண்டுமென்பது பொதுவான கணிப்பு,

புதிய கண்டு பிடிப்பு, மேலும ஐந்து லட்சம ஆண்டுகளுக்கு முன்னரே மனிதன் தோன்றியிருக்க வேண்டும என்ற புதிய கோட்பாட்டை முன் வைத்திருக்கிறது,

ஆனால் இச்செய்தியை வெளியிட்டுள்ள சீன செய்தி நிறுவனம வெளியிடவில்லை,

(த-032)

அமெரிக்கக் கௌபோய்த் திரைபபடஙகளில் தோன்றி பயஙகர முரட்டு வில்லன்களையெல்லாம அனாயாசமாகப் பந்தாடி வந்துள்ள நடிகர் கிளின்ட் ஈஸ்ட்வூடுக்கு தன் அழகு மகளின் பின்னாலேயே சுற்றி வரும ஒரு அரைக் கிறுக்கை அடக்குவது பெரும பாடாக இருக்கிறதாம!

கிளின்ட் ஈஸ்ட்வூடின் 21 வயது மகள் அலிசன் "டைட்ரோப்" என்ற ஈஸ்டவூட்டின் திரைபபடத்தில் நடித்தார், ஒரு மனநோயாளியால் கடத்திச் செல்லப்பட்டு அலிசன் சிறை வைக்கப்படுவதாக இப்படத்தில் காண்பிக்கப் படுகிறது.

இததிரைப் படத்தைப் பார்தத இநத இளைஞருக்கு இப்பெண்ணின் மீது அடக்க முடியாத காதல் தோன்றி விடவே அலிசனின் பின்னால் சுற்ற ஆரமபித்து விட்டார்.

ஒருமுறை சுவரேறிக் குதித்து கிளின்ட் ஈஸ்ட்வூட்டின் வீட்டு வளவினுள்ளும இவர் புகுந்து விட்டாராம, வீட்டுக்கு வெளியே டென்ட் ஒன்றை அமைத்துக் கொண்டு அலிசனின் முகம தெரிகிறதா என்று நோட்டம விடவும ஆரமபித்தார்.

கிளின்ட் ஈஸ்ட்வூட்டின் பெக்ஸ் சாதனம வழியாக காதல் கடிதஙகளை அனுப்பவும தொடஙகி விட்டார் என்றால் இவரது ஒரு தலைப்பட்ச காதலின் தீவிரத்தை என்னவென்று சொல்லுவது!

தியlக்ணி ;டிக்ாமேயி ளிச்த்ப்லச

இவ்விளைஞரின் தொல்லை தாங்க முடியாத கிளின்ட் ஈஸ்ட்வூட் ஒரு தடவை உள்ளூர் மதுச்சாலை ஒன்றில் பியர் ருசித்துக் கொண்டிருந்த இக் காதல் கிறுக்கு கொண்ட இளைஞரிடம நேராகவே சென்று எச்சரிக்கை விடுத்தாராம.

தொடர்ந்து என மகளைத் தொந்தரவு செய்தால் நடக்கும சஙகதியே வேறு என்று இவரை மிரட்டினாராம கிளின்ட் ஈஸ்ட்வூட்!

(த-032)

# தமது தோலை தானமாக வழங்கிய வீரர்

வடகொரிய படைவீரர் ஒருவர் கடமையில் ஈடுபட்டிருநத போது தீ விபத்தொன்றில் சிக்கி எரிகாயஙகளுக்கு உள்ளானார், அவரது உடலின் அரைவாசித்தோல் கருகிப் போயிருந்தது, பிழைப்பது மிகவும கடினம என்ற நிலை.

இச்சமயம அவர் சார்ந்த படைப் பிரிவைச் சேர்ந்த வீரர்கள் தன் தோழனைக் காப்பாற்ற முன் வந்தனர், இராணுவ ஜெனரல் ஒருவர் உட்பட சுமார் 500 படை வீரர்கள் தமது தோலின் ஒரு பகுதியையும இரத்தத்தையும தானமாக வழஙகினர் தமது நண்பனின் பொருட்டு.

இத்தோலைப் பயன்படுத்தி டாக்டர்கள் பிளாஸ்டிக் சிகிச்சை மூலம வாழ்வா சாவா என்றிருந்த அந்த வீரரைக் காப்பாற்றினர்.

(த-032)


தமிழ் நூல்களும்

இஸ்லாமிய நூல்களும்

இலங்கையிலும் வெளிநாட்டிலும் அச்சிடப்பட்ட தமிழ் — இஸ்லாமிய நூல்கள் தொடர்பான உங்கள் தேவைகளுக்கு விஜயம் செய்யுங்கள்



எம். டி. குணசேன

அன்ட் கம். லிமிட்.

217. ஒல்கொட் மாவத்தை

கொழும்பு—11

தொலைபேசி- 23981—84.



இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபெண்டன்ட் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 (இலங்கை) தபால் பெட்டி இல 1613 வெளியிட்ட திகதி 18 மார்ச் 1990.

"CHINTAMANI", 5, Gunasena Mawatha, Colom

P.O. Box 1613